# கல்லிலே கலை வண்ணம்




சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடம்



UNIVERSITY
OF MADRAS

# கல்லிலே
# கலை வண்ணம்

## சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடம்

சென்னைப் பல்கலைக்கழகம்
2006

# 150ஆவது ஆண்டு
# ஆவணக் கூட்டுக்குழு 2006

**தலைவர்**

டாக்டர் எஸ்.பி. தியாகராஜன், துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம்

**அமைப்பாளர்**

டாக்டர் ஆனி மேரி ஃபெர்ணாண்டஸ், பதிவாளர், சென்னைப் பல்கலைக்கழகம்

**உறுப்பினர்கள்**

**அச்சுப் பதிப்புக்குழு**

1. எஸ். முத்தையா (தலைவர்)
2. டாக்டர் இ. சுந்தரமூர்த்தி
3. டாக்டர் அரங்க ராமலிங்கம்
4. டாக்டர் சக்தி டி. பெரியாண்டவன்
5. டாக்டர் பி. ஷண்முகம்
6. டாக்டர் ஏ.எம். செல்வராஜ்
7. டாக்டர் சேயோன்
8. டாக்டர் ஜி.பி. கோதனகாந்தி
9. டாக்டர் பி. விஜயலட்சுமி
10. டாக்டர் ஜே. ஜோசஃபின்
11. டாக்டர் சித்ரா கிருஷ்ணன்

**மின்னணுப் பதிப்புக் குழு**

1. டாக்டர் சி.ஜி. ராஜேந்திரபாபு (தலைவர்)
2. டாக்டர் ஜே. ஜோசஃபின்
3. கே. சுந்திரமூர்த்தி
4. டி. பாலாஜி
5. வி. உமா
6. டாக்டர் டி.ஆர். கோபாலகிருஷ்ணன்
7. எஸ். நந்தகுமார்

தமிழாக்கம்: ராணிமைந்தன். சென்னைப் பல்கலைக்கழகத்திற்காக, மெட்ராஸ் எடிட்டோரியல் சர்வீஸஸ், சென்னை 600 017 தயாரித்து, லோகவாணி ஹால்மார்க் பிரஸ் பிரைவேட் லிமிடெட் (122, கிரீம்ஸ் சாலை, சென்னை 600 008) அச்சகத்தால் அச்சிடப்பட்டது.

மறுசீரமைக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத் திறப்பு விழாவின்போது பதிப்பிக்கப்பட்ட இந்த நூல் ஆட்சிப் பேரவை மன்றத்தின் வரலாறு, மற்றும்

# ஆட்சிப் பேரவை மன்றக் கட்டட மறு சீரமைப்புத் திட்டம்

ஆகியவற்றை சுருக்கமாகப் பதிவு செய்திருக்கிறது.

### பணி செயல்பாடு

- சென்னைப் பல்கலைக்கழகம்
- ஆட்சிப் பேரவை மன்றக் கட்டட மறுசீரமைப்பு மற்றும் பராமரிப்பு அறக்கட்டளை
- கலை மற்றும் கலாசாரப் பாரம்பரியத்திற்கான இந்திய தேசிய அறக்கட்டளை – தமிழ்நாடு பிரிவு
- எல் அண்ட் டி – ஈ.ஸி.ஸி. பிரிவு

### பணியில் ஆதரவு

- இந்தியத் தொல்லியல் துறை
- கட்டமைப்புப் பொறியியல் ஆராய்ச்சி மையம்
- தமிழ்நாடு பொதுப் பணித்துறை
- இந்திய அரசு, பல்வேறு அமைப்புகள், நிறுவனங்கள் மற்றும் ஏராளமான நலம் விரும்பிகள்

# முன்னுரை

சென்னைப் பல்கலைக்கழகத்தின் இல்லமாகவும், அதன் முதல் கட்டடமாகவும் 1873லிருந்து விளங்கிய ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடம் இப்போது மீண்டும் மறுபிறவி எடுத்திருக்கிறது. சென்னைப் பல்கலைக்கழகம் கருக்கொண்ட இந்த மறுபிறவி, கலை மற்றும் கலாச்சார பாரம்பரியத்திற்கான இந்திய தேசிய அறக்கட்டளையின் தமிழ்நாடு பிரிவு, லார்ஸன்-டூப்ரோவின் ஈ.சி.சி. பிரிவு, நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள், நலம் விரும்பிகளின் வாழ்த்துகள் ஆகியவற்றால் சாத்தியமாகியிருக்கிறது. இந்த மறுபிறவியின் மூலம் கல்லில் ஒரு கலைவண்ணம் என்று வர்ணிக்கப்படும் ராபர்ட் ஃபெல்லோரியஸ் சிஸ்ஹோம் என்ற மேதையின் கைவண்ணமாகத் திகழும் — ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடம் சென்னைப் பல்கலைக்கழகத்தின் பெருமையாக மீண்டும் மாறியிருக்கிறது. அதே போல (முன்னாள் மெட்ராஸ்) இன்றைய சென்னையின் மிகவும் குறிப்பிடத்தக்க பாரம்பரிய அடையாளச் சின்னங்களில் ஒன்றாகவும் இந்தக் கட்டடம் திகழ்கிறது.

மறுசீரமைக்கப்பட்ட ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்தின் தொடக்க விழாவைக் குறிக்கும் வகையில், 150ஆவது ஆண்டு ஆவணக் கூட்டுக் குழுவின் அச்சுப் பிரிவால் கொண்டுவரப் பட்டிருக்கும் இந்த வண்ணப் பதிப்பு கீழ்க் கண்டவர்களுக்குக் கடமைப்பட்டுள்ளது.

மறுசீரமைப்புப் பணிகளைக் கண்காணித்தவர்களும், இந்நூலுக்கு முக்கியமான குறிப்புகளைத் தந்து உதவியவர்களுமான – இன்டாக், தமிழ்நாடு (Intact-TN) நிறுவனத்தைச் சேர்ந்த கட்டடக்கலைஞர் பி.டி. கிருஷ்ணன், கே. கல்பனா, இன்றைய புகைப்படங்களைத் தந்துதவிய 'இன்டாக்' அமைப்பைச் சேர்ந்த ஜி. விஜயன், எல் அண்ட்டி புகைப்படப் பிரிவு, உஷா கிரிஸ் மற்றும் பழைமை வாய்ந்த புகைப்படங்களைத் தந்துதவிய 'தி ஹிந்து' நாளிதழின் நூலகம், சென்னை வின்ட்டேஜ் விக்னெட்ஸ்

இந்நூலுக்கான ஆராய்ச்சிகளை மேற்கொண்ட வி. சுமித்ரா முத்துகுமார், விவரங்களைத் தொகுத்துத் தந்த ஃபிரெஞ்ச் மொழித் துறையைச் சேர்ந்த டாக்டர் சித்ரா கிருஷ்ணன், இந்த நூலின் ஆசிரியரான வரலாற்றுத் தொகுப்பாளர் எஸ். முத்தையா

இந்த நினைவுத் தொகுப்பைப் கௌரவத் தகுதியில் கண்காணிக்கத் தன்னார்வத்துடன் முன்வந்த மெட்ராஸ் எடிட்டோரியல் சர்விஸஸ்

இந்த ஆங்கிலத் தொகுப்பைத் தமிழில் அருமையாக மொழிபெயர்த்திருக்கும் எழுத்தாளர் ராணிமைந்தன்.

அச்சுக்குப் போகும் முன்பாகச் செயல்பட்டுப் பணியாற்றியவர்கள்

தரம் குறையாமல் இந்நூலை அச்சிட்டு அழகாகப் பிணைத்துத் தந்த லோகவாணி ஹால்மார்க் பிரஸ்.

ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடம் மறுசீரமைக்கப் பட்டிருப்பதை நினைவுகூரும் வகையிலும் அமைவரையும் மகிழ்விக்கும் வகையிலும் புகைப்படத் தொகுப்பாக வெளியாகியுள்ள இந்த நூலுக்காக உழைத்த நல்ல உள்ளங்களுக்கு என் நன்றி.

டாக்டர் எஸ்.பி. தியாகராஜன்
துணை வேந்தர், சென்னைப் பல்கலைக் கழகம்
தலைவர், 150ஆவது ஆண்டு ஆவணக் கூட்டுக் குழு, 2006
சென்னை

ஆகஸ்டு 2006

*Surjit Singh Barnala*

**GOVERNOR**

பாரம்பரியக் கட்டடங்கள் கடந்த காலம் எதிர்காலத்திற்கு வழங்கும் பரிசு. தொன்மையான அந்தச் சிறப்பு எதிர்காலத்திற்கு மரபு வழி செலுத்தப்பட வேண்டும் என்ற அக்கறையுடன் பராமரிக்கப்பட வேண்டும். சென்னைப் பல்கலைக்கழகத்தின் முதல் கட்டடமான, அழகு செறிந்த ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்திற்குப் பலமுறை நான் சென்றிருக்கின்றேன். சமீபத்தில் சென்றிருந்தபோது அதன் சுவர்களின் ஓவியங்களையும் கூரைக்கிதுப்பின்களையும், மர வேலைப்பாடுகளையும், மறுபூச்சுக்கு உள்ளாகியுள்ள சுவர்களின் வண்ணங்களையும், உண்மையான, அர்ப்பணிப்பு உணர்வுடன் கூடிய செயல்பாட்டில் விளைவுகளாக நான் கண்டேன்.

இந்தக் கட்டடம் நமது பாரம்பரியத்தின் பெருமையையும், பாரம்பரியத்தின் எழில் கெடாமல் பாதுகாக்கவேண்டும் என்ற நமது உறுதியையும் பறை சாற்றும் என்று நான் நம்புகிறேன்.

இந்தப் பாரம்பரிய அடையாளச் சின்னத்தின் மறுசீரமைக்கும் பணியில் தங்கள் பங்களிப்பைச் செவ்வனே செய்த துணைவேந்தர், ‘இண்டாக்’ (INTACH) குழுவினர், ஆட்சிப் பேரவை மன்றக் கட்டட அறக்கட்டளை உறுப்பினர்கள், எல் அண்ட் டி மற்றும் அதன் தொழிலாளர்கள், கைவினைக் கலைஞர்கள், பல்கலைக்கழக ஊழியர்கள் மற்றும் ஆய்வாளர்கள் அத்தனை பேரையும் நான் பாராட்டுகிறேன்.

Surjit Singh Barnala

(SURJIT SINGH BARNALA)

Raj Bhavan, Chennai - 600 022, Tamil Nadu, Phone : 22351313, Fax: 22350570



ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்தின் முன்னாள் தோற்றம். (1905) அலங்கார நுழைவாயில் மற்றும் முன்னால் உள்ள விளக்குகள் கவனிப்புக்குரியவை. அவை இப்போது இல்லை.

இங்கிலாந்து நாட்டு வரலாற்றுச் சிறப்புக் கட்டட கவுன்சில் உறுப்பினரும், பிரிட்டிஷ் முன்னணிக் கட்டடக் கலைஞரும், பாரம்பரியப் பாதுகாப்பாளருமான டொனால்ட் இன்சால், 1980-90இல் நலிவுற்றிருந்த பல்கலைக் கழக ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்தைப் (Senate House) பார்த்து விட்டுச் சொன்னார்: "ஆஹா, என்ன அற்புதமான கட்டடம்! சென்னையில் ஒரே ஒரு பாரம்பரியக் கட்டடம் மட்டும் காப்பாற்றப்பட்டு மறு சீரமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும் என்றால் அது அந்தக் கட்டடமாகத்தான் இருக்க வேண்டும்!" இந்தோ-முகமதிய கட்டட வடிவமைப்பில் உருவான இந்த அழகிய கட்டடத்தை அதன் பழைய எழிலுக்குக் கொண்டு வர வேண்டும் என்று பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஓரிரு முயற்சிகள் செயல்படுத்தப்படாமலேயே முடங்கிப் போயின. 2003ஆம் ஆண்டில்தான் சென்னைப் பல்கலைக் கழகத்தின் அந்த முதல் கட்டடத்தை மறுசீரமைப்பு செய்ய வேண்டும் என்ற அர்ப்பணிப்பு உணர்வோடு அதற்கான முயற்சி தொடங்கியது. 1873இல் காணப்பட்ட அதே எழிலுடனும் கம்பீரத்துடனும் கூடிய சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்தை, 2006ஆம் ஆண்டு செப்டம்பர் 5, அன்று பல்கலைக் கழக 150ஆவது ஆண்டு விழாவின்போது மீண்டும் காண முடியும்.

❋ ❋ ❋

செப்டம்பர் 5, 1857 அன்று சென்னைப் பல்கலைக் கழகம் பிறந்தது. அந்த ஆண்டு மிக மோசமான ஆண்டு; மிகச் சிறப்பான ஆண்டும்கூட. அந்த ஆண்டு வட இந்தியாவில் தோன்றிய சிப்பாய்க் கலகம் இந்தியாவிலிருந்து ஆங்கிலேயரை விரட்டிவிடும் என்கிற ஓர் அச்சத்தை அவர்களிடையே தோற்றுவித்து அதனால் அந்தக் கலகம் மிகக் கொடுமையாக அடக்கி ஒடுக்கப்பட்டு அதன் விளைவாக அகில இந்தியாவும் ஆங்கிலேயர் கட்டுப்பாட்டில் வரும் நிலைமை உருவானது. எனினும், இந்திய விடுதலைக்கான போராட்டப் பொறியும் அந்த ஆண்டுதான் கிளம்பியது. நாட்டில் உயர்கல்வி அறிமுகம், கல்கத்தா, பம்பாய், சென்னைப்பல்கலைக் கழகங்களின் தோற்றம் ஆகியவற்றின் மூலம் அந்தப் பொறி ஏற்பட்டது. இந்தியாவை விடுதலைக்கு இட்டுச் சென்றவர்களில் பெரும்பான்மையோர் இந்தப் பல்கலைக் கழகங்களிலிருந்து தோன்றியவர்களே. தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், ஒரிஸ்ஸா, மஹாராஷ்டிரா மாநிலங்களின் சில பகுதிகள் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசம் ஆகியவற்றின் தேவைகளைப் பூர்த்தி செய்ய உருவாக்கப்பட்ட சென்னைப் பல்கலைக் கழகத்தின் தொடக்கம், இந்தியாவில் மிகத் தொன்மையான மேற்கத்திய கல்வி முறையில்தான் அமைந்தது. அயன்புரத்தில் புனித ஜார்ஜ், ஜார்ஜ் டவுனில் புனித மேரி, வேப்பேரியில் புனித பால் போன்ற சென்னைப் பள்ளிகள், 17ஆவது மற்றும் 18ஆவது நூற்றாண்டின் ஆரம்ப ஆண்டுகளில் புராடஸ்டன்ட், ரோமன் கத்தோலிக்க பாதிரியார்களாலும், சமயப் பிரசாரகர்களாலும் தொடங்கப் பட்டவையாகும். அந்தக் கல்வி முறையும், தரப்பட்டு வந்த புத்தறிவுப் பயிற்சியும் போதாது என்று உணர்ந்த ஆளுநர் சர் தாமஸ் மன்றோ மேலும் பொதுவாக்கப்பட்ட கல்வி முறையை இந்திய மாணவர்களுக்கு வழங்கும் பள்ளிக் கட்டடங்களுக்குத் தன்னுடைய ஆதரவை வெளிப்படையாகத் தெரிவித்தார். அந்த மாணவர்களுக்கு உயர் கல்வியின் அடிப் படையைத் தருவதற்காக 1840ஆம் ஆண்டு ஆயத்தப் பள்ளி ஒன்று தொடங்கப்பட்டு அதற்கடுத்த ஆண்டு அது உயர்நிலைப் பள்ளியானது. 1853இல் அந்தப் பள்ளியில் கல்லூரித் துறை ஒன்று சேர்க்கப்பட்டது. 1855இல் அந்தக் கல்வி நிறுவனம் மாநிலக் கல்லூரி என்று பெயரிடப்பட்டது. சட்டப் படிப்பை மேற்கொண்ட மாணவர்களும் அக் கல்லூரியில் படித்தார்கள். கல்லூரிக்கு வெளியே



சிஸ்ஹோம் வடிவமைத்த - மாநிலக் கல்லூரி கட்டடங்கள் 1870-1871இல் இங்கே மாணவர்கள் இடம் பெயர்ந்தார்கள். 20ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் எடுக்கப்பட்ட இந்தப் புகைப்படம், நூற்றாண்டுவிழா குவி மாடம், கடிகாரம் ஆகியவை கட்டடத்தின் மீது அமைக்கப்பட்டதற்கு முன்பு எடுக்கப்பட்டது.

சென்னை மருத்துவக் கல்லூரியும் (1833இல் பள்ளியாகவும் பின்னர் 1851இல் கல்லூரியாகவும் உருவானது) 1794இல் ஒரு சர்வே பள்ளியாகத் தொடங்கப்பட்டு 1861இல் கல்லூரியாக வளர்ந்த சிவில் என்ஜினியரிங் பள்ளியும் இயங்கின. இந்த நிறுவனங்களின் மாணவர்களைச் சோதித்து அவர்களுக்குப் பட்டங்கள் வழங்குவ தற்காகச் சென்னைப் பல்கலைக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது. முதலில் அதன் அலுவலகங்கள் மாநிலக் கல்லூரியில்தான் இருந்தன.

மாநிலக் கல்லூரி வளர்ந்து வந்த நிலையில், தான் எதை நோக்கிப் பயணிக்க வேண்டும் என்று பல்கலைக்கழகமும் சிந்திக்கத் தொடங்கிய நிலையில், 1860ஐ ஒட்டிய ஆண்டுகளில் நிறைய கட்டடங்கள் தேவைப்பட்டன. 1864இல் சென்னை அரசாங்கம் மாநிலக் கல்லூரிக்கு ஒரு கட்டடம், பல்கலைக் கழகத்திற்கு அலுவலகங்களும் தேர்வுக் கூடமும் அமைய ஒரு கட்டடம் என்று இரண்டு கட்டடங்களுக்கான வடிவமைப்புக்கு அகில இந்திய அளவில் போட்டி அறிவிப்பு ஒன்றை விளம்பரம் செய்தது.



ராபர்ட் ஃபெல்லோஸ் சிஷோம்

அப்போதுதான் கல்கத்தாவிற்குப் புதிதாக வந்திருந்த இளம் கட்டட வல்லுநரான ராபர்ட் ஃபெல்லோஸ் சிஷோம் என்பவர் அனுப்பியிருந்த இரண்டு கட்டடங்களுக்கான வடிவமைப்புகளும் போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்டன. சிஷோம் இரண்டு இடங்களிலும் கட்டடங்களைப் பார்வையிடச் சென்னை வந்தார். 1872இல் ஆளுநரின் கட்டட அறிவுரையாளராக அவர் நியமிக்கப் பட்டார். 1886இல் அவர் ஓய்வு பெற்றபோதும் சென்னைக்கு வெளியே இருந்து பணியாற்றினார். சென்னையில் அவர் இருந்த முப்பது வருடங்களில் சென்னைக் கட்டடங்களின் வடிவமைப்பு முறையையே மாற்றியதோடல்லாமல், இந்தோ-முகமதிய கட்டடக் கலை வடிவமைப்பு முறையை இந்தியா முழுவதும் பரப்பினார்.

நூறு ஆண்டுகளுக்கு முன்பாக இந்தோ-முகமதிய கட்டட வடிவமைப்பின் தந்தை என்று கருதப்பட்ட பால் பென்ஃபீல்ட் என்பவரால் கட்டப்பட்ட சேப்பாக்கம் அரண்மனைக்குச் சில சேர்க்கைகளுடன் சிஷோமின் பணி சென்னையில் தொடங்கியது. பின்னர் அந்த அரண்மனையோடு இணைந்த முறையில் பொதுப் பணித் துறைக் கட்டடமும், வருவாய் வாரியக் கட்டடமும் கட்டப் பட்டன. 1867இல் மாநிலக் கல்லூரிக் கட்டடம் உருவான போது அந்தப் பணிகளை சிஷோம் மேற்பார்வையிடத் தொடங்கினார். 1870இல் அந்தக் கட்டடம் எடின்பரோ கோமகன் அவர்களால்

சென்னையில் இந்திய-மொகலாயக் கட்டடக் கலை அமைப்பில் 1768இல் பால் பென் ஃபில்டு அவர்களால் கட்டப்பட்ட சேப்பாக்கம் மாளிகை இடது புறம். 1869இல் சிஸ்ஹோம் இத்துடன் கூடுதலாகக் கட்டிச் சேர்த்த ரெவின்யு கட்டடங்கள்.



திறந்து வைக்கப்பட்டது. அதற்கு ஓராண்டுக்கு முன்பு பல்கலைக் கழகத்தின் கட்டடப் பணிகளை அவர் துவக்கினார். சேப்பாக்கம் அரண்மனை, மற்றும் அதன் பீரங்கிப் பூங்காவின் குறுக்கே கட்டப்பட்ட அந்தக் கட்டடமும்தான் சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிப் பேரவைக் கட்டடம் - செனட் ஹவுஸ் - என்று அழைக்கப்பட்டது.

* * *

கிடைத்தவரையிலான வரலாற்று ஆவணங்களைக் கொண்டு பார்க்கையில், இந்தியாவுக்கான வெளியுறவு அமைச்சர் சர் சி. வுட் அவர்கள், செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் இருந்த ஆளுநருக்கு லண்டனிலிருந்து அனுப்பிய 1864 ஜூலை 23ஆம் தேதியிட்ட கடிதம் எண் 7 வாயிலாக சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்தின் வரலாறு தொடங்குகிறது. பின் வருமாறு குறிப்பிட்டிருந்தார்:

“பல்கலைக் கழகம் மற்றும் மாநிலக் கல்லூரிக் கட்டடங்களை ஒரே மாதிரியான வடிவமைப்பில் கட்டுவது பொருந்தாது என்று ஏற்கெனவே வெளியுறவு அமைச்சர் தெரிவித்த கருத்துக்கு ஒத்துப் போகும் வகையில் சட்டப் பேரவையும் கருத்து தெரிவித்திருப்பதை அடுத்து, சென்ற ஜனவரி மாதம் 11ஆம் தேதியிட்ட பதிவாளர் கடிதத்தில் சட்டப் பேரவை தெரிவித்திருந்த யோசனையின்படி, பொதுக்கல்வி இயக்குநர் தனது 12.8.1863 தேதியிட்ட கடிதத்தில் மாநிலக் கல்லூரி கட்டுவதற்காகப் பரிந்துரைத்திருந்த மார்ஷல்ஸ் சாலையை ஒட்டிய இடத்தில் பல்லைகக் கழகக் கட்டடம் கட்டப்பட வேண்டுமெனவும், சேப்பாக்கத்தில் ஏற்கெனவே முடிவு செய்யப் பட்ட இடத்தில் மாநிலக் கல்லூரி கட்டப்பட வேண்டுமெனவும் ஆளுநரின் உத்தரவு இதன் மூலம் வழங்கப் படுகிறது.”

பல்கலைக்கழகக் கட்டடத்திற்காகப் பரிந்துரை செய்யப்பட்ட இடம் சர்ச்சையைத் தோற்றுவித்ததால் கட்டுமானப் பணிகள்

தொடங்கத் தாமதமாயின. இறுதியில் 1867 நவம்பர் 28ஆம் தேதியிட்ட தன் குறிப்பில் ஆளுநர் நேப்பியர் பிரபு தன் கருத்தை உறுதியாக எழுதியிருந்தார்: "மார்ஷல்ஸ் சாலையில் பரிந்துரைக்கப்பட்ட பகுதி, மாநிலக் கல்லூரி, சிவில் என்ஜினியர்ஸ் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, முக்கியமான பள்ளிகள் மற்றும் மாணவர்களையும் இலக்கிய ஈடுபாடு உள்ளவர்களையும் பெரும் எண்ணிக்கையில் அனுப்பும் குடியிருப்புகளிலிருந்து வெகு தூரத்தில் இருக்கிறது. வெறும் கூடம் அல்லது ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்தோடு பல்கலைக் கழகக் கட்டடம் சுருங்கி விடக்கூடாது. பட்டங்கள் வழங்கப்படுவதோடும், சில அரிய நிகழ்ச்சிகள் நடத்தப் படுவதோடும் பல்லைக் கழகப் பணிகள் முடிந்துவிடப் போவதில்லை. இறுதியில் பேராசிரியர் நியமிக்கப்பட்டு, பல்கலைக் கழக விரிவுரைகளும் இடம்பெறும் என்று எதிர்பார்க்கிறோம். இப்போதேகூடப் பல்கலைக் கழக நூல் நிலையம் தொடங்குவது நல்லது. அது பொது மக்களுக்கான நூல் நிலையமாகவும், விலை மதிப்பற்ற அரசு கையெழுத்துப் பிரதிகளைச் சேகரித்து வைக்கப்பட்டுள்ள இடமாகவும், மாகாணத்தின் முந்தைய, இன்றைய வெளியீடுகளைப் பாதுகாக்கும் இடமாகவும் அது இருக்கலாம். பொதுவாக மாணவர்களுக்கும், குறிப்பாக தென்னிந்தியாவில் கல்வியறிவு கொண்டவர்களுக்கு ஆர்வமூட்டும் இடமாகவும் அது விளங்க வேண்டும். எனவே பல்கலைக் கழகக் கட்டடத்தின் எதிர்காலம் இப்படியெல்லாம் இருக்கக் கூடும் என்ற நிலையில் அதைப் பொருத்தமாகவும், கவர்ச்சிகரமான அம்சங்களோடும், காற்றோட்டமாகவும் கட்ட வேண்டியது அவசியம்.

"அதன்படி கவுன்சிலுக்கு நான் கீழ்க்கண்ட தலைப்புகளில் என் யோசனைகளை முன்மொழிகிறேன்:

(i) மெரைன் வில்லா - ரெவின்யூ போர்டு அலுவலகத்தின் இடைப்பட்ட நிலப் பகுதி பல்கலைக் கழகக் கட்டடத்திற்கு உகந்ததாக இருக்கும்;

(ii) இந்தக் கட்டடப் பணிக்காகக் கல்வி நிதியிலிருந்து ஒரு பகுதியை ஒதுக்கக் கோரி இந்திய அரசுக்கு எழுத வேண்டும்;

(iii) ஏற்கெனவே பல்கலைக் கழகக் கட்டத்திற்காக தான் தயாரித்த வடிவமைப்புகளோடும், இப்போது பரிந்துரைக்கப்பட்ட இடத்தில் அந்தக் கட்டடம் கட்டப்படும்போது மேற்கொள்ள வேண்டிய பொருத்தமான மாறுதல்களைக் கவனத்தில் கொண்டும் திரு சிஷோம் அவர்களைக் கவுன்சிலுக்கு வருமாறு தகவல் அனுப்ப வேண்டும்."

தலைமை ராணுவ அதிகாரி W.A. மெக்லிவெர்டி தனது 30.11.1867 தேதியிட்ட குறிப்பில் மாஷல்ஸ் சாலை தரைப் படையைத் தங்க வைக்கத்தான் உகந்ததே தவிர, பல்கலைக் கழகத்திற்கு அல்ல என்று எழுதியிருந்தார். மாண்புமிகு ஏ.ஜெ. அர்பத்னாட் தனது 5.12.1867 தேதியிட்ட குறிப்பில்,

"மேதகு ஆளுநரின் கருத்துப்படி சென்னைப் பல்கலைக் கழகத்திற்கான ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடம் எழுப்பப்படுவதற்கு உரிய தருணம் வந்து விட்டது. அதற்காக முன்மொழியப்பட்டுள்ள இடம் - அதாவது மெரைன் வில்லாவுக்கும், ரெவின்யு போர்டு அலுவலகத்திற்கும் இடைப்பட்ட, கடற்கரையைப் பார்த்தபடி உள்ள இடம் - மிகப் பொருத்தமானது. கட்டுமானப் பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, ஃப்ரீ சர்ச் ஆஃப் ஸ்காட்லாந்தின் மத்திய நிறுவனம் (அதில் ஏற்கனவே பல்கலைக் கழக நுழைவுரிமை பெற்ற நிறைய மாணவர்கள் இருந்தார்கள்), பிஷப் கோரீஸ் இலக்கணப் பள்ளி, பச்சையப்பன் பள்ளி போன்றவற்றுக்கு அருகாமையில் அமைந்திருக்கிறது. நிதியைப் பொறுத்தவரை 1854 ஆகஸ்ட் 30 தேதியிட்ட இயக்குநர்கள் மன்ற குறிப்பில் பல்கலைக் கழகக் கட்டடம், கல்வித் துறைக்குச் சேர்ந்திருக்கும் நிதியிலிருந்து கட்டடங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து கட்டப்படும் கட்டடங்களில் நன்றாக இருக்க வேண்டும் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்" என்று சுட்டிக் காட்டினார்.

பின்னர் தலைமைச் செயலாளர் ஆர்.எஸ். எல்லிஸ் 17.12.1867 தேதியிட்டு புனித செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலிருந்து உத்தரவு பிறப்பித்தார்:

"சென்னைப் பல்கலைக் கழகத்திற்காக ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்தைக் கட்டும் பணியை விரைவில் தொடங்க வேண்டும் என்ற அரசின் எண்ணத்தைத் துணைவேந்தருக்கும், பல்கலைக் கழக மேதகு ஆளுநரால் நான் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறேன். பட்டங்கள் வழங்கவும், மற்ற அரிய நிகழ்ச்சிகளை நடத்தவுமான கூடம் அல்லது ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடமாக மட்டும் புதிய கட்டடம் இருக்காது."



1905ல் கடற்கரையிலிருந்து செனேட் ஹவுஸ் கட்டடம் மற்றும் பொதுப்பணித்துறைக் கட்டடத்தின் ஒரு தோற்றம். இரண்டையுமே கட்டியவர் சிஷோம். இரண்டுக்கும் இடையே சேப்பாக்கம் மாளிகையும் இப்போது வருவாய் வாரிய அலுவலகம் உள்ள அதன் இணைப்புக் கட்டடமும் பொதுப்பணித்துறைக் கட்டடத்தால் படத்தில் மறைக்கப்படுகின்றன. செனேட் ஹவுஸுக்கு வலதுபுறம் மெரைன் வில்லா.

"இறுதியாக உருவாக்கப்படும் என்று நம்பக்கூடிய பேராசிரியர்கள் பதவிகள் மற்றும் பல்கலைக் கழக விரிவுரைகளுக்காகவும் போதிய இடம் ஒதுக்கப்படும்."

"இந்தப் புதிய கட்டடத்திற்கும், இப்போது கட்டப்பட்டு வரும் மாநிலக் கல்லூரி கட்டடத்திற்கும் இடையே இருக்கும் மூன்று கட்டடங்கள் - ரெவின்யு போர்டு அலுவலகம், சேப்பாக்கம் அரண்மனை, பொதுப்பணித் துறை - இந்த இரண்டு கட்டடங்களால் பிரிக்கப்படும். மேலும் வித்தியாசம் தெரிவதற்காக இவை இரண்டும் ஒரே மாதிரியான வடிவமைப்பில் இல்லாதபடி கட்டடக்கலைஞர் சிஷோம் அவர்களைக் கேட்டுக் கொள்ள வேண்டும். ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்தில் வித்தியாச வடிவமைப்பை அவர் மேற்கொள்ளலாம். இந்த விளக்கம் ஆட்சிப் பேரவை மன்றத்திற்குத் திருப்தியளிக்கும் என்று ஆளுநர் நம்புகிறார். புதிய கட்டடங்களுக்கான இடத் தேர்வுக்குத் துணை வேந்தர் மற்றும் புத்தாய்வு மாணவர்களுக்கு ஆட்சேபணை ஏதும் உண்டா என்பது பற்றி மேதகு ஆளுநருக்குத் தெரிவிக்க வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்."

புதிய இடத் தேர்வு பற்றிய விவரங்கள் ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்தின் முன் வைக்கப்பட்டதாகவும், மேதகு ஆளுநரின் சொற்குறிப்பு ஒரு மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவும் 1868 மார்ச் மாதம் 11ஆம் தேதி தெரிவிக்கப்பட்டது.

சென்னை அரசாங்கத்தின் பொதுப் பணித் துறையின் ஏப்ரல் 24, 1868 தேதியிட்ட கட்டுமானப் பணி பற்றிய 61 இலக்கமிட்ட குறிப்பில், "சென்னையில் ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்திற்கான வரைப்படத்தை அரசாங்கத்திடம் சிஷோம் சமர்ப்பித்திருக்கும் நிலையில், அந்த வரை படத்துடன் ஆட்சிக்குழுவின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படும் நிலையில், கட்டுமானப் பணிகளை விரைவில் துவக்க சிஷோமை கேட்டுக் கொள்ளும்படி நான்காவது பிரிவு கண்காணிப்புப் பொறியாளருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது" என்று தெரிவிக்கப்பட்டது. மாநிலத்தின் எக்ஸிக்யூடிவ் என்ஜினியர் என்ற தகுதியில், அரசு பொதுப் பணித்துறைச் செயலாளருக்கு 30.4.1868 அன்று எழுதிய கடிதத்தில் சிஷோம் பின்வருமாறு குறிப்பிட்டார்: "தங்களது 24.4.1868 கடிதத்தில் பல்கலைக் கழகக் கட்டடத்திற்கான



முன்னால் இருந்த சாலை மண்தரையாக இருந்தபோது 1905இல் எடுக்கப்பட்ட ஆட்சி மன்றப் பேரவைக் கட்டடத்தின் புகைப்படம்.

கட்டுமானப் பணிகளைத் தொடங்கும்படி நான் கேட்டுக் கொள்ளப் பட்ட படி, அடுத்த மாதம் 25ஆம் தேதி அடிக்கல் நாட்டிப் பணிகளைத் தொடங்கும் நிலையில் நான் இப்போது இருப்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.'' இறுதியில் 1869 ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடப்பணி தொடங்கப்பட்டு 1873இல் முடிவடைந்தது.

※ ※ ※

ஆட்சி மன்றப் பேரவைக் கட்டடம் ஒரு நிலவறைக் கட்டடம், தரைதளம், கிரேட் ஹால் என்றழைக்கப்படும் உயர் அறையைக் கொண்ட கூடம், பிரதான நுழைவு மண்டபங்களைக் கொண்ட வடக்கு மற்றும் தெற்குப் பிரிவுகளைக் கொண்டிருக்கிறது.

அந்தக் காலத்தில் சென்னையிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த புகழ் பெற்ற ஆங்கில மாலை நாளிதழான 'தி மெட்ராஸ் மெயில்' ஆட்சி மன்றப் பேரவைக் கட்டடத்தின் தொடக்க விழாவன்று பின்வருமாறு செய்தி வெளியிட்டது:

"இன்று மாலை பட்டமளிப்பு விழாவுடன் தொடங்க இருக்கும் சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிமன்றப் பேரவைக் கட்டடம் இந்து-முகமதியக் கட்டடக் கலை வடிவமைத்தைக் கொண்டது. கையால் எழுதப்பட்டுத் தயாரிக்கப்பட்ட செங்கல் மற்றும் அடுக்குப் பாறை அலங்காரங்களுடன் நடுவில் ஒரு பட்டமளிப்புக் கூடத்துடன் இது அமைந்திருக்கிறது. இந்தக் கூடம் 150 அடி நீளம், 60 அடி அகலம், 50 அடி உயரம் கொண்டது. கூடத்தில் ஒவ்வொரு பக்கத்திலும் மூன்றடி விட்டம், 25 அடி உயரம் கொண்ட



1960களில் கிழக்குத் திசையிலிருந்து பார்க்கும்போது காணப்பட்ட ஆட்சிமன்றப் பேரவைக் கட்டடத்தின் எழில்மிகு தோற்றம்.

பிரம்மாண்டமான கல்தூண்கள் தாங்கி நிற்கும் வில் வளைவு விதானத்துடன் கூடிய வராந்தாக்கள் அழகு செய்கின்றன. கூரை புகழ்மிக்க புரூம்ஹால் ஓடுகளால் வேயப்பட்டிருக்கிறது. மேலும் மிக அழகாக வண்ணம் தீட்டப்பட்ட கித்தான் மூடிய இருபத்தோரு பிரிவுகளாக விதானம் தோற்றமளிக்கிறது.

"கூடத்தின் கீழ்ப் பகுதியின் ஒவ்வொரு பக்கத்திலும் ஏழு ஜன்னல்கள் சூரிய வெளிச்சத்தை தாராளமாகத் தருகின்றன. ஒவ்வொரு ஜன்னலும் 12 அடி அகலமும், 40 அடி உயரம் கொண்டது. மேல் பகுதி கண்ணாடிகள் கொண்டு வடிவியல் சார்ந்த மர வேலைகளைக் கொண்டிருக்கிறது. கூடத்தின் மேல் பகுதியில் 14 ஜன்னல்கள் மூன்று தொகுப்புகளாக அமைக்கப்பட்டிருக்கின்றன. புதுவண்ணச் சாயம் கொண்ட கண்ணாடிகள் வெவ்வேறு வடிவங்களில் ஜன்னல்களுக்கு

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ராணுவ இசைக் குழுவினர் மாலை வேளைகளில் ஆட்சிப் பேரவை மன்றத்துக்கு எதிரே பாண்டு வாத்தியங்கள் இசைத்த அரிய காட்சி.






பக்கிங்காம் கால்வாயிலிருந்து ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்தின் தோற்றம்.

எழில் கூட்டுகின்றன. ஜன்னல்களுக்குள்ளே உள்ள பகுதிகள் வடிவியல் சார்ந்த வடிவங்களில் அலங்கரிக்கப்பட்டுள்ளன. வடக்கு, தெற்குச் சுவர்களில் உட் செதுக்கு வண்ணச் சித்திர வேலைகள் மிளிர்கின்றன. ஸ்கிராஃபிட்டோ என்றழைக்கப்படும் இந்த வகை அலங்காரம், சிஷோமால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்று. போர்ட்லண்ட் சிமெண்ட்டில் மேற்கொள்ளப்படும் வேலைப்பாடு இது. கடினமாக உறுதியாகிவிடும் இது பல்லாண்டுகள் நீடித்து உழைக்கக் கூடியது. கடல் காற்றின் அரிக்கும் தன்மையைத் தாங்கக் கூடியது. கூடத்தின் வடக்கு மூலையில் உள்ள மேடை, விரிவுரைக் கூடத்துக்கும் பொதுவான மேடையாகும். ஒரு வேளை இரண்டும் பிரிக்கப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டிய நிலையில் ஒரு திரையின் மூலம் அந்தப் பிரிவை ஏற்படுத்த முடியும். அப்போது இயன்ற வரை ஓசைப் புலன் அமைப்பு முழுமையாக அமையும். மேடை முனை மணி வடிவில் முன்னால் 48 அடியும், பின்புறம் 24 அடியும் அழகுற அமைக்கப்பட்டிருக்கிறது.

“கூடத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் பொதுமக்களுக்காக இருக்கைகள் கொண்ட படிகள் அமைக்கப்பட்டுள்ளன. நடுவில் ஆயிரம் மாணவர்கள் உட்காரும் வசதி உண்டு. 1500 பேர்களுக்கான இருக்கைகள் இருக்கின்றன. ஆனால் சற்று நெருக்கப் போட்டால்

அதனைப் போலவே இரு மடங்கு எண்ணிக்கையில் மக்கள் அமரலாம். படி இருக்கைகளின் பக்கம் இருக்கும் மேடையும், இருக்கைகளும் எடுத்துச் செல்லத் தக்க வகையில் அமைப்புடையவை. ஆனால் தேர்வு சமயங்களில் அந்த இருக்கைகள் கூடத்தின் கீழே உள்ள நிலவறைக் கூடத்துக்குக் கொண்டு போகப்படும்.

“கட்டடத்தின் தெற்குப் பிரிவான விரிவுரைக் கூடம் 50X40 அடி கொண்டது. பட்டமளிப்பு விழா கூடத்தின் அளவு உயரமானது. இரண்டு அரை வட்ட படி இருக்கைகள் கொண்டது. அவற்றில் ஐநூறு பேர் அமர முடியும். மேல் நுழை மாடம் குதிரை லாட வடிவத்தில், வார்ப்பிருப்புத் தூண்கள் தாங்க வடிவமைப்புக்கு ஏற்றவாறு அமைந்துள்ளன. இரண்டு ஓய்வறைகளும் உண்டு. விதானம் வண்ணப் பகுதிகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றது.

“வடக்குப் பிரிவு மேல்மாடி கொண்டது. தரைத் தளப்பகுதியில் ஒரு பக்கம் நூல் நிலையம், இன்னொரு பக்கம் விரிவுரை அரை, நடுவில் வழி அமைந்துள்ளன. மேல் மாடியில் 58X25 அடி அளவில் ஆட்சி மன்றப் பேரவைக் கூட்ட அறை உள்ளது. அதனுடன் பதிவாளர் அறையும், உடை மாற்றும் அறையும் இணைக்கப்பட்டுள்ளன. பதிவாளர் அறையிலிருந்து நுழையக் கூடிய தென் கிழக்குக் கோபுரத்தில் ஒரு சுழற் படிக்கட்டு வழியே ஆவணங்களுக்கான அலமாரிகள் அமைக்கப்பட்டுள்ளன.

“கிரேட் ஹாலின் கோணங்களில் நான்கு கோபுரங்கள் உள்ளன. இவை படிக்கட்டுகளைக் கொண்டுள்ளன. கீழ்ப்பகுதிகள் நுழைவாயில் மண்டபங்களைக் கொண்டவை. மேலும் இரண்டு நுழைவாயில் மண்டபங்கள், வடக்கு மூலையில் ஒன்றும், தெற்கு மூலையில் ஒன்றுமாக அமைந்துள்ளன. கூரைகள் குவிமாட அமைப்பு கொண்டவை. வடக்கு, தெற்குப் பிரிவுகளின் வெளிப்புறக் கோணங்கள் கூரைக்குச் செல்லும் சுழற்படிகளைக் கொண்டிருக் கின்றன.

“மரச் சாமான்கள் அனைத்தும் சிஷோம் அவர்களால் வடிவமைக்கப்பட்டவை. அவற்றில் பெரும்பாலானவை டெஸ்சாம்ஸ் கம்பெனியால் தயாரிக்கப்பட்டவை. சிஷோம் அவர்களால் சமீபத்தில் இந்நாட்டுக்கு வெற்றிகரமாக அறிமுகப்படுத்தப்பட்ட கண்ணாடி ஓவியங்கள் சென்னை தொழிற் கலைப் பள்ளியில் அவரது தனிப்பட்ட





உள்ளிருந்து பார்க்கும்போது நிலவறை (மேலே) மற்றும் நுழைவாயிலைத் தாங்கி நிற்கும் ஸ்தம்பங்களின் ஒரு தோற்றம். அடுத்த பக்கம், பிரம்மாண்டத் தோற்ற தூண்கள். ‘இந்துமத இயற்கைச் சக்திகளின்’ சிற்பங்களுடனும் வளைவுகளால் பிரிந்து தோன்றும் அவற்றின் தலைப்பகுதிகளுடனும், கிழக்குப் புற நடைபாதையை வரிசையாக அலங்கரிக்கின்றன.

கண்காணிப்பில் தீட்டப்பட்டவை. விதானத்தின் கித்தான் ஓவியங்கள் அங்கே தீட்டப்பட்டவையே.

“மரச் சாமான்கள் உள்ளிட்டு கட்டடத்தின் (பகோடா நிதி மூலம் நிறுவப்பட்டது) மொத்தச் செலவு ரூ. 2,80,000/- மொத்தப் பணியும் உள்ளூர் தொழிலாளர்களாலேயே, உள்ளூர் கண்காணிப்பிலேயே முடிக்கப்பட்டது. குருசாமி முதலியார் பணிகளுக்கான கணக்குகளை எழுதி வந்தார். பாட் மெட்டல் (pot metal) ஜன்னல் கண்ணாடி மட்டுமே இறக்குமதி செய்யப்பட்டது.”

ஆட்சி மன்றப் பேரவையின் மிகக் கவர்ச்சியான அம்சம் கீழ்த் தளத்தில் உள்ள ‘தி கிரேட் ஹால்’. கிழக்கும் மேற்கும் பிரம்மாண்ட பக்கச் சுவர்கள் இதைத் தாங்கிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொன்றும் 7’x5’ கொண்ட அகலமான செங்கல் தூண்கள் வடக்கு, தெற்கு திசைகளில் சுண்ணாம்பு, மணல் கலவைப் பூச்சோடு கட்டப் பட்டுள்ளன. தூண்களுக்கிடையில் அழகான வேலைப்பாடுகளோடு கூடிய கதவுகளும், ஜன்னல்களும் வளைவு அலங்காரத்தில் அமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு கதவுக்கும் மேலே உள்ள வளைவான பெரிய ஜன்னல் மிகவும் நேர்த்தியாக வண்ணச்சாயம் கொண்ட கண்ணாடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூடத்தின் கிழக்கிலும் மேற்கிலும் அகலமான நடைக் கூடம் உள்ளது. ஒவ்வொரு பக்கமும் அழகாகச் செதுக்கப்பட்ட ஆறு பெரிய தூண்கள் கூரையைத் தாங்கிக் கொண்டிருக்கின்றன. தூண்களின் தலைப்பகுதியில் இந்துக்கள் வழிபடும் தெய்வங்கள் மற்றும் மனித உருவங்களும் விலங்குகளின் உருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன. தூண்களுக்கிடையேயான வளைவுகள் மிக அழகாக அமைக்கப்பட்டுள்ளன.

கிரேட் ஹாலுக்குக் கீழே நிறைவறைக் கூடம் உள்ளது. தரைமட்டத்திற்கு 9 அடி கீழே அந்தக் கூடத்தின் தரை அமைக்கப் பட்டுள்ளது. செங்கல் சுவர்களால் அழகுறக் கட்டப்பட்ட கூடம் அது. மர உத்தரங்களும் கூரையைத் தாங்குகின்றன. கூடுதல் செங்கல் தூண்கள் கூடுதல் பலத்துக்காக அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கூடுதல் தூண்கள் ஒரு வேளை பிற்காலத்தில் சேர்க்கப்பட்டிருக்கலாம்.

கட்டடத்தின் கிழக்கு மற்றும் மேற்குப் பக்கங்களில் பக்கத்துக்கு இரண்டாகவும், வடக்கு மற்றும் கிழக்குப் பக்கங்களில் பக்கத்துக்கு





ஒன்றாகவும் மொத்தம் ஆறு மண்டபங்கள் உள்ளன. ஒவ்வொரு மண்டபத்திற்கும் மூன்று பக்கங்களில் பகுதி பகுதியாக வளைவான வழிகள் உண்டு. ஒவ்வொன்றின் கூரையும் சுண்ணாம்பு மணல் கலவை மற்றும் செங்கற்களால் கட்டப்பட்டவை. மண்டபங்கள் ஒவ்வொன்றும் 18 அடி உயரம், 25'X22' அளவு கொண்டவை. இவை அனைத்தின் வழியாகவும் கட்டடத்திற்குள் வர முடியும்.

வடக்குப் பிரிவில் இரண்டு மாடிகள். அலுவலக அறைகள், கழிவறைகள் இருக்கின்றன. தடுப்புச் சுவர்களால் அவை பொருத்தமாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஆட்சிப் பேரவை மன்றக் கூட்ட அறையிலிருந்து கம்பீரமாக இறங்கி வரும் அழகிய மரப் படிக்கட்டுகள் இரண்டாகப் பிரிந்து கிரேட் ஹாலுக்கும், பின்னர் தொடர்ந்து நிலவறைக் கூடத்துக்கும் செல்கின்றன.

வடக்குப்பகுதியில் துணை வேந்தரின் அறையிலிருந்து கீழே இரு பிரிவு களாகப் பிரிந்து செல்லும் அழகிய மரப்படிக் கட்டுகள். எதிர்ப் பக்கத்தில் இடதுபுறம் மறு சீரமைப்பிற்குப் பின் அதன் தோற்றம். வட பகுதியில் துணை வேந்தரின் முதல்மாடி அறைக்குச் செல்லும் அலங்கார நுழைவாயில் - மறு சீரமைப்புக்குப் பின்.







(மேலே) வடக்குப் பகுதியில் முதல் தளத்தில் மறுசீரமைக்கப்பட்ட வெளிப்புற சுவரின் தோற்றமும், ஓர் அலுவலகத்துக்காகப் பிரிக்கப்பட்டுள்ள பகுதியின் தோற்றமும். (வலது) வடக்குப் பகுதியில் துணைவேந்தர் அறையில் கித்தான் கூரை - மறுசீரமைக்கப்பட்டபின்பு.



இடதுபுறம்: மறுசீரமைக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட மர வேலைப் பாடுகள் மற்றும் தெற்குப்பகுதியில் மேடை உள்ளது. வலதுபுறம்: கிரேட் ஹாலின் தெற்குக் கோடியில் மேடையின் பின்புறம் ஒரு சிறிய ஹால் உள்ளது. அங்கு இரும்பி னாலான தூண்களைக் காணலாம்.

தெற்குப் பிரிவில் தரைத் தளத்தில் ஒன்றும், முதல் தளத்தில் ஒன்றுமாக இரண்டு சிறிய கூடங்கள் உள்ளன. குவிமாடத்திலிருந்து படிக்கட்டு முதல் மாடிக்கு அழைத்துச் செல்லும். முதல் மாடியின் தரை எஃகு குறுக்குக் கட்டைகளால் இணைக்கப்பட்ட மரப் பலகைகளைக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரிவின் மேல்தளம் மர இணைப்பு, துத்தநாகத் தகடுகள், மங்களூர் ஓடுகளால் எழிலுற வேயப்பட்டிருக்கிறது.



தென் பகுதியின் முதல் தளத்திலுள்ள மீட்டிங் ஹாலின் மேடையின் மீதுள்ள எழில்மிகு அலங்காரங்கள் சீரமைப்பிற்குப் பின்பு.





கட்டடத்தின் நான்கு மூலைகளிலும் நான்கு கம்பீரமான கோபுரங்கள் உயரே எழும்பியிருக்கின்றன. ஒவ்வொன்றின் மீதும் வெளிப்புறத்தால் அழகாக வண்ணம் தீட்டப்பட்டுள்ள குவி மாடங்கள் அமைந்திருக்கின்றன. அணிநலம் பொருந்திய விதானம், இரும்பு வேலைப்பாடுகள், வண்ண மயமான ஜன்னல் கண்ணாடிகள், அழகுறச் செதுக்கப்பட்ட மர வேலைப்பாடுகள் ஆகியவை ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்திற்கு எழில் மிக்க கம்பீரத் தோற்றத்தைத் தருகின்றன.

தெற்கு நுழைவாயிலின் அருகே, சேப்பாக்கம் அரண்மனையை நோக்கியபடி விக்டோரியா மகாராணியின் பொன்விழா சிலை அமைந்துள்ளது. இது வின்ட்ஸரில் உள்ள போஹிம் சிலையின் அச்சாக அப்படியே அமைக்கப்பட்ட சிலை. 1887 ஜூன் மாதம் இருபதாம் தேதி திறந்து வைக்கப்பட்ட இந்தச் சிலையைச் சென்னைக்கு விஜயநகரம் மகாராஜா பரிசாக வழங்கினார்.

* * *

ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்தில் முதலில் துணை வேந்தர், பதிவாளர் மற்றும் நிர்வாகியின் அலுவலகங்கள் இருந்தன. ஆட்சிப் பேரவை மன்றம், ஆட்சிக் குழுக் கட்டடங்களுக்கும் இது பயன்படுத்தப்பட்டது. பின்னர் பல்கலைக் கழகக் கட்டடத்தில் இடமில்லாததால் சில கல்வித் துறைகளுக்கும் இக் கட்டடம் பயன்படுத்தப்பட்டது. சிறிய இடங்களில், கல்விக் கவுன்சில், மற்றும் பல்வேறு கல்வித் துறை கூட்டங்கள் நடைபெற்றன. பட்டமளிப்பு விழாக்கள், சிறப்பு நிகழ்ச்சிகள் இக் கட்டடத்தின் பிரம்மாண்டமான கூடத்தில் கொத்து விளக்குகள், பீடத்தின்மீது பொருத்தப்பட ராட்சத மின் விசிறிகள் ஆகியவற்றின் அழகுத் தோற்றத்திற்கிடையே நடைபெற்றன.

தெற்கு நுழைவாயிலில் உள்ள விக்டோரியா மகாராணியின் உருவச் சிலை (இடது). இது வின்ட்ஸரில் உள்ள போஹிம் உருவாக்கிய மூலமுல் சிலையின் உருவநேர்ப்படியாகும். (எதிர்ப்புறம்-மேலே) 1937இல் மறுவடிவமைக்கப்பட்ட ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்தில் நடைபெற்ற சென்னை கட்டடப் பேரவைக் கூட்டம். தற்காலிக சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சர் வில்லியம் ரைட், உறுப்பினர்களிடையே உரையாற்றுகிறார். (எதிர்ப்பக்கம்-கீழே) அருமையாக அலங்கரிக்கப்பட்ட கிரேட்ஹால்-நிற்கும் மின்விசிறிகளும், விளக்கு அமைப்புகளும் அந்தக் கூட்டத்தின் மகோன்னதப் பரப்பைப் பறைசாற்றும் காட்சி.

பட்டமளிப்பு விழாக்கள் மட்டுமின்றி, 1937இல் கூட்டப்பட்ட முதல் சென்னை சட்டப் பேரவையின் கூட்டமும் இங்கேதான் நடத்தப்பட்டது. மியூசிக் அகாடமியின் தொடக்க ஆண்டுகளில் அதன் இசை விழாக்கள் நடைபெற்ற இடமும் இதுவே. கண்காட்சிகள், கருத்தரங்கங்கள், மாநாடுகள், அரசு மற்றும் நிறுவனங்களின் விழாக்கள், பிரதான கச்சேரிகள் போன்றவையும் கிரேட் ஹாலில் நடைபெற்றன.







1942இல் மியூசிக் அகாடமியின் 'சதஸ்' நிகழ்ச்சி ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்தில் நடைபெற்றது. படத்தில் இடமிருந்து மூன்றாவதாக பி. சாம்பமூர்த்தி, ஐந்தாவதாக எம். சுதர்ஸனம் அய்யங்கார், ஆறாவதாக டாக்டர் ஏ. லட்சுமண சுவாமி முதலியார், ஏழாவதாக கே.வி. கிருஷ்ணசாமி அய்யர் அமர்ந்திருக்கிறார்கள்.

விஜயநகரத்தைச் சேர்ந்த பிரபல வீணை மேதை வெங்கடரமண தாஸ் (1886-1948) அவர்களின் வீணைக் கச்சேரி இந்தக் கட்டடத்தில் நடைபெற்றபோது பயங்கரமாக இடி இடித்ததாகவும், அந்த வெளிப்புற ஒலி வீணைக் கச்சேரிக்கு இடையூறாக இருக்கக் கூடாது என்பதற்காக அரங்கில் அமர்ந்திருந்தவர்கள் ஓடிப்போய் கதவுகளையும் ஜன்னல்களையும் மூடிவிட்டதைப் பார்த்த தாஸ் 'வேண்டாம். சாத்த வேண்டாம். வெளிப்புற ஒலியை மங்க வைக்கும் ஒலிப் பலம் என் வீணைக்கு உண்டு' என்று கூறி அதே போல வாசித்ததாகவும் அவரது வாழ்க்கை வரலாற்றை எழுதிய பிரபல இசை அறிஞர் பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி அவர்கள் அந்த நூலில் குறிப்பிட்டிருக்கிறார். அது கிரேட் ஹாலின் ஒலியமைப்பு ஏற்பாடு எவ்வளவு அருமையாக அமைக்கப்பட்டிருக்கிறது என்பதற்கும் சான்றாகும்.

மியூஸிக் அகாடமியின் டிசம்பர் இசைவிழா இன்று உலகப் புகழ் பெற்று விட்டது. அதன் ஆரம்ப காலங்களில் இந்தக் கட்டடத்தில்தான் இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கர்நாடக இசையின் வரலாற்றுப் பதிவாளரான ஸ்ரீராம் வெங்கடகிருஷ்ணன்

“சென்னை எஸ்பிளனேட்டில் ஒய்.எம்.சி.ஏ. கட்டடத்தில் 1928 ஆகஸ்டு 18ஆம் தேதி மியூசிக் அகாடமி தொடங்கப்பட்டது. ஆயினும் சென்னைப் பல்கலைக் கழக ஆட்சி மன்றப் பேரவைக் கட்டடத்தில்தான் அகாடமியின் முதல் உறுப்பினர் கமிட்டிக் கூட்டம் 1929 மார்ச்சில் நடைபெற்றது. முதல் ஆண்டு மாநாடு மணி ஐயர் அரங்கில் நடைபெற்று, இனிமேல் ஆண்டு மாநாடுகள் கிறிஸ்துமஸ் வாரத்தில் நடைபெறும் என்று முடிவெடுத்த பிறகு இந்தக் கூட்டம் நடைபெற்றது. எனவே மியூஸிக் அகாடமியின் இசை விழாக்களின் தொடக்க விதை ஊன்றப்பட்டது இந்த ஆட்சி மன்றப் பேரவைக் கட்டடத்தில்தான்,” என்று குறிப்பிட்டுள்ளார்.

இசை, நடனம் போன்ற நிகழ்ச்சிகளுக்கு மிகவும் ஏற்ற கட்டடமாய் இது இருந்திருக்க வேண்டும். மஹா வைத்தியநாதய்யர், பட்டணம் சுப்பிரமணிய அய்யர், குன்றக்குடி கிருஷ்ணய்யர் ஆகியோர் காலத்திலேயே இந்தக் கட்டடம் ஓர் அடையாளச்சின்ன கட்டமாக இருந்திருக்க வேண்டும். ஆனால் 19ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற அந்தக் கச்சேரிகளுக்கான ஆவணக்குறிப்பு ஏதும் எனக்கு இன்னும் கிடைக்கவில்லை. ஒரு வேளை, இந்திய துணை வேந்தர்கள் பொறுப்பேற்ற பின்புதான் அன்னியரல்லாதவர்களின் நிகழ்ச்சிகளுக்கு கிரேட் ஹாலில் இடம் தரப்பட்டிருக்கலாம்.

இசை, நடனத் துறையில் சிறந்து விளங்கியவர்களுக்கும் இந்தக் கட்டடத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. 1932இல் நாட்டியத் தொழிலுக்கு எதிராக இயக்கம் உருவானபோது ஈ. கிருஷ்ணய்யர் மற்றும் மியூஸிக் அகாடமி ஒரு பக்கமும், இன்னொரு பக்கம் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி எதிர்க்கட்சி சார்பிலும் போராடியபோது, 1933இல் கல்யாணி மகள்களின் நாட்டிய நிகழ்ச்சியை பல்கலைக் கழக ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்தில் நடத்த மியூஸிக் அகாடமியை ஒப்புக் கொள்ளச் செய்தார். அந்த நிகழ்ச்சி மாபெரும் பாராட்டையும், வெற்றியையும் பெற்றது. அதன்பின்னர் பாரம்பரிய சதிர் அல்லது பரத நாட்டியம் மறுமலர்ச்சி கண்டது. இந்தக் கட்டடத்தில் நாட்டிய மாமேதை டி. பால சரஸ்வதி நிகழ்ச்சி நடத்தியிருக்கிறார்.

1938 அக்டோபர் 15இல் வீணை தனம்மாள் காலமானபோது தென்னிந்தியா முழுவதும் பல இரங்கல் கூட்டங்கள் நடைபெற்றன. நவம்பர் மூன்றாம் தேதி அவர் மறைவையொட்டி ஆட்சி மன்றப் பேரவைக் கட்டடத்தில் ஒரு சிறப்புக் கூட்டத்துக்கு மியூஸிக் அகாடமி ஏற்பாடு செய்தது. ராஜாஜியும், சத்யமூர்த்தியும் அந்நிகழ்ச்சியில் பிரதான பேச்சாளர்களாகப் பங்கேற்றார்கள்.

1939இல் போர் மேகங்கள் சூழ்ந்திருந்த நிலையில் மியூஸிக் அகாடமியின் வருடாந்திர மாநாடுகள் திறந்த வெளிப் பந்தலில் நடைபெற்றதை அன்றைய சென்னை அரசு விரும்பவில்லை. டி.டி. கிருஷ்ணமாச்சாரி அவர்களின் கணிப்புப்படி இரண்டாயிரத்திற்கும் மேலானவர்கள் கலந்து கொண்டார்கள். இசை பற்றிய விவாதம் என்ற போர்வையில் விடுதலைப் போராட்ட வீரர்களும், புரட்சிக்காரர்களும் கலந்து ஆலோசிக்கக் கூடும் என்று அரசு சந்தேகப்பட்டது. திறந்த வெளியல்லாத மூடப்பட்ட அரங்கில்தான் நிகழ்ச்சிகளை நடத்த வேண்டுமென மியூஸிக் அகாடமி வற்புறுத்தப்பட்டது. பல்கலைக் கழக ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடம்தான் மீண்டும் இசை நிகழ்ச்சிகளின் அரங்கமாயிற்று. 1940இல் இந்தக் கட்டடத்தில் அகாடமியின் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அந்த ஆண்டு கல்லிடைக் குறிச்சி வேதாந்த பாகவதர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திருவாங்கூர் மகாராஜா சித்திரத் திருநாள் பலராம வர்மா தொடங்கி வைத்தார். சதஸ் நிகழ்ச்சிகளுக்கு சர் முகமது உஸ்மான் தலைமை தாங்கினார்.

“1943இல் இந்தக் கட்டடத்தில் மியூஸிக் அகாடமியின் சார்பில் கடைசியாக ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. எஸ். ராஜம் வரைந்த ஸ்வாதித் திருநாள் திருவுருவப் படத் திறப்பு விழா நிகழ்ச்சி அது. பின்னாளில் ஸ்வாதித் திருநாளைப் பிரபலப்படுத்த எந்த வித்வானோ, விதூஷியோ மேற்கொண்ட முயற்சிகளைவிட அதிகமாகத் தனியாளாக நின்று முயற்சிகள் மேற்கொண்ட சேதுபார்வதி பாய் அவர்கள் அப்படத்தைத் திறந்து வைத்தார். அந்த நிகழ்ச்சியில் தான் கௌரவிக்கப்பட்டதை எஸ். ராஜம் நினைவில் கொண்டிருந்தார். அவரது முயற்சிகளுக்காக முப்பது ரூபாய் அவருக்கு வழங்கப்பட்டது. ஆனால் அந்நிகழ்ச்சியில் அணிந்து கொள்வதற்காக 90 ரூபாயில் அவர் ஒரு ஜோடி காலணி வாங்கி விட்டதால் கையில் பணமில்லாமல் போய் விட்டதாம்,” என்று எழுதியுள்ள ஸ்ரீராம் வெங்கடகிருஷ்ணன் பின் வருமாறு முடிக்கிறார்.

“அதன்பின் இந்தக் கட்டடம் கர்நாடக இசைக்காகப் பயன்படுத்தப்படவில்லை. ஆனால் இப்போதைய மறு சீரமைப்புப் பணிகளுக்குப் பின்னர் தன் டிசம்பர் இசை விழாவுக்காக ஏதேனும் ஒரு சபா இங்கே நிகழ்ச்சிகளை நடத்த முன்வரலாம். எதிரொலி வராத ஒலிக் கட்டுப்பாடு, வாகனங்கள் நிறுத்த போதுமான இடம், அருமையான இடம் என்று தஞ்சாவூர் சங்கீத மஹாலைப் போல ரசிகர்கள் இந்தக் கட்டடத்தை எதிர்பார்க்கலாம்.”

* * *






இந்தக் கட்டடத்தில் நடைபெற்ற ஒரு கூட்டம். இண்டியன் சொஸைட்டி ஃபார் இண்டஸ்ட்ரியல் அண்ட் ஃபிஸ்கல் கெனாமிக்ஸ் அமைப்பின் கூட்டம் 1956இல் நடைபெற்ற போது, கூட்டம் (வலது மேலே), விருந்து (வலது) இரண்டும் இங்கேதான் நடைபெற்றன. எதிர்ப்பக்கம்: சென்னைப் பல்கலைக் கழகத்தின் நூற்றாண்டு விழா ஒரு வரலாற்று நிகழ்ச்சி. ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்தின் வெளியே பல்கலைக் கழக ஆட்சிக்குழு உறுப்பினர்கள், மற்ற பல்கலைக்கழகப் பிரதிநிதிகள். நூற்றாண்டு பட்டமளிப்பு விழாவில் கௌரவப் பட்டங்கள் பெற்றவர்கள்.

கடந்த 125 ஆண்டுகளில் இந்தக் கட்டடம் பல்வேறு பயன்பாடுகளுக்குத் தன்னை அனுமதித்திருக்கிறது.

இங்கு நடைபெறும் நிகழ்ச்சிகள் மத உணர்வுகளுக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும் என்பதில் ஆரம்பமுதலே ஒரு தெளிவு இருந்தது. 1884 ஜனவரி 18ஆம் தேதி வெளியான ‘தி மெட்ராஸ் மெயில்’ நாளிதழ் ஒரு பிரச்சினையை எழுப்பியது. அதற்கு முன்பு ஒரு அனாதை இல்லத்திற்கு நிதி திரட்ட ‘விவிலிய பிரசாரத்துக்கான பெண்கள் அமைப்பு’ ஒன்று நிகழ்ச்சிகள் நடத்த இந்தக் கட்டடத்தை அன்றைய பல்கலைக் கழகப் பதிவாளர் டாக்டர் டி. டங்கன் அனுமதித்தார். அப்போதைய துணை வேந்தரான சர் சார்லஸ் டர்னர் அவர்களின் ஆட்சேபணையையும் மீறித் தன் சொந்தப் பொறுப்பில் பதிவாளர் அந்த அனுமதியை வழங்கியிருந்தார். அது பெரிய பிரச்சினையாகி, ‘தியாஸஃபிகல் சொஸைட்டி’ நிகழ்ச்சி ஒன்றுக்கு அனுமதி மறுக்கப்பட்ட இந்தக் கட்டடத்தில் எப்படி கிறித்துவ மதம் தொடர்பான அமைப்பின் நிகழ்ச்சி நடைபெற அனுமதி தரப்பட்டது என்ற விவாதம் எழுந்தபோது ‘கடைசி நேரத்தில், அந்த மகளிர் அமைப்பினர் எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்து விட்டிருந்த நிலையில் அனுமதியை மறுத்து அவர்களைத் தொல்லைக்கு ஆளாக்க வேண்டாம்’ என்ற எண்ணத்தில்தான் அனுமதி தரப்பட்டது என்று பதிவாளர் விளக்கம் அளித்தார். இது பற்றி குறிப்பிட்ட ‘தி மெட்ராஸ் மெயில்,’ “பதிவாளரின் பாதுகாப்பில் உள்ள பொதுக் கட்டடம் அல்ல இது. முன்பின் தெரியாதவர்களால் இந்தக் கட்டடம் பயன்படுத்தப் படும்போது விமர்சனங்கள் எழலாம் என்பது மாதிரி சிறு பொறி தட்டியதுமே பதிவாளர் மிகக் கவனமாக இருந்திருக்க வேண்டும். துணை வேந்தரின் ஆலோசனையைப் பெற்றிருக்க வேண்டும். தன்னிச்சையாகச் செயல்பட்டிருக்கக் கூடாது. இந்த அனுமதியைப் பொறுத்தவரை அவர் செய்த தவறு மன்னிக்கப் படலாம். ஆனால் அந்தத் தவறு மறுபடியும் இனி நேரக் கூடாது. அப்படி நேராமல் இருக்கும் வகையில் ‘இனிமேல் மத கசப்புணர்வை தூண்டிவிடும் நிகழ்ச்சி அல்ல இது’ என்று ஆட்சிப் பேரவை மன்ற உறுப்பினர்கள் கருதும் நிகழ்ச்சிகளுக்கு மட்டுமே இந்தக் கட்டடத்தில் அனுமதி தருவது’ என்ற முடிவு எடுக்கப்பட வேண்டும்,” என்று கருத்துத் தெரிவித்தது. தற்காலத்தில் ‘அரசியல் கசப்புணர்வைத் தூண்டாத’ என்ற நிபந்தனையையும் சேர்த்துக் கொள்ளலாம்.

நூற்றுக்கணக்கான விழாக்கள் இங்கே நடைபெற்றிருக்கின்றன. கோலாகலமான பட்டமளிப்பு விழாக்கள், சட்டப் பேரவைக் கூட்டங்கள், சர்வதேச மாநாடுகள், 1961இல் சென்னையில் இரண்டாம் எலிசபெத் மகாராணிக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு, மியூஸிக் அகாடமி கூட்டங்கள், மிகச் சிறந்த இசை நிகழ்ச்சிகள் என்று பல்வேறு விழாக்களுக்கு இந்தக் கட்டடம் இடமளித்திருக்கிறது.

❋ ❋ ❋



1961இல் சென்னைப் பல்கலைக்கழகம் வழியே இரண்டாம் எலிஸபெத் மகாராணியார் தன் பரிவாரங்களுடன் சென்ற காட்சி. வலதுபுறம் அப்போது கட்டி முடிக்கப்படாத நூற்றாண்டு விழாக் கட்டடத்தைப் பார்க்கலாம். எதிர்ப்பக்கம்: மகாராணி வருகையின் போது கடற்கரைச் சாலையில் கொடிகள் பறக்க, மாணவ பயிற்சிப் படையினர் அணிவகுத்து நிற்க, இக்கட்டட நுழைவாயிலின் மேலே 32 அலங்கார வளைவின் ஊடே தெரியும் காட்சி.











எதிர்ப்பக்கம்: 1961இல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இரண்டாம் எலிஸபெத் மகாராணியரும், இளவரசர் ஃபிலிப்பும். மகாராணியார் முறைப்படி அழைத்துச் செல்லப் படுகிறார். பின்னர் துணைவேந்தர் டாக்டர் ஏ.எல். முதலியார் அவர்கள் அங்கு கூடியிருந்த மதிப்பிற்குரிய விருந்தினர்களை அறிமுகம்செய்து வைத்தார்.

(வலது) ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்தில் மகாராணியாருக்காக அமைக்கப்பட்டிருந்த மேடை (கீழே) மகாராணியார் விருந்தினர்களை வாழ்த்துகிறார். (எதிர்ப்பக்கம்) அந்த நிகழ்ச்சிக்காக விளக்கொளியில் ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடம்.







(கீழே) இந்தக் கட்டடத்தில் நடைபெற்ற தேநீர் விருந்துக்கு மகாராணியார் தலைமை தாங்கிய காட்சி. (எதிர்ப்பக்கம்) புறக்கணிக்கப்பட்ட நிலையில் இருந்த இந்தக்கட்டடம், பாரம்பரிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், இந்தக்கட்டத்தின் நிலையை எடுத்துச் சொல்லவும் இன்டாக் (INTACT) ஏற்பாடு செய்து 2000களின் தொடக்கத்தில் நடைபெற்ற குழந்தைகள் கண்காட்சிக்குப் பயன்படுத்தப்பட்டது.



1960-70 பிற்பகுதியில் பல்கலைக் கழக நூற்றாண்டு விழாக் கட்டடமும் நூற்றாண்டு விழா அரங்கும் தொடங்கப்பட்ட பின்னர் ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்தின் மீதான கவனமும், அக்கறையும் குறைந்து போனது. கட்டடம் நலிவுறத் தொடங்கியது. எனினும் கட்டட அமைப்பு முறை பலமாக இருப்பதால் முன்பிருந்த அதே பொலிவுக்கு அதை மீண்டும் கொண்டு வருவது சாத்தியமே. 2003இல் டாக்டர் எஸ்.பி. தியாகராஜன் துணைவேந்தராகப் பொறுப்பேற்றபின் அந்த சாத்தியத்துக்கான முயற்சிகள் 2006-07இல் சென்னைப் பல்கலைக் கழக 150ஆவது ஆண்டு விழா கொண்டாட்டங்கள் திட்டமிடப்பட்டபோது மேற்கொள்ளப்பட்டன.



1878ல் எழுதப்பட்ட கீழ்க்கண்ட கடிதத்தின் மூலம், ஆட்சி மன்றப் பேரவை மன்றக் கட்டடத்தின் மீதான பராமரிப்பு அக்கறை பலநாட்களாகவே கவலைக்குரியதாக இருந்ததை உணர முடியும்.

"சென்னை காவல்துறை ஆணையர் (பொறுப்பு) மேஜர் ஏ. அவர்களிடமிருந்து, காவல்துறை உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு அனுப்பப்பட்ட 22.4.1878 தேதியிட்ட (எண்: 92) கடிதம்:

"இத்துடன் இணைக்கப்பட்ட கடிதத்தில் தாங்கள் தந்துள்ள ஒப்புதல் குறிப்பு தொடர்பாக, சேப்பாக்கத்தில் உள்ள அரசு கட்டடங்களை - சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடம் உட்பட - பார்த்துக் கொள்ள எந்த போலிஸ் காவலரும் குறிப்பிட்டு அனுப்பப்படவில்லை என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். இரவு நேர ரோந்துப் பணியில் ஈடுபடுத்தப்படும் காவலர்கள் கட்டடங்களின்மீது பொதுவான பார்வையைச் செலுத்துகிறார்கள்."

## அதன் மீதான உத்தரவு - (15.5.1878)

21.4.1878 தேதியிட்ட (கடித எண் 147) பதிவாளரின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி மேலும் கூடுதல் பணியாளர்களை நியமிக்க ஆளுநர் தயாராக இல்லை. ஆனால் ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்திற்கு இரவும் பகலும் கண்காணிப்பு தேவை என்பதால் இரண்டுபேரைப் பணியில் அமர்த்த ஒப்புதல் வழங்கப்படுகிறது. இதன் மூலம் பதிவாளர் அலுவலக மாதச் செலவு 404 ரூபாயிலிருந்து 425 ரூபாயாக உயரும். இந்தச் செலவை மாகாண நிதியிலிருந்து ஏற்க வேண்டும்.

இந்த இருவரையும் இரவு பகல் என்று ஒதுக்கி அதற்கான பணி ஒதுக்கீடு பதிவேட்டைப் பதிவாளர் அமைக்க வேண்டும்.

தலைமைச் செயலாளர்

"பல்கலைக் கழகப் பதிவாளருக்கு
பொதுக் கல்வி இயக்குநருக்கு
அக்கவுண்டன்ட் ஜெனரலுக்கு
காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு."

2003ஆம் ஆண்டில் டாக்டர் எஸ்.பி. தியாகராஜன்



புறக்கணிப்பு சென்னையின் அடையாளச் சின்னங்களில் ஒன்றை மேலும் மோசமாக்கியது. ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்தின் மறுசீரமைப்புக் பணிகள் 2004இல் தொடங்கப்பட்டதற்கு முன்னால் அதன் வெளிப்புறத்தோற்றம் (மேலே) மற்றும் கிரேட் ஹாலின் (எதிர்ப்பக்கம்) தோற்றம்.



அவர்கள் துணைவேந்தராகப் பொறுப்பேற்றதும் பல்கலைக் கழகத்திற்கான தனது திட்டப் பார்வையை அறிவித்தார். பத்து இலக்குகளை அவர் நிர்ணயித்தார். ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்தை மறு சீரமைப்பு அந்த இலக்குகளில் ஒன்று. அதை 150ஆவது ஆண்டு விழாவுக்குள் உரிய நேரத்தில் முடிக்க வேண்டும். அந்தக் கட்டடத்தை மீண்டும் அதன் மூல அழகுக்கும், கட்டட வடிவமைப்பு நேர்த்திக்கும் இணையாகச் சர்வதேச அளவில் ஒப்புக் கொள்ளப்பட்ட பாதுகாப்பு தர நிர்ணய விதிகளின்படி கொண்டு வருவதற்காக, பழம்பெரும் கட்டடங்களைப் பாதுகாக்கும் கட்டடக் கலைஞர்கள், பொறியாளர்கள், கைவினைக் கலைஞர்கள் ஆகியோரைக் கலை மற்றும் கலாசாரப் பாரம்பரியத்திற்கான தேசிய அறக்கட்டளை, இந்திய தொல்லியல் துறை, மத்திய கட்டுமானப் பொறியியல் ஆய்வு மையம், பொதுப் பணித் துறை ஆகியவற்றிலிருந்து தேர்வு செய்து அவர்களைக் கொண்ட ஒரு நிபுணர் குழுவை அமைத்தார். கட்டட மறுசீரமைப்புக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டன. அத்திட்டங்கள் 2004இல் செயல்படத் தொடங்கின. முக்கியமான பணிகளான கூரை சீரமைப்பு, நீர்காப்புப் பணிகள் (Water Proofing) 56 லட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டன. கூடவே சென்னையின் மிகக் கம்பீரமான குறிப்பிடத்தக்க அடையாளக் கட்டடமான இந்தக் கட்டட மறுசீரமைப்புப் பணிகளுக்காக மனமுவந்து நிதியுதவி அளிக்குமாறு தன் முன்னாள் மாணவ மாணவியர், பாரம்பரிய பாதுகாப்பு நிறுவனங்கள், தொழிற்கூடங்கள், தர்மசிந்தனையாளர்கள், பல்கலைக் கழகத்துடன் இணைந்த நிறுவனங்களின் நிர்வாகம், மாணவர்கள், பொதுமக்களுக்கு பல்கலைக்கழகம் கோரிக்கை விடுத்தது.

இந்த நிதியுதவியைப் பெறவும், கட்டடச் சீரமைப்புப் பணிகளைக் கண்காணித்துப் பின்னர் இந்தக் கட்டடத்தை நிர்வகிக்கவும், ஒரு புதுமையான தனியார் துறை பல்கலைக் கழக கூட்டமைப்பை உருவாக்க டாக்டர் தியாகராஜனும், ஆட்சிக்குழுவினரும் ஒப்புக் கொண்டார்கள். அதற்கு 'ஆட்சிப் பேரவை மன்றக் கட்டட அறக்கட்டளை' என்று பெயரிடப்பட்டது.

துணை வேந்தரைத் தலைவராகக் கொண்டிருக்கும் இந்த அறக்கட்டளையில் உயர்கல்வித் துறை, ஆட்சிப் பேரவை மன்றம், ஆட்சிக் குழு ஆகியவற்றிலிருந்து ஒவ்வொருவர் என்று பல்கலைக் கழகம் நியமிக்கும் மூவர், மேலும் மூன்று தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் சார்பில் மூவர் உறுப்பினர்களாக உள்ளனர். இந்தத் தொண்டு நிறுவனங்கள் இந்தக் கட்டடத்தின் மறுசீரமைப்புப் பணிக்காகப் பெரிதும் உதவிய நிறுவனங்கள். வெலிங்டன் தரும அறக் கட்டளை (மிகப் பெரும் தொகையை இப்பணிக்காக இந்த அறக்கட்டளை வழங்கியுள்ளது), கலை, கலாச்சார பாரம்பரியத்துக்கான தேசிய அறக்கட்டளையின் தமிழ்நாடு பிரிவு (இந்தக் கட்டடத்தை மறுசீரமைக்க எது சிறந்த வழி என்று காட்டிட இருபது ஆண்டுகளாக அறிவுரை சொல்லி வந்த அறக்கட்டளை இது); மெட்ராஸ் மியூஸிங்ஸ் என்ற பத்திரிகையை நடத்தும் சென்னை ஹெரிடேஜ் (இந்தப் பத்திரிகை பதினைந்து ஆண்டுகளாக பல்கலைக் கழகம் மற்றும் அதன் ஆட்சிப் ரேவை மன்றக் கட்டடத்தின் பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியும், அடையாளச் சின்னமாக விளங்கும் இந்தக் கட்டடத்தை மறுசீரமைத்து அதை மீண்டும் பயன்படுத்துவது குறித்துப் பிரசாரம் செய்து வருகிறது) ஆகியவை அந்த மூன்று நிறுவனங்கள். பணியை முடிக்கத் தேவையான ஏழரை கோடி ரூபாயை வசூலிப்பதும், மேலும் அதன் பின்னர் கட்டடத்தை நிர்வகிக்கவும், பராமரிக்கவும் தொகுப்பு நிதியாக ஒன்றரை கோடி ரூபாயும் சேர்க்க வேண்டும் என்பதே அந்த அறக்கட்டளையின் இப்போதைய முக்கிய நோக்கமாக இருக்கிறது. இந்த வரிகள் அச்சுக்குப் போகும் வேளையில் இந்த இலக்கில் 75 சதவீதம் அடையப்பட்டிருக்கும்.

மறு சீரமைப்புப் பணியின் பத்து அம்ச தொழில்நுட்பத் தொகுப்பை நிறைவேற்ற ஒரு தொழில்நுட்பக் குழுவைத் துணைவேந்தர் அமைத்தார். அதன் தலைவராக முன்னணி கட்டடக் கலை வல்லுநரும் INTACH, தமிழ்நாடு பிரிவின் அமைப்பின் அமைப்பாளருமான பி.டி. கிருஷ்ணன் நியமிக்கப்பட்டார். அக்குழுவின் மற்ற உறுப்பினர்கள் பின் வருமாறு: ச. ராமச்சந்திரன் -- சிறப்புத் தலைமைப் பொறியாளர் (PWD) ஓய்வு; ச. சிவராமன் -- முதன்மைப் பொறியாளர், (PWD) ஓய்வு; ர. அம்பலவாணன் -- பேராசிரியர், சிவில் பொறியியல் துறை, (IIT சென்னை) ஓய்வு; ப. நரசிம்மையா -- தொல்பொருள் ஆராய்ச்சித்துறைக் கண்காணிப்பாளர் ஓய்வு

**அந்தத் தொழில் நுட்ப அம்சங்கள்:**

1. கூரையை மீண்டும் வேய்தலும், நீர் புகா வண்ணம் பாதுகாத்தலும்
2. செங்கல் கட்டடப் பகுதியைப் பாதுகாத்தல்





ஆட்சிப் பேரவை மன்றத்தில் அதன் வளைவுகளில் (வலது, மேலே) தூபிகளிலும் (வலது) காணப்படும் மொகலாயச் செல்வாக்கு.

3. கோபுரங்கள் மற்றும் குவி மாடங்களை மறுசீரமைத்தல்
4. கல் வேலை கட்டுமானப் பகுதியை சீரமைத்தல்
5. மர வேலை வண்ணக்கலவை கண்ணாடிகளைப் புதுப்பித்தல்
6. சுண்ணாம்பு பூச்சு, சுவர்க்கோல ஓவியங்களைப் புதுப்பித்தல்
7. விதானத்தில் கித்தான் ஓவியங்கள் மற்றும் இதரப் பணிகள்
8. வார்ப்பு இரும்பு வேலி, அலங்காரங்கள், புல்வெளிகள்
9. தேவை வசதிகள், இதர சேவைகள்; மற்றும்
10. சரித்திரபூர்வமான பொருத்தமான உள் அலங்காரம்.

அதையடுத்துக் கீழ்க்கண்டவற்றுக்காக இத்தொகுப்பு விரிவு படுத்தப்பட்டது:

(a) கிரேட் ஹாலின் மேற்குப் பகுதியில் பூமிக்குக் கீழ் தனியான ஓர் ஒப்பனை வசதிக் கட்டடம், மற்றும்
(b) நிலச் சீரமைப்பும் வெளிப்புற ஒளி ஏற்பாடுகளும்.

செப்டம்பர் 2006இல் கிரேட் ஹால் மற்றும் செனட் ஹவுஸ் ஆகியவற்றின் மறு ஆரம்ப விழா நிகழ்ச்சியை ஒட்டி இப்புத்தகம் வெளியிடப்பட விருக்கும் தருணத்தில், ஓரிரண்டு கோபுரங்கள் மற்றும் சில இறுதி வேலைகளைத் தவிர, நிதி நெருக்கடி தொடர்ந்து நீடித்தாலும் கூட, மற்ற மறு சீரமைப்புப் பணிகள் முழுமையாக நிறைவேறி இருக்கும்.

பி.டி. கிருஷ்ணன் அவர்களும், இங்கிலாந்தில் யார்க் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்ற பாதுகாப்பாளருமான கே. கல்பனா அவர்களும் பொதுப் பணித் துறை, பல்கலைக் கழகப் பொறியாளர்கள் மற்றும் லார்ஸன் அண்ட் டூப்ரோ நிறுவன பொறியியல் குழுவோடு இணைந்து தங்கள் சேவைகளை வழங்க தன்னார்வத்தோடு முன் வந்திருக்கின்றனர். இந்த அசாதாரணமான பாரம்பரியக் கட்டட மறு சீரமைப்புப் பணி செயல்படுவதை அவர்கள் மேற்பார்வை யிடுவார்கள்.

இந்த இரண்டு INTACH-TN கட்டடக் கலை வல்லுநர்களும், ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்துக்கான வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்திருக்கிறார்கள். அவர்கள் தங்களின் இந்தத் திட்டப் பணி குறித்துக் கீழ்க் காணும் வரிகளில் விளக்குகிறார்கள்:

“17ஆம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில் காலனி ஆதிக்க நாடுகளின் கட்டடங்கள், பண்பட்ட வடிவமைப்பில் அமைந்தன. இது பற்றி தாமஸ் ஆர். மெட்காஃபே என்ற எழுத்தாளர் ‘இந்தியாவில் பிரிட்டிஷ் கட்டடக் கலை’ என்ற தலைப்பில் எழுதியபோது, அந்தக்



கட்டடங்கள் எந்த நாட்டில் இங்கிலாந்து அரசு தன் காலை ஊன்றுகிறதோ அந்நாட்டின் கலாசாரத்தைப் பிரதிநிதித்துவம் செய்வதாக இருந்தன என்று குறிப்பிட்டார். 1857க்குப் பிறகு ஆங்கிலேய அரசு கட்டிய கட்டடங்கள் தன்னுடைய நாட்டுப் பாணியில் அமையாமல், உள்ளூர் மக்கள் பாராட்டக்கூடிய வடிவமைப்பில் இருக்க வேண்டும் என்பதை அதிகாரபூர்வமான ஆனால் எழுதப்படாததொரு சம்பிரதாயமாக அது கடைப்பிடித்தது. இந்தியாவில் இந்து, மொகலாய வடிவமைப்பு பிரபலமாக இருந்தது. 'ஒரு கம்பீரத் தோற்றம்: இந்திய கட்டடக் கலையும் பிரிட்டிஷ் அரசும்' என்ற நூலில் கட்டட வடிவமைப்பு பிரிட்டனிலிருந்து இறக்குமதி செய்யப்படுவது என்று மட்டுமே கருதுவது முறையல்ல என்றும் மாறாக உள்ளூர் பாணிகள், உள்ளூர் கட்டடக் கலையின் செல்வாக்கு, இந்தியாவைப் பொறுத்தவரை பெரும்பாலும் ஹிந்து மற்றும் இஸ்லாமியப் பாணி கட்டடக் கலை நிபுணரின் அறிவு மற்றும் அவரது படைப்பாற்றல், உள்ளூர் கட்டடப் பொருட்கள் ஆகியவற்றின் கலவையாக அது இருக்க வேண்டும் என்றும் அந்த நூலின் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடம் அத்தகைய ஒன்றிணைந்த கட்டடக் கலைப் படைப்பின் சிறப்பான உதாரணங்களில் ஒன்றாக விளங்குகிறது.

இஸ்லாமியப் பாணியைக் கட்டடத்தின் வளைவுகளிலும், குவி மாடங்களிலும் காணலாம். பெரிய இடத்தை மூடவும், மூடப்பட்ட பெரிய இடத்தை உருவாக்கவும் வட்டக் கட்டுமான முறை பயன்படுத்தப்பட்டது. இந்தக் கட்டடத்தைப் பொறுத்தவரை புகுமுக மண்டபம், வராந்தாக்களில் இந்த முறை கையாளப்பட்டிருக்கிறது. கீழை ரோமப் பேரரசுக்கால

பல்வகைப் பாணிகளின் கூட்டு. (இடது) ஆட்சிப் பேரவை மன்றத்தின் உச்சியில் காணப்படும் இஸ்மாமிய அம்சங்கள் (வலது) கல்தூண்களிலும், உருவப்படங்களிலும் காணப்படும் ஹிந்து செல்வாக்கு.












(இடது) இந்தக் கட்டடத்தில் உருவப்படங்களில் காணப்படும் ஹிந்து அம்சங்கள் ....... (மேலே) மிகவும் பழுதடைந்து விட்ட கல் அம்சம் ஒன்றை மீண்டும் நிறுவுதல்.

கட்டட முறைப்படியான கலாசார வளைவுகளில் இஸ்லாமியக் கட்டடக் கலையின் செல்வாக்கைக் காணமுடிகிறது. கோடுகள் அடங்கிய கல் தூண்களில் இந்து கட்டடக் கலையின் அம்சங்கள் வெளிப்படுகின்றன. தூண்களின் உச்சியில் ஹிந்துக் கடவுளர்களின் ஏராளமான உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அதே போல சுவர்களிலிருந்து வெளியே நீட்டிக் கொண்டிருக்கும் பகுதிகளில் சதுர வடிவ அலங்காரங்களிலும் அவை காணப்படுகின்றன. அருகே உள்ள மரப் பின்னல் தட்டிகளின் அமைப்பு இங்கிலாந்தில் விக்டோரியா காலத்துத் தேவாலயங்களில் காணப்படுவது போல் உள்ளது. நுழைவாயில் மண்டபங்களும், கிரேட் ஹாலின் தேவாலயம் போன்ற அமைப்பும் ஐரோப்பிய செல்வாக்கை வெளிப்படுத்துகின்றன. ஒரு வேயப்பட்ட விஸ்தாரமான கூரை அமைப்பு கன மழை பொழியக்கூடிய ஐரோப்பிய, ஆசிய நாடுகளில் பொதுவாகக் காணப்படும் ஒன்று.

அரசு உத்தரவுகளில் காணப்பட்ட பல்வேறு அம்சங்கள் காரணமாக இந்தக் கட்டடத்தைக் கட்டி முடிக்க நீண்ட காலம் பிடித்தது. கட்டுமானப் பொருட்கள் கிடைக்காததுதான் காரணம் என்று அடிக்கடி சொல்லப்பட்டது.

பெரிய கட்டடத்தின் பிரதான கட்டுமானம் ஐரோப்பிய முறையில் - நிலவறைக்கு மேல் ஒரு தளம் என்ற வகையில் கட்டப்பட்டுள்ளது.

இது மாதிரியான ஒரு கட்டடத்துக்கு முன்மாதிரி உள்ளூர் அளவிலோ தேசிய அளவிலோ இருந்ததில்லை. நிறைய கட்டுமானப் பரிசோதனைகள் முயற்சி செய்யப்பட்டிருப்பதிலும் சந்தேகமில்லை. பல்கலைக் கழக ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடம் கட்டப்பட்டதில் ஆங்கிலேய நடைமுறை பொறியியல் அறிவும், தென்னிந்திய கட்டடப் பழக்கங்களும் சரியாகக் கையாளப்பட்டிருக்கின்றன. இக் கட்டடத்தின் சிறப்பு அம்சங்களில் சில கீழ்க்கண்டவாறு:

— கிரேட் ஹால் மற்றும் மேல் மாடியில் இதர அரங்குகள் முழுவதும் பிரம்மாண்ட மரச் சட்டங்கள்.

— வளைவுக் கூரைகள் மற்றும் உச்சி மாடங்களுக்குப் பிரத்தியேக கூரை அமைப்பு மற்றும் சிறிய அறைகள், வராந்தாக்கள் ஆகியவற்றுக்கு மதராஸ் மேற்கூரை.

— உச்சி மாடங்கள் மற்றும் வளைவுகளுடன், பைஸான்டைன் படைப்பின் உயரமான நான்கு கோபுரங்களின் உருவமைப்பு.

— கல் செங்கல் மற்றும் பெரிய அளவு மரம் ஆகியவை கலந்து தயாரிக்கப்பட்ட ஜன்னல்கள்.

கட்டுமானப் பணிகள் முடிந்ததும், கட்டடத்துக்கு ஒப்பனை கூட்டி அழகுபடுத்துவதொன்றே முக்கியப் பணியாக இருந்தது. மற்ற கட்டடங்களிலிருந்து புதுமையாகவும் மாறுபட்டதாகவும் அதைக் காண்பிக்கும்விதத்தில் அந்தப் பணி மேற்கொள்ளப்பட்டது.

இந்தக் கட்டடம் மறு சீரமைப்பு செய்யப்பட்டதன் மூலம் காலப் போக்கில் மறக்கப்பட்டுவிட்ட கட்டடக் கலையின் பல நுட்பங்கள் மீண்டும் வெளியாயின. மங்கிவிட்ட கட்டுமானத் தொழில் நுட்பங்கள், கைவினைக் கலைஞர்களின் மடிந்து விட்ட அல்லது மடிந்து கொண்டிருக்கும் திறமைகள், பழமையாகிவிட்ட கட்டட வடிவமைப்புப் பாணிகள் எல்லாம், பாரம்பரியப் பெருமை வாய்ந்த சின்னங்களைப் பாதுகாக்கும் வல்லுநர்களின் கண்களைத் திறந்து விட்டன. 'அமைதியாகக் கவனித்துக் கொண்டிருக்கப் பொறுமை மட்டும் இருந்தால் இறுதியில் கட்டடம் உங்களிடத்தில் பேசும்' என்று பாரம்பரியச் சின்னங்களைப் பாதுகாக்கும் வட்டங்களில் வெகு காலமாகச் சொல்லப்படுவதுண்டு. 'ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடம் அதற்கு ஒரு சான்று' என்கிறார் பாரம்பரியப் பாதுகாப்பாளரும், கட்டடக் கலை வல்லுநருமான கே. கல்பனா. மறு சீரமைப்புப் பணியில் ஈடுபட்ட குழுவினருக்குத் தோன்றிய பல கேள்விகளுக்குத் தேவையான பதில்களை அந்தக் கட்டடமே கொடுத்தது. சில பதில்கள் கிடைக்கக் கால தாமதமாயின. அதுவும் அபாரத உழைப்பு, தவறான ஆரம்பம், பரிசோதனைகள், மறந்துவிட்ட தொழில்நுட்பம் போன்றவைதான் விடை கண்டு பிடிக்கக் காரணமாயின. இறுதியில் பல கண்டுபிடிப்புகள் உருவாயின. மெதுவாக அந்தக் கட்டடம் புத்துயிர் பெற்று, தனது பழைய கம்பீரத்தைப் பெற்றது.

அந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க கட்டடத்தை ஏப்படிப் பாதுகாப்பது என்பதைக் கண்டறிவதுதான் முதல் பணியாக இருந்தது. ஆரம்ப நிலைச் சோதனைகள் கட்டடம் உறுதியாக இருப்பதை உறுதி செய்தன. ஆனால் கோபுரங்கள் மிகவும் பலவீனமாகி, ஆழமான வெடிப்புகள் கண்ணுக்குத் தெரிந்தன. மர வேலைகள் கொஞ்சம்கூட பழுதாகாமல், பலவீனமடையாமல் இருந்தன. மிக உயர்தர பர்மா தேக்கு மரம் அப்போது பயன்படுத்தப்பட்டதால் இதில் வியப்பொன்றும் இல்லை.

உட்பக்கம் மேலும் சிதிலமடையாமல் தடுக்க உடனடியாகக் கூரையைப் பழுது பார்க்க வேண்டியிருந்தது. பயன்படுத்தப்பட்டிருந்த ஓடுகளில் கிட்டத்தட்ட எண்பது சதவீத ஓடுகள் மீண்டும் பயன்படுத்தப்படக்கூடிய நிலையில் இருந்தன. இந்த ஓடுகள் 1869இல் மலபாரில் பேஸெல் மிஷனால் தயாரிக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. ஓடுகளுக்கும், மரச் சட்ட வேலைகளுக்கும், அவை துருப்பிடிக்காமல் இருக்க துத்தநாகப் பூச்சு பூசப்பட்ட இரும்புத் தகடுகள் சரிவில் வட்டவடிவில் பொருத்தப்பட்டன. தண்ணீர் அதன் மீது தங்காது அந்தத் தகடுகளை மாற்றியாக வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பெரிய கட்டட நிறுவனமான லார்ஸன் அண்ட் டூப்ரோ-ஈசிசி பழைய தகடுகளை அப்படியே ஒத்திருக்கும் வகையில் புதிய தகடுகள் தயாரித்துத் தந்தது.









(எதிர்ப்புறம்) கூரை மீண்டும் வேயப்படுகிறது. ஓடுகளும், மேற் பூச்சு பூசப்பட்ட இரும்பு சாலை களும் அகற்றப்பட்டு மீண்டும் பொருத்தப் பட்டன. (மேலே) ஓடுகள் மீண்டும் வேயப்படுகின்றன. (மேலே-கீழே) ஓடுகள் மீண்டும் வேயப்படும் பணி முடிவடைந்த நிலை.



வண்ண வேலைக்கு உள்ளான போலி மேற்கூரைகளுக்கு, இங்கிலாந்தில் பயிற்சி பெற்ற வல்லுநர்களால் ஆயில் வண்ணங்களும் விசேஷ வண்ண நீடிப்புப் பாதுகாப்பு தொழில் நுணுக்கங்களும் பயன்படுத்தப்பட்டன. இந்தப் பணி INTACH ஸ்தாபனத்தால், பெங்களூரில் உள்ள சர்வதேச சித்ர கலா பரிஷத் கலைப் பாதுகாப்பு மையத்துடன் (ICKPAC) இணைந்து பணியாற்றி மேற் கொள்ளப்பட்டது. மங்கிய நிலையில் இருந்தாலும் ஒரு சில வண்ண வேலைகள் கிரேட் ஹாலில் அப்போதும் இருந்தன. ஆனால், மற்ற இடங்களில், அதுவும் குறிப்பாக சவுத் ஹாலில் கிழிந்து தொங்கிய நிலையில் இருந்தாலும் மிகுந்த கவனத்துடன் மீட்கப் பட்டு, எஞ்சியிருந்த சிறு சிறு வண்ண வேலைகள், மற்றும் வண்ண வேலைப்பகுதிகள் முழுமையாக இருந்தபோது எடுக்கப்பட்ட ஒரு புகைப்படத்தின் அடிப்படையில் சீர் செய்யப்பட்டன.

ஒவ்வொன்றும் 15' x 15' அளவுடன் பூ வேலைப்பாடு வடிவமைப்புடன் செழுமையாக வண்ணம் தீட்டப்பட்ட 21 வண்ணப் பகுதிகள், 60 அடி உயரத்தில் மேற்கூரையில் பொருத்தப்பட்டு கிரேட் ஹாலையும் செனேட் ஹவுஸையும் ஒரு காலத்தில் அலங்கரித்தன. ஆனால் அவற்றில், கால ஓட்டத்தாலும் பருவ நிலைகளாலும் பாதிக்கப்பட்டு மூன்றே மூன்றைத் தவிர மற்றவை மறைந்து போய் விட்டன. எஞ்சிய அந்த மூன்றும்கூட, தூசுகளாலும் அழுக்குகளாலும் சூழப்பட்டு மிகவும் பாழ்பட்ட நிலையில் இருந்தன. இந்த



கிரேட் ஹால் - மறுசீரமைப்புப் பணிக்கு முன்னும் பின்னும். (எதிர்ப்பக்கம்) அதேபோல கித்தான் கூரை



வண்ண வேலைப் பகுதிகள் மேற்கூரையிலிருந்து இறக்கப்பட்டு பாதுகாப்புப் பராமரிப்புப் பணி எடுத்துக்கொள்ளப்படும் வரை கவனமாக வைக்கப்பட்டன.

கிரேட் ஹாலின் மேற்கூரைக்காக, எஞ்சியுள்ள மூன்று வண்ண வேலைப் பகுதிகளுக்கு ஒத்தவாறு 18 வண்ணப் பகுதிகளை ICKPAC தயாரித்தது. புதுப்பிக்கப்பட்ட மற்றும் புதிய வண்ண வேலைப்பகுதிகளின் பெரிய அளவை கருத்தில் கொண்டால், முதலில் இருந்த அவற்றின் அளவுகளுக்கு நீட்டி இழுத்து, கிரேட் ஹாலில் தரையிலிருந்து 60 அடி உயரத்திற்கும், இதர அறைகளில் சற்றுக் குறைவான உயரத்திற்கும் கூரையில் மீண்டும் பொருத்துவது என்பது பெரும் சவாலாக இருந்தது. முதலில், 15' x 15' அளவுள்ள பெரிய படுக்கை அமைப்புகளைக் கீழே கொண்டு வந்து அவற்றின் மீது வண்ண வேலைகளைத் தரையிலேயே நீட்டி இழுத்து அமைத்த பிறகு சாரங்களின் உதவியுடன் மீண்டும் மேலே எடுத்துச் செல்வது அவசியம் என்று தென்பட்டது. இதற்கு அதிக நேரமும் செலவும் ஆகியிருக்கும். எனவே, நேரத்தையும் செலவையும் பெரிதும் சேமிக்கும் விதத்தில், ICKPAC பராமரிப்பாளர் கிரிஷ் கோட்டி சுலபமான மிக எளிதான வழி ஒன்றைக் கண்டுபிடித்தார். வடக்குப் பகுதியில் தாழ்வான உயரத்தில் இருந்த ஓர் இடைவெளியின் மூலம் சுருட்டி வைக்கப்பட்ட வண்ண வேலைப் பகுதிகளைக் கூரைஅளவுக்கு எடுத்துச் சென்ற அவர், விசேஷமாக தயாரிக்கப்பட்ட மேடைமீது அவற்றை வைத்தார். பிரம்மாண்ட அளவிலான அந்த படுக்கை அமைப்புகள் ஒவ்வொன்றும் 18" உயரத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அந்த உயரத்துக்கு விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட கம்பங்களின்



புதுப்பிக்கப்பட்ட மேற்கூரை. இடதுபுறம், புதுப்பிக்கப்பட்ட வண்ண வேலைப் பகுதி ஏற்பாட்டின் ஓர் அருகாமைத் தோற்றம். முதலிலிருந்து இரண்டாவது வரிசையில் ஒளி மங்கிய மூன்று பகுதிகளைப் பார்க்கலாம். எஞ்சியுள்ள இந்த மூன்று பகுதிகளும், அவற்றின் முதன்முதல் வேலைப்பாட்டை கௌரவிக்கும் விதத்தில் சுத்தம் செய்யப்பட்டபின் அதே நிலையில் வைக்கப்பட்டுள்ளன. வலது புறம், புதிதாக வரையப்பட்ட வண்ணப்பகுதிகளில் ஒன்றின் மிக அருகாமைத் தோற்றம்.





கிரேக்கப்பாணியில் கடைந்த பாதி வட்டப் பகுதி. (எதிர்ப் பக்கம்) பூச்சு வேலை நடைபெறுகிறது.

மூலைகளில் அவை பொருத்தப்பட்டன. இந்த நிலையில் வைக்கப்பட்ட படுக்கை அமைப்புகளின் மீது வண்ண வேலைப் பகுதிகள் நீட்டி இழுத்து வைக்கப்பட்டு, அவ்வாறு அந்தப் படுக்கை அமைப்பு முதலில் இருந்த அதன் இடத்தில் கவனத்துடன் வைக்கப்பட்டது.

இந்த வண்ண வேலைத்திட்டம் கால வரம்புக்கு உட்பட்ட ஒன்று என்பதால், நிர்ணயிக்கப்பட்ட ஐந்து மாதங்களுக்குள்ளேயே அது செய்து முடிக்கப்பட்டது மிக மகிழ்ச்சி தரக்கூடிய விஷயம்.

இது, செனேட் ஹவுஸின் கலைப் பொக்கிஷங்களில் ஒரு பகுதி மட்டுமே. அவற்றின் மற்றவற்றில் கிரேட் ஹாலின் 14 கதவுகளின் ஒவ்வொன்றின் மேலும் அமைந்திருந்த வண்ண வேலைகள் அடங்கும். இந்த அரை வட்ட வண்ண வேலைப்பகுதிகள் கிரேக்க பாணியில் இருந்ததுடன் மனித உருவங்களைக் கொண்டிருந்தன. ஒவ்வொரு சுவற்றின் மீதும் பூ வடிவமைப்புடன் முக்கோண வண்ண வேலைப்பிரிவுகளும் இருந்தன. கூரையின் மீது பல்வேறு அளவுகளில் சேதமாகிவிட்ட மூன்று வண்ண வேலைப் பிரிவுகளைத் தவிர, இந்த 14 அரைவட்ட மற்றும் 28 முக்கோண வண்ணவேலைப் பகுதிகளையும் பராமரித்துப் புதுப்பிக்க வேண்டியதாயிற்று. சுரசுரப்பான கித்தான்களின் மீது வண்ணத்தூள்களால் வண்ண வேலைகள் செய்யப்பட்டிருந்தன. அந்த கித்தான் பாழ்பட்டு வந்ததால் வண்ண வேலைகள் உலர்ந்து விட்டிருந்தன. எனவே, இந்த வண்ண வேலைகளும் அக்குஅக்காக பிரிக்கப்பட்டு, கட்டிடப் பணியின்போது சேதம் அடையாத விதத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டன. அதன் பிறகு, பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப் படுவதற்காக அவை பெங்களூருக்கு அனுப்பப்பட்டன. பராமரிப்பின் முதல் படியாக அவை சுத்தம் செய்யப்பட்டன. மென்மையான பிரஷ்கள் மூலம் தூசுகள் நீக்கப்பட்டு, வண்ணவேலைப்பகுதிகளின் மீது பஞ்சுகள் வைக்கப்பட்டு பெட்ரோலியம் ஈதரின் உதவியுடன் படிந்திருந்த அழுக்குகள் அகற்றப்பட்டன. கித்தானில் காணப்பட்ட கிழிந்த பகுதிகளும் துவாரங்களும், விளிம்புமுறைத் தொழில் நுணுக்கத்தைப் பயன்படுத்தி கித்தான் துண்டுகளை பின்புறத்தில் பொருத்திச் சீர் செய்யப்பட்டன. வண்ண வேலைப் பகுதிகளின் உட்புறத்தையல் அடுத்த வேலை. வண்ணப் பிரிவுகளின் பெரிய அளவுகளை கருத்தில்கொண்டு, அவற்றின் எடையை மிகவும் பெருக்காத விதத்தில், மெல்லிய ஆனால் வலுவான நைலான் வலைகள் உட்தையலுக்கு பயன்படுத்தப்பட்டன. பிடிலைட் தயாரிப்பு கோந்து பயன்படுத்தப்பட்டது. அனைத்து இடைவெளி களும் விசேஷத் தயாரிப்பு பட்டியால் நிரப்பப்பட்டு வண்ண வேலைப் பகுதிகளுடன் ஒன்றிணைக்கப்பட்டன. இறுதியாக, அனைத்து வண்ண வேலைகளின் மீதும், பாரலாய்டு B82 எனப்படும் 2% கரைசல் பொருள் பாதுகாப்புப் பூச்சாக தடவப்பட்டது.

அவற்றின் மேலிருந்த வெள்ளைப் பூச்சு அகற்றப்பட்டபோது, உள்ளிருந்த சுண்ணாம்புப் பூச்சு விழுந்து விடும் நிலையில் இருந்தது. ஆனால் பல்வேறு வண்ணங்களும், சிறப்பான செதுக்கு வேலைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதைச் சுவர்கள் நிரூபித்தன. இது உற்சாகமூட்டும் அதே சமயத்தில் வியப்பூட்டும் கண்டுபிடிப்பாக அமைந்தது. கிரேட் ஹாலில்தான் இத்தகைய செதுக்கு வேலைகள் பெரும்பாலும் காணப்பட்டன என்றாலும் கட்டடத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் வண்ணங்கள் பஞ்சமின்றிப் பயன்படுத்தப் பட்டிருந்தன. சுவர்கள் அடுக்கடுக்காகப் பிரித்து ஆராயப்பட்டன. அக்கால கட்டடக் கலை பற்றிய பல்வேறு புத்தகங்கள் ஆய்வு செய்யப்பட்டன. சில பகுதிகளில் சிவப்புவண்ண சுவர்கள் தென் பட்டன. அவை நலிந்த நிலையில் இருந்தன என்றாலும் அக்கால கட்டுமான முறை பற்றிய மர்மத்தை ஆழமாக்கின.

கட்டுமானப் பணியிடத்தில் இருந்த ஒரு மேஸ்திரியிடம்







அக்காலத்தில் மத்தியதரைப் பகுதியில் பிரபலமாக இருந்த சுவர்கோல ஓவியங்கள் பற்றி அறிந்துகொள்ள முடிந்தது. பாதுகாப்புக் குழுவினர் அவர்களிடம் பேசியதிலிருந்து இயற்கையாக ஏற்படும் மண் மற்றும் வண்ண ஆக்ஸைட்கள் பயன்படுத்தப்பட்டது தெரியவந்தது. இந்த ஆக்ஸைட்களுக்கு இணையான இயற்கைப் பொருட்கள் கிடைக்குமா என்ற ஆய்வும் மேற்கொள்ளப்பட்டது.

அந்தக் காலத்தில் இக் கட்டடம் கட்டப்பட்ட போது அரித்துப் போகாமல் இருக்க சுண்ணாம்புப் பூச்சுடன் ஒரு பொருளைக் கலந்திருந்தார்கள். அது என்ன என்று பெங்களூரில் சோதனைச்சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் அது மணல் என்பதைத் தெரிவித்தன. எனவே மணல், வேதியியல் ஆற்றல் அற்ற இன்னொரு பொருள், இயற்கை வண்ணங்கள் ஆகியவையே அப்போது பயன்படுத்தப்பட்டன என்ற கணிப்பு உண்மை என்பது உறுதியாயிற்று.

வண்ணங்களை எப்படிப் பூசுவது என்பது அடுத்த கேள்வி. மீண்டும் சோதனைகள் மேற் கொள்ளப்பட்டன. கலவைப் பூச்சு வர்ணத் தொழில் நுணுக்கம் பல்வேறு பொருட்கள் கலந்து இது உருவாக்கப்படுகிறது. உதாரணமாக, ஆவண ஆதாரங்கள் தயாரிக்கப்படவில்லை என்றாலும், நெய், முட்டை வெண்ணைக்கு உள்ளிட்ட பல ஆண்டு களாகப் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் அவற்றில் அடங்கும். அது மட்டுமல்ல, தலைமுறைகள் ஒன்றன்பின் ஒன்றாகப் பயன்படுத்தி வந்த தொழில் நுட்பம் இது. எனினும் இந்த அதிசயமான 'மெட்ராஸ் பிளாஸ்டர்' (செட்டிநாடு பிளாஸ்டர் என்று இப்போது அழைக்கப்படுகிறது) பற்றி 19ஆம் நூற்றாண்டில் சென்னையில் பணி புரிந்துவந்த

பூச்சு வேலை கலர்கள் முன்பும் (இடது, மேலே) பின்பும் (இடது).. எதிர்ப்பக்கம் - இடது) கலவையை பக்குவப்படுத்துதல் - சாம்பிள் செய்தல் (வலது).





ஆங்கிலேய மேஸ்திரிகள், கட்டடம் கட்டுவோர், மேல்பூச்சு நிபுணர்கள் ஆகியோர் எழுதிய பல நூல்களில் குறிப்புகள் காணக் கிடைக்கின்றன. தென்னிந்தியாவில் அந்த நூற்றாண்டில் கட்டப்பட்ட பொதுக் கட்டடங்களில் இந்தக் கலவை பயன்படுத்தப்பட்டது. இந்தக் கலவை பிரிட்டனில் எழுதப்பட்ட பல நூல்களிலும், ஆவணங்களிலும் மிக மென்மையான, மிக மெருகேறிய மெட்ராஸ் பிளாஸ்டர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உலகில் வேறெங்கும் காணக் கிடைக்காத ஒன்று என்ற சிறப்புக்குரியதாக அக் கலவை கருதப்பட்டது.

பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்கும் வகையில் பல சோதனைகளும் பயிலரங்குகளும் நடத்தப்பட்டன. அப்போது பயன்படுத்தப்பட்ட மூல முதலான பொருட்கள் எங்கே கிடைக்கும் என்று முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கட்டடப் பாதுகாப்புக் குழுவினர் முதலில் சந்திக்க வேண்டி வந்த சில பிரச்சினைகள் வருமாறு:

பொதுவாக மேல் பக்கம் சாந்து பூச 'கொலூறு' எனப்படும் உலோகக் கரண்டியைப் பயன்படுத்துவார்கள். ஆனால் அது பூச்சின் மீது தேய்த்த அடையாளங்களை விட்டுச்சென்றது. பூசுவதற்கு மென்மையான கூழாங்கற்கள் பயன்படுத்தியதை நினைவு கூர்ந்தார் ஒரு பணியாளர். பின்னர் ஒரு பக்கம் தட்டையான சிறப்பு கூழாங்கல், மேல் பூச்சு வேலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டது.

பூச்சுக்குத் தேவையான கலவையில் எவ்வளவு மணல் கலக்க வேண்டும் என்ற விகிதாசாரக் கணக்கு முக்கியமாயிற்று. ஒவ்வொரு அடுக்குக்கும் இந்தக் கணக்கு மாறியது. தவறான கலவை, வண்ணத்தையும் பூச்சு வேலையின் தொடர் தன்மையையும் பாதித்துவிடும்.

மணலை நுணுக்கமாக அரைக்கக்கூட அரிசி அரைக்கும் ஆலையைத்தான் அணுக வேண்டியிருந்தது. அவ்வாறுதான் சரியான தேவைக்கேற்ற தரம் கிடைத்தது. சில சமயம் கையாலும் அரைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. கட்டுமானப் பணியிடத்திலேயே மாவு அரைக்கும் இயந்திரங்கள் இருந்தன. சமையலுக்குப் பயன்படும் பல பாத்திரங்களும் அங்கே பயன்பட்டன. சில சமயங்களில் அந்த இடம் ஒரு சமையலறை போலவே காட்சியளித்தது!

சுண்ணாம்புப் பட்டியின் மூலம் ரசாயன மாறுதல்களுக்கு உள்ளாகாத இயற்கை வண்ணங்களைக் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. யதேச்சையாக மதுரையில் ஒரு மர வியாபாரியுடன் நிகழ்ந்த சந்திப்பின் விளைவாக அந்தக் குழுவினருக்கு மஞ்சள், சிகப்பு நில மண் கலவை ஆக்ஸைடுகள் கிடைக்கும் இடம் தெரிய வந்தது. கருப்பு நிறத்துக்கு மங்கனீஸ் பயன்படுத்தப்படுவது மங்கலான தோற்றத்தைத் தந்தது. எனவே தேங்காய் மூடியை எரித்து அந்தத் தூளைப் பயன்படுத்தினார்கள். பழுப்பு போன்ற நிறங்களைப் பெறப் பல்வேறு கலவைகள் பயன்படுத்தப்பட்டன.

ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடம் வடிவத்தில் பிரம்மாண்டமாக இருந்தாலும், அதன் கோபுரங்களும், வளைவுகளும் மிக நுணுக்கமாகவும் நேர்த்தியாகவும் பல்வேறு கட்டுமானப் பொருட்களைக் கொண்டு கனமாக்கப்பட்டிருக்கின்றன. கட்டடத்தின் வெளிப்புறம் சிவப்பு செங்கல் வேலைப்பாட்டுடன் முடிக்கப்பட்டு, உட்புறம் மிக அழகாக சிவப்பு, கறுப்பு, சாம்பல், மஞ்சள் நிறங்களை பளிச்சான வெண்மைநிறப் பின்னணியுடன் இணைத்து அலங்கரிக்கப் பட்டுள்ளது.

* * *

இந்தக் கட்டடத்தை மறுசீரமைத்தல், பாரம்பரியச் சின்னங்களைச் சீரமைக்கும்போது எல்லா அம்சங்களிலும் மூல முதலான பாரம்பரியப் பொருட்களையும், தொழில் நுட்பத்தையும் பயன்படுத்த வேண்டும் என்ற சர்வதேசக் கொள்கை செயல்படுத்தப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்கு கதவுகளுக்குத் தாழ்ப்பாள் இல்லை. ஆனால் வண்ணப் பூச்சினிடையே தாழ்ப்பாளின் வடிவம் அச்சுபோல் படிந்திருந்தது. அந்த அச்சிலிருந்து தாழ்ப்பாளின் வடிவம் புரிந்து கொள்ளப்பட்டு அதன்படி தாழ்ப்பாள் செய்யப்பட்டது. கல்பனா கூறுகிறார்: "கட்டடத்தைத் துல்லியமாக பகுத்து ஆராய்ந்து செயல்படுவதுதான் இத்தகைய கட்டடப் பாதுகாப்பின் வெற்றிக்கு வழிவகுக்கும். கண்காணிப்பும், கட்டடத்திற்குள்ளேயே கிடைக்கும் கட்டுமானப் பொருட்களைப் பரிசோதனைச்சாலையில் சோதிக்கும் முறையும் அவசியம். அதைத் தொடர்ந்து மூலமுதலான கட்டடத்தின் மேன்மைக்கு மீண்டும் கட்டடத்தை மீண்டும் கொண்டுவர பரிசோதனை முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பணியாற்றுகிறவர்களின் வேலைத் திறமையை அருகிலிருந்து கண்காணிப்பது மிக முக்கியம்."

உட்சுவர்களைப் போர்த்திக் கொண்டிருந்தச் சுண்ணாம்பு பூச்சைப் புதுப்பிப்பதுதான் இந்த மறுசீரமைப்புப் பணியில் மிகவும் முக்கியமான, மிகுந்த செலவு வைக்கும் பணியாகும். தொன்மை காரணமாகவும், சரியான பராமரிப்பு இல்லாமற் போனதன் காரணமாகவும் பயன்படுத்தப்பட்டிருந்த பூச்சு முழுவதுமாக பாழாகிப் போய், புதிதாகப் பூசவேண்டி வந்தது.

பாரம்பரியத் தொழில் நுட்பம் மற்றும் செட்டிநாடு பிளாஸ்டர் ஆகியவற்றைப் பயன்படுத்தி சுண்ணாம்புப் பூச்சு புதுப்பிக்கப்பட்டது. முதலில் துல்லியமாக அரைக்கப்பட்ட சுண்ணாம்புக் கலவையைச் சுவர்கள் மீது பூசி - பல நாட்களுக்குப் பல அடுக்குகள் அப்படிப் பூசியபின் - இறுதி அடுக்குகளைப் பூசும்போது முட்டையின் வெள்ளைக் கருவும், மணலும் பயன்படுத்தப்பட்டன. சுண்ணாம்பு சாந்து தயார் செய்ய, கட்டுமானப் பணி இடத்திலேயே கடுக்காய், நாட்டுச் சர்க்கரை கரைசல் போன்றவை அரைக்கப்பட்டன. இப்படி பல நாட்கள் தயார் செய்த பிறகு அந்தக் கலவை சுவர்களின்மேல் மூல முதல் கட்டடத்தில் எப்படி பூசப்பட்டிருந்ததோ அப்படிப் பூசப்பட்டது. பெரிய அளவு மணலிலிருந்து சிறிய மணல்வரை பயன்படுத்தப்பட்டது. இரண்டு முதல் நான்கு அடுக்குகள் வரை இந்தப் பூச்சு மேற்கொள்ளப்பட்டது. இறுதிப் பூச்சுக்கு முன் குறைந்தபட்சம் பத்து நாட்கள் அடிப்படை பூச்சு ஆறவிடப்பட்டது. செட்டிநாடு பிளாஸ்டரில் செய்யப்பட்ட இறுதிப் பூச்சின் மூலம் கட்டடம் தனிப்பொலிவு பெற்றது. இறுதி நிலையிலும் ஆறு அடுக்குகள். மெருகு மிகு சுண்ணாம்புத் தூளுடன், மென்மையான வெள்ளை பல்வேறு விகிதங்களில் கலந்து உருவாக்கப்பட்ட சாந்து இதற்குப் பயன்படுத்தப்பட்டது. இறுதிஅடுக்கு பூச்சுக்கு முட்டையின் வெள்ளைக்கருவும், பசும்பாலிலிருந்து தயாரிக்கப்பட்ட தயிரிலிருந்து எடுக்கப்பட்ட தண்ணீரும் கலவையுடன் பயன்படுத்தப்பட்டன. ஏடு நிறைந்திருப்பதால் எருமைப் பால் இதற்கு பயன்படுத்தப் படுவதில்லை. இந்த இறுதி நிலை பூச்சுகளுக்கு குறைந்த பட்சம் எட்டு மணி நேரம் பிடித்தது. இறுதியாக பொலிவூட்டுவதற்கு முன்பாக இரண்டு மணி நேரம் ஆறவிடப்பட்டது. இறுதியில் சின்ன கூழாங்கல்லும், சோப்புக் கல்தூளும் பூசப்பட்டு பாலிஷ் செய்யப்பட்டது. இதைச் செய்து முடிக்க முழுமையாக இரண்டு நாள் தேவைப்பட்டது.


இறுதிப்பூச்சுக்கு தயாராகும் நிலை. கலவையில் முட்டைகள் பயன்படுத்தப்பட்டது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

இந்தக் கட்டடத்தின் இன்னொரு புதுமையான அம்சம் இதன் எண்ணற்ற புடைப்புச் செதுக்கு வேலைகள். மென்மை யான சுண்ணச் சாந்தில் வடிவமைப்பு சார்ந்த வடிவங்களில் இவை செய்யப்பட்டுள்ளன. வண்ணப் பூச்சின் பின்னணியில் இவை அமைந்துள்ளன. இப்படி ஒரு பின்னணியின் மீது ஒரு அலங்கார அடுக்கை அமைப்பது 18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தெற்கு ஐரோப்பாவில் பரவலாக இருந்து வந்தது. ஸ்க்ராஃபிடோ (Sgrafitto) என்று அதற்குப் பெயர் (ஸ்க்ராஃபிடோ என்ற இத்தாலிய வார்த்தைக்கு 'தேய்த்தல்' என்று பொருள்).

கிரேட் ஹாலின் உட்புறத்தை அத்தகைய தோற்றப் படைப்புகள் அல்லது சுவர்ச் சித்திரங்கள் கம்பீரமாக அலங்கரித்தன. மெலிதான பிளாஸ்டிக் தகடுகளிலிருந்து ஓரிரண்டு மில்லிமீட்டர் கனத்தில் இவை உருவாக்கப்பட்டன. இவை அமைக்கப் பட்டுள்ள விதம், பின்னணி வண்ண அடுக்கு களுக்கும், மேலே வெள்ளை நிறப் பூச்சுக்கும் பொருத்தமாக இந்தச் சித்திரங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

கிரேட் ஹாலில் இரண்டு மாடி முகப்புகள் போன்ற இடங்களில் பழுது பார்க்கும் பணிகளின்போது சிமெண்ட் பூச்சு

வண்ணங்கள் பூசப்பட்ட அலங்காரச் சுவர்கள் - மறுசீரமைப்புக்குப் பின் - மூலமுதல் சுவரில் இருந்த ஒரு பகுதி, வித்தியாசத்தைக் காட்டுவதற்காகப் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. எதிர்ப்பக்கம்: கிரேட் ஹாலில் பூச்சில் அலங்கார வேலைப்பாடுகள் நடைபெறும் காட்சி. மற்றும் மற்ற சில அலங்காரங்கள் (எதிர்ப்பக்கம், இடதுபுறம் வலது கோடி).







பூசப்பட்டதால் சுவர் சித்திரங்கள் அழிந்துவிட்டன. புகைப்படங்கள் மற்ற விவரங்களிலிருந்து அவை மீண்டும் எழுதப்பட வேண்டும்.









கதவு வழிகளைச் சுற்றிலும் உள்ள பல்வேறு வடிவ அலங்காரங்கள். மறுசீரமைப்புக்கு முன்பும் பின்பும் (இடது) மறுசீரமைப்புக்கு முன்பு காணப்பட்ட அலங்காரப் பட்டைகள்.





மறுசீரமைப்புக்குப் பின்னர் கதவு வழிகளைச் சுற்றிலும் அலங்கார வேலைப்பாடுகள்.





மறுசீரமைப்புக்கு முன்பு கிரேட் ஹாலின் வடக்குப்புறச் சுவரின் ஒரு தோற்றம் (மேலே); (உள்படம்) பிரதான வளைவுக்கு வலது புறம் ஒரு பகுதியில் அலங்காரப் பூச்சின் நெருக்கமான தோற்றம்.



மறுசீரமைப்புக்குப் பின் கிரேட் ஹாலின் வடக்குப் புறச் சுவரின் தோற்றம்; (உள்படம் - எதிர்ப்பக்கம்) வளைவுகளுக்கு மேலே உள்ள பகுதி எப்படி மறுசீரமைக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் காட்டும் படம்.

மர வேலைகளின் தொடர்பான பழுதுபார்க்கும் பணியில் சிறப்பு தச்சு நிபுணத்துவம் தேவைப்பட்டது. பதப்படுத்தப்பட பர்மா தேக்கு மரம் மூல முதலான வேலையில் பயன்படுத்தப்பட்டது. நீண்ட காலத்திற்குப் பிறகும் அந்த மரங்கள் சற்றும் சீர் குலையவில்லை. சில இடங்களில் பித்தளை அம்சங்கள் காணாமல் போயிருந்தனவே தவிர மற்றவை நன்றாகவே இருந்தன. இவை சரிப்படுத்தப்பட்டுவிட்டால் போதும். தாழ்ப்பாள் போன்ற பித்தளை சாமான்கள் இந்த சீரமைப்புப் பணியின் சிறப்பம்சம்.



மேடையின் மேல்பகுதியில் முன்பிருந்த மரத்தினால் ஆன பின்னல் சுட்டிகள் (மேலே); (வலது) மறு சீரமைப்பிற்குப் பின்.







முழுவதுமாக மறு சீரமைக்கப்பட்ட கதவு (அடுத்த பக்கம்) பணியில் ஈடுபட்டுள்ள கலைஞர்கள்.








அழகிய மாடிப்படி வழியில் உள்ள மரக் கைப்பிடிச் சுவர்த் தூண்கள், வடபுறச் சுவர் ஒன்றில் பூச்சில் பிரதி எடுக்கப்பட்டன. (கீழே) (உள்படம்) மறுசீரமைப்புக்கு முன்னால் பூச்சு அலங்காரம் எப்படி இருந்தது என்பதைக் காட்டும் படம்.











(இடது) படிக்கட்டுகளின் கீழே மரச் சட்டங்கள். (மேலே) மறு சீரமைப்புக்குப்பின் மரவேலைப் பாடுகள்.

வெளிப்புறச் செங்கல் கட்டட வேலைகள், உடைந்து போன கல் உத்தரங்கள், சுவர் நிலை அடுக்குப் பேழைகள், தூண்கள் போன்றவற்றைச் செப்பனிடுதல், புதிதாக இரும்பு வார்ப்பட கைப்பிடிகளை மூல முதலான கைப்பிடிகள் போன்றே தயாரித்தல் போன்றவை மறு சீரமைப்புப் பணியின் மற்ற சில முக்கிய அம்சங்கள்.





செங்கல் வேலைப்பாடுகளின் மறுசீரமைப்புப் பணி நடை பெறுகிறது. (இடது). பணிமுடிந்த ஒரு பகுதி (மேலே)

இரும்பு வார்ப்படக் கைப்பிடிகளுக்காக -அவற்றில் காணாமற்போன சில பகுதிகளுக்காக - இருக்கின்ற துணிகளிலிருந்து அச்சுகள் தயாரித்துப் பின்னர் அவற்றை வைத்து கைப்பிடிப் பகுதிகள் உருவாக்கப்பட்டன.

கிழக்கு, மேற்கு வெளிப்புறங்களில் தரகோட்டா எனப்படும் சுட்ட செம்மண் பூ கணி வேலைகள் காணாமற் போன பகுதிகளை மறுசீரமைக்க முறை பின்படுத்தப்பட்டன. கட்டட வெளிப்புறங்களில் சுட்ட மண் சிற்பங்களைப் பயன்படுத்துவது ஐரோப்பிய கட்டடக் கலையில் சாதாரணமான ஒன்று. எனவே சுட்ட மண் சிற்பக் கலையில் தேர்ந்தவர்களைத் தேடும் பணி தொடங்கியது. இறுதியில் திருச்சூர் மாவட்டத்தில் தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஒன்று - கும்பம் ம்யூரல்ஸ் - அடையாளம் காணப்பட்டது. சிற்பங்களை உருவாக்கும் முன்பாவது அளவுகள், அச்சுகள் போன்றவை துல்லியமாகச் சேகரிக்கப்பட்டன.







(உயரே மற்றும் இடது) சுடுமண் சிற்பங்கள் மறுசீரமைப்புப் பணி, பணிமுடிந்தபின் (மேலே) வார்ப்பிரும்பு வேலி மறுசீரமைப்புக்குப் பின் எப்படி இருக்கிறது என்பதைக் காட்டும் படம்.



எதிர்ப்பக்கம்:
உயரமான
சாளரங்களின்
பின்னணியில்
கிழக்கு பகுதியில்
அலங்கார
வளைவுகள்
கொண்ட
கட்டடத்தின்
முன்பகுதி. இடது:
விதவிதமான
வண்ணப் பூச்சு,
அதி அலங்கார
கைப்பிடிச்சுவர்களின்
அழகிய கலவை.

சயம் பயன்படுத்தப்பட்ட வண்ணச் சாயம் பூசப்பட்ட கண்ணாடிகள் இன்னொரு சவாலாக அமைந்தன. தலைமைக் கைவினைக் கலைஞர் இதற்காக வெளிநாட்டில் பயிற்சி எடுக்க வேண்டியிருந்தது. அவர் சீரமைப்புப் பணிகள் நடைபெறும் இடத்திலேயே மின்சார சுடு சூளை ஒன்று உள்ளிட்ட ஒரு பட்டறையையே நிர்மாணித்தார். வடக்கு கோபுரத்திலிருந்து கிடைத்த ஆறு துண்டுகளிலிருந்து வடிவங்கள் மீண்டும் படைக்கப்பட்டன. வண்ணச் சாயம் கொண்ட கண்ணாடிகள் சில இடங்களிலும், மற்ற இடங்களில் வண்ணம் பூசப்பட்ட கண்ணாடிகள் மின் சுடு சூளையில் சூடேற்றப்பட்டும் பொருத்தப்பட்டன.



(கீழே மற்றும் எதிர்ப்பக்கம்): கிரேட் ஹாலுக்கு மேலே கண்ணாடித் துண்டுகளை இணைத்து உருவாக்கப்பட்ட வண்ணச் சாளரங்கள் - ஒவ்வொன்றும் வித்தியாசமானவை.















(எதிர்ப்பக்கம் மற்றும் மேலே) வடபகுதியில் முதல் மாடியில் உள்ள கவர்ச்சிகரமான வண்ணம் பூசப்பட்ட சாளரங்கள்; (இடது மற்றும் மேலே) வண்ணக் கண்ணாடி சாளரங்கள்.



பிரதான படிக்கட்டுப் பகுதியின் கீழே உள்ள அழகிய காகித நீள் சதுரத் துண்டுகள் நல்ல நிலையில் உள்ளன. அவை மரத்தால் பாதுகாக்கப்பட்டிருக்கலாம். சுத்தப் படுத்தியதன் மூலமே அவை சீரமைக்கப்பட்டன.



வடபகுதியில் மறுசீரமைக்கப்பட்ட துணை வேந்தர் அறைக்கு கிரேட் ஹாலிலிருந்து போகும் மாடிப்படி வழியின் கீழே (இடது) அமைக்கப் பட்டுள்ள காகித அட்டைகளில் ஆன (மேலே) பொய்க்கூரை; (எதிர்ப்பக்கம்): சுத்தப்படுத்தப்பட்ட பின்பு காகிதப் பிரிவுகளின் தோற்றம்.



பல்வேறு பொருட்கள் மூலம் தரை வேயப்பட்டிருந்தாலும் அதை எளிதில் சீர் செய்வது சாத்தியமாக இருந்தது. வடக்குப் பிரிவில் முதல் மாடி தரை பழைய இறக்குமதி செய்யப்பட்ட மின்டன் ஓடுகளால் வேயப்பட்டிருந்தது என்றாலும் அது நல்ல நிலையில் இருந்தது. கவனமாக சுத்தம் செய்வது மட்டுமே தேவைப்பட்டது. கிரேட் ஹாலின் தரை மரப் பலகைகளால் வேயப்பட்ட தரை. அதுவும் நல்ல நிலையில் இருந்தது. அதற்குப் பொலிவேற்றினால் போதும். மற்ற இடங்களில் பழைய கடப்பா கற் பலகைகள் மாற்றப்பட்டு புதிய கற்பலகைகள் பொருத்தப்பட்டன. தெற்குப் பிரிவில் நன்றாக இருந்த இடங்களில், அவை அப்படியே விடப்பட்டன.



துணை வேந்தரின் அறையில் மின்டன் ஓடுகள் வேயப்பட்ட தரை 130 ஆண்டுகளுக்கு பின்னும் நல்ல நிலையிலேயே இருந்தது. அந்தத் தரை சுத்தப்படுத்தப்பட்ட பின்பு எடுக்கப்பட்ட படம். (உள்படம்) சுத்தப்படுத்தப்படுவதற்கு முன்பு ஓடுகள் அமைப்பின் படம்.

* * *

ஒட்டுமொத்த சீரமைப்பு பணி, மிகக் கடினமான புதிர் ஒன்றுக்கு விடை காணுவதைப் போல் இருந்தது. மிகுந்த கவனமும் பொறுமையும் தேவைப்பட்டன. கட்டடத்தில் ஒவ்வொரு அங்குலமும் ஆராயப்பட்டது. பின்னர் மூல முதலான கட்டடம் கட்டப்பட்டது பற்றி கிடைத்த வரலாற்றுக் குறிப்புகளோடு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தச் சிரமமான, மெதுவான பணியில் அறக்கட்டளை பரிந்துரைத்த ஒப்பந்த முறை பெரும் பலன் தந்தது. இப் பணியின் உயிர் நாடியே பரிசோதனைகள் தான். மறு சீரமைப்புப் பணிக் குழுவுக்கு சுதந்திரமாகச் செயலாற்ற உரிமை தரப்பட்டதால் முழு நிறைவு ஒன்றே முக்கிய நோக்கமாக இருந்தது. ஆகின்ற செலவுகள் தரப்பட்டு விட்டதால் ஏதேனும் ஒரு இடத்தில் சிக்கல் என்றால் மீண்டும் முதலிலிருந்து தொடங்கி சிக்கலைத் தீர்க்க முடிந்தது.

ஒரு விதத்தில் பார்த்தால் இந்தக் கட்டடத்தின் மீதான மறு சீரமைப்புப் பணிகள் தொடங்கப்பட்ட போது கட்டடக் கலை பற்றி அதுவரை இருந்த எண்ணங்கள், கட்டடக் காரர்களின் தகுதி அடுக்குகள் அனைத்தும் ஓர் ஓரமாகத் தள்ளப்பட்டுவிட்டன என்றுதான் சொல்ல வேண்டும். கட்டடக் கலையில் அடிப்படைக்குப் போக வேண்டியதாயிற்று. ஒரு சிறிய சதுர அங்குல பரப்பளவை ஆராயப் போனாலும் 125 ஆண்டுகளுக்கு முன்பிருந்த

கட்டடக் கலையைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. "கட்டுமானத்தில் காலப் போக்கில் முறைகள் மாறி வந்திருக்கின்றன. இன்று தொழில்நுட்பத்துக்கும், கட்டட நோக்கை விரைவில் அடைவதற்குமே முன்னுரிமைகள். இந்தக் கட்டட மறுசீரமைப்பில் பணியில் ஈடுபட்டபோது இத் துறையில் இப்போது இழந்துவிட்ட கலை, கைவினைகளை மீண்டும் கண்டு பிடிக்க கடிகாரத்தைத் திருப்பி வைக்க வேண்டியதாயிற்று," என்கிறார் இளம் கட்டடக் கலைஞரும், பாரம்பரிய மதிப்பீடுகளை மீண்டும் கையாள்வதில் ஆர்வம் கொண்டவருமான கல்பனா.

ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்தின் மறு சீரமைப்புப் பணிகள், பல வழிகளில் ஒரு விதமான கண்டு பிடிப்புப் பயணமாகவே அமைந்தது. நமக்குள் இருக்கும் கட்டடக் கலை பற்றிய எண்ணங்களையெல்லாம் பின்னுக்குத் தள்ளிவிட்டு ஒரு வித புத்தொளிப் பயிற்சி அனைவருக்கும் தரப்பட்டது. ஒரு குழுவாகப் பணியாற்ற வேண்டிய அவசியம் உணரப்பட்டது. கட்டுமானப் பணிகளில் அது அவசியம்.

"சிறப்புத் தகுதி என்பது அவசியமாகிப் போய்விட்ட இந்தக் காலத்தில் அனைவரின் சிந்தனையிலும் ஒரு மாற்றம் தேவைப்பட்டது.



குழுவில் அனைவரிடமிருந்தும் கருத்துகளைப் பெற்றோம். மிகவும் படித்த தொழிற்முறை விற்பன்னர் முதல், குழுவில் இருந்த தினக்கூலி ஊழியர் வரை அனைவரையும் இந்தப் பயிற்சியில் ஈடுபடுத்தினோம். சில யோசனைகள் எதிர்பாராத இடத்திலிருந்து வந்தன. தன் இளம்வயதில் தான் மேற்கொண்ட சில நுட்பங்களை ஒரு வயதான கட்டுமானப் பணியாளர் நினைவுகூர்ந்து சொன்னார். தன் கருத்துகளை வெளிப்படுத்த அத்தகைய பணியாளர்களும், அவர்கள் சொல்வதைக் கேட்க நாமும் கற்றுக் கொண்டாக வேண்டியிருந்தது," என்கிறார் கல்பனா.

இத்தகைய முயற்சிகள்தாம் இந்தக் கட்டடத்தை அதன் ஆரம்பகால அமைப்பின் கம்பீரத்திற்குக் கொண்டு வந்தன. ஊழியர்-கட்டுமானப் பொருட்களின் விகிதம் பொதுவாக 30:70 என்ற





எதிர்ப்பக்கம்: கிரேட் ஹால் மறுசீரமைப்புக்கு முன்பும் (மேலே) மறுசீரமைப்புக்கு பின்பும் . இந்த மாற்றம், சம்பந்தப்பட்ட அனைவருக்கும் பல பாடங்களைக் கற்றுத் தந்தது.

விகிதத்தில் இருக்கும். ஆனால் இந்தப் பணிக்காக அது 60:40 என்று மாற்றப்பட்டது.

சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்தின் முன்பாக - இந்தோ-இஸ்லாமியக் கட்டடக் கலையின் மகோன்னத உதாரணமாகத் திகழும் ஒரு கட்டடத்தின் முன்பாக - அவ்வளவு பொருத்தமாக அந்தச் சிலையை அமைத்தவர்களின் முன்னுணர்வை எப்படிப் பாராட்டுவது! அந்தச் சிலை: உழைப்பாளர் சிலை!

❋ ❋ ❋

# மக்கள் சொல்கிறார்கள்

ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்தின் மறுசீரமைப்புப் பணிகள் முடிவடையும் கட்டத்தில் இருக்கும் நிலையில் - அது சின்ட்ரெல்லாவைப் போல அழகாக மாறியிருப்பதைப் பலர் பார்க்க முடியும். பார்த்து வியந்திருக்கும் சிலர் தங்கள் கருத்துகளை இங்கே பகிர்ந்து கொள்கிறார்கள்.

தமிழக முன்னாள் ஆளுநர் பி.எஸ். ராம்மோகன் ராவ். “ஆட்சிப் பேரவைக் கட்டடத்தின் சீரமைப்புப் பணிகள் முடிவடையும் நிலையில் அது தன் மூல நிலையின் அழகை மீண்டும் பெறுவது என்பது சென்னையில் கட்டடக் கலை வரலாற்றில் மிக முக்கியவத்துவம் வாய்ந்த ஒன்று. அந்தப் பணி முடிவடைவதும், பம்பாய், கல்கத்தா, பல்கலைக்கழகங்களுடன் சென்னைப் பல்கலைக்கழகமும் 150ஆவது ஆண்டு விழா காணுவதும் ஒன்றாக இணைவது நல்ல பொருத்தம்.

2002இல் நான் சென்னைப் பல்கலைக் கழகத்தின் வேந்தர் என்ற முறையில் அந்த வளாகத்துக்கு விஜயம் செய்தபோது, ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடம் சரியான பராமரிப்பின்றி எப்படி புறக்கணிக்கப்படுகிறது என்பதையும், அதன் குவி மாடங்களில் செடிகள் மண்டி வளர்ந்து எப்படி அது ஏதோ ஒரு ‘பொன்ஸாய் நாற்றங்கால்’ போல இருப்பதையும் அன்றைய துணைவேந்தரிடம் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை. சீரமைப்புப் பணிகள் நடைபெறுவதாக என்னிடம் தெரிவிக்கப்பட்டாலும், இன்றைய துணைவேந்தர் டாக்டர் எஸ்.பி. தியாகராஜன் 2003ஆம் வருடம் செப்டம்பரில் பதவியேற்றதுவரை அப்படிப்பட்ட பணிகள் குறித்த முன்னேற்றம் ஏதும் கண்ணுக்குத் தெரியவில்லை என வருத்தத்தை நான் தெரிவித்தபோது சீரமைப்புப் பணிகள் முழு வேகத்தில் உடனே முடுக்கி விடப்படும் என்று அவர் எனக்கு உறுதியளித்தார்.

அதன்பின்னர், இந்தப் பணியில் சென்னையின் கட்டடக் கலை மற்றும் கலாச்சாரப் பாரம்பரியத்தைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்று உண்மையிலேயே ஆர்வம் கொண்டவர்கள் அழகுணர்ச்சி உள்ளவர்கள், பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் மனம் கொண்டவர்கள், தொழில் நிறுவனங்கள், தர்ம சிந்தனை உடையவர்கள், பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர்கள் போன்ற அனைவரையும் ஈடுபடுத்துவது என்று முக்கியமானதொரு முதல்



மேலே, 2006இல் கவர்னர் பர்னாலா பார்வையிட்ட போது அங்கு நடக்கும் பணிகளில் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சியை INTACH, தமிழ்நாடு பிரிவின் அமைப்பின் அமைப்பாளரும் மற்றும் ஆட்சிப் பேரவை மன்றக் கட்டட மறுசீரமைப்பு மற்றும் பராமரிப்பு அறக்கட்டளையின் சேர்மேன் பி.டி. கிருஷ்ணன் விளக்கிக் கொன்டிருக்கிறார். அன்றைய தமிழ்நாட்டின் கவர்னர் திரு ராமமோகன் ராவ் (வலது கடைசியில்) 2004இல் ஆட்சிப் பேரவை மன்றக் கட்டிடத்தை பார்வையிட்ட போது. அவர் அருகில் இருப்பவர் பி.டி. கிருஷ்ணன் (இரண்டாவதாக வலதிலிருந்து).



முடிவு எடுக்கப்பட்டது. 2003 டிசம்பர் 22ஆம் தேதி 'கிரேட் ஹாலில்' ஒரு சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டு அதில் இந்தச் சீரமைப்புத் திட்டத்தில் இதுவரை செய்யப்பட்டுள்ள, இனி செய்யப்பட வேண்டிய பணிகள் பற்றிய விவரங்கள் தரப்பட்டன. மறுசீரமைப்புப் பணியை வழிகாட்டி நடத்த குழு ஒன்று அமைக்கப்பட்டது. பின்பு 2004 ஜுன் மாதம் ஓர் அறக்கட்டளை பல்கலைக் கழகத்தின் ஒப்புதலோடு நிறுவப்பட்டது. ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்தின் மறுசீரமைப்புப் பணிகளையும், பராமரிப்பு, பயன்பாடு, மற்றும் அந்தக் கட்டடத்தின் ஒட்டு மொத்த நிர்வாகம் ஆகியவற்றைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு கவனித்துக்கொள்ளும் என்று முடிவானது.

மறுசீரமைப்புப் பணிக்காக 1993இல் நிறுவப்பட்ட 'சிறப்பு நிதி'க்கு அரசு அளித்த 50 லட்சம் ரூபாய் தவிர, மேற்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுவரை, பெரிய அளவில் நிதி உதவி ஏதும் வந்து சேரவில்லை. அதன்பின்பு நிலைமை மாறியது. இதுவரை இந்தச் சிறப்பு நிதிக்கு 4.75 கோடி ரூபாய் சேர்ந்திருப்பது திருப்தியளிக்கிறது. இந்த நிதிக்கு இந்திய அரசு ஒரு கோடி ரூபாய் வழங்கியது. இந்த ஒரு கோடி ரூபாய், மத்திய அரசு 150ஆவது ஆண்டு காணும் மூன்று பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றுக்கும் வழங்கிய தலா 150 கோடி ரூபாயில் அடங்கும். இந்தி நிதி முயற்சியை முன்நின்று மேற்கொண்ட முருகப்பா குழுமத்தைச் சேர்ந்த எம்.வி. சுப்பையா அவர்களைப் பிரதிநிதியாகக் கொண்ட 'வெலிங்டன் கார்ப்பரேட் ஃபௌன்டேவின்' அமைப்பின் பங்களிப்பு பாராட்டுக்குரியதாகும். ஆயினும் பல்கலைக்கழகக் கட்டடங்களின் தொன்மையைக் கருத்தில் கொண்டு பார்க்கையில் எதிர்காலத்தில் இந்தத் தொகுப்பு நிதி இன்னும் பெருக வேண்டும். இந்த அறக்கட்டளை, பல்கலைக்கழகத்தின் வளமான பழைய மாணவர்களை இன்னும் பரந்த அளவில் அணுகவேண்டும். தனியார்-பொதுத்துறை இணைந்து சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிப் பேரவை மன்றக் கட்டத்தை மறு சீரமைப்புப் பணியில் இயங்கிவருவது, சென்னையின் பல முக்கியப் பாரம்பரியக் கட்டங்களை மறு சீரமைக்கச் சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்கிறது.

பல்கலைக் கழக பேரவை மன்றக் கட்டடம், நான் படித்துப் பெற்ற மாநிலக் கல்லூரி, ராஜ் பவன், ராஜாஜி மண்டபம் உள்ளிட்ட அண்ணாசாலையில் உள்ள அரசு இல்லம் ஆகியவற்றின் மறுசீரமைப்புப் பணிகளில் உதவியாக இருக்க என் பதவிக் காலத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று நான் சென்னை ஆளுநர் மாளிகையில் நுழைந்ததுமே எனக்கோர் எண்ணம் தோன்றியது. பல்கலைக் கழக ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்தின் மறுசீரமைப்புப் பணிகளோடு அதே முறையில் ஆளுநர் மாளிகையின் மறுசீரமைப்பிக்கு ஆகும் செலவு முழுவதையும் அரசே ஏற்றுக் கொண்டது என்பதொன்றே வித்தியாசம். விரைவில் அப்பணி முடிவடையும். மாநிலக் கல்லூரியின் மறுசீரமைப்புப் பணிகளில் சற்றுத் தொய்வு ஏற்பட்டுள்ளது. அது நீக்கப்பட்டு பணிகள் வேகம் பெற வேண்டும். அரசு இல்லத்தின் மறுசீரமைப்பைப் பொருத்தவரை அது இன்னும் கருத்தாக்க நிலையிலேயே உள்ளது. ஆதரவு எனும் பக்க பலத்தோடு, மக்களின் ஆர்வம் ஓங்கி எழுந்தால்தான் இந்தப் பணியின் கீழ் வெளிச்சம் விழும். சென்னை மாநகர மக்கள் தங்களின் கலாச்சார உள்ளுரத்திற்குப் பெயர் போனவர்கள். மொழி, இசை, நடனம் இவற்றுடன் மாநகரின் பாரம்பரியக் கட்டடங்கள் மீதும் அவர்களின் கலாச்சார உள்ளுரம் கால் பதிக்க வேண்டும்.

* * *

பேராசிரியர் எஸ்.பி. தியாகராஜன் (துணை வேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம்) அவர்கள் ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்தை மீண்டும் அதன் மூலமுதல் அழகுக்குக் கொண்டு வரும் வகையில் மறுசீரமைப்புப் பணிகளைத் தீவிரமாக மேற்கொள்ள எடுத்த முடிவு பற்றி நினைவு கூர்கிறார்.

“ஆட்சி மன்றக் கட்டடம் சென்னைப் பல்கலைக்கழகத்தின் முதல் கட்டடம் என்கிற வரலாற்றுச் சிறப்பு மட்டும் கொண்டது அல்ல. சென்னையின் பாரம்பரிய நினைவுச் சின்னங்களில் மிகவும் கம்பீரமானதும் அதுவே.

இப்படிப்பட்ட கட்டடங்களின் பாரம்பரியத் தன்மை காப்பாற்றப்பட வேண்டும் என்பதன் அவசியம், கலையின் முக்கியத்துவம் உணரப்பட்டால் புரியும்.

மனித நாகரிகத்தில் கலை என்பது மிக முக்கியமான பங்கு வகிக்கிறது. சமுதாயத்தை ஒன்றிணைக்கும் உறுதியான பசையாக அது விளங்குகிறது. கடந்தகால வரலாற்று மேன்மைகள், நிகழ்கால கலாச்சார மறுமலர்ச்சி, சமுதாயத்தின் எதிர்கால எதிர்பார்ப்புகள் இவற்றுக்கிடையே தகவல் பரிமாற்றத்திற்கான பொது மொழி அது. ஓவியங்கள், சிற்பங்கள், கட்டடக்கலை, நாடகம், இசை, நாட்டியம், கவிதை போன்றவை இன்றி இருட்டான, காலி ஆன்மாக்களால் எப்படி ஒரு சூழலை மேம்படுத்த இயலும்? எனவேதான் ஒழுக்கத்தின் அடிப்படையிலான கலை, கல்வியில்

முக்கிய இடம் பெற வேண்டும் எனது நான் கருதுகிறேன். இது கல்வியிலும் மாணவர்கள் சிறக்க உதவும் என்று நம்புகிறேன். இந்த வகையில்தான் நான் ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்தின் மறுசீரமைப்பு குறித்து நினைவுகூர விரும்புகிறேன்.

நான் தரமணியில் மருத்துவ அறிவியல் முதுநிலைக் கல்வி நிறுவனத்தின் நுண்ணுயிரியல் பிரிவில் பணியாற்றியபோது சேப்பாக்கம் வளாகத்துக்கு வந்த சமயங்களில் ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்தின் பரிதாப நிலைகண்டு பரிதவித்துப் போயிருக்கிறேன். எனது பல மேல்நாட்டுப் பயணங்களில் கிளாஸ்கோ பல்கலைக் கழகம், ஸ்காட்லாந்தில் செயின்ட் ஆன்ட்ரூ பல்கலைக்கழகம், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் மற்றும் அதன் உள்ளடங்கிய பல கல்லூரிகள், உலகம் முழுவதிலுமுள்ள பல்வேறு கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றுக்குச் சென்று அவற்றை பார்க்கும் போதெல்லாம் அந்தத் தவிப்பு என்னுள் அதிகமானதுண்டு. அவர்கள் தங்கள் பாரம்பரியக் கட்டடங்களைப் பாதுகாத்துப் பராமரிப்பதில் செலுத்தும் துல்லியமான கவனம், அந்தக் கட்டடங்களைக் கல்வி அருங்காட்சியகங்களாக மாற்றுகின்ற தொழில்முறை தேர்ச்சி ஆகியவை 'ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்தின்மீது நமது பல்கலைக்கழகம் அது போல ஏன் அக்கறை எடுத்துக் கொள்ளக் கூடாது? என்ற கேள்வியை எனக்கு நானே பல முறை கேட்க வைத்ததுண்டு. நான் சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகப் பதவியேற்றதும் அந்தக் கேள்விக்கு விடைகாண முயன்றேன். அதிர்ஷ்டவசமாக எஸ். முத்தையா, பி.டி. கிருஷ்ணன், எம்.வி.சுப்பையா, தாராமுரளி போன்ற சென்னை பாரம்பரியப் பாதுகாப்பு ஆர்வலர்கள் பலர் இந்த முயற்சியில் ஒன்றாக இணைந்தார்கள். இந்தக் கட்டடத்தின் மறுசீரமைப்பு, பல்கலைக் கழகத்தின் 150ஆவது ஆண்டு விழாக் கொண்டாட்டங்களுடன் ஒன்று சேரவேண்டும் என்ற நோக்கம் கொண்டார்கள். அப்போது தமிழக ஆளுநரும், சென்னை பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாண வருமான ராம்மோகன்ராவ் அவர்களும் இப்பணியில் பெரும் ஆர்வம் காட்டினார். 'ஹிஸ்டாரிக் ஸ்காட்லாந்த்', மற்றும் இங்கிலாந்தின் சார்லஸ் வாலேஸ் அறக்கட்டளையைச் சேர்ந்த தேர்ந்த நிபுணர்கள், ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்தின் மறுசீரமைப்புக்கான தொழில்நுட்ப அறிக்கையைத் தயாரித்துத் தந்து, அந்த முறையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு இக்கட்டடம் சீரமைக்கப் படுமேயானால் அதன் மூல முதலான தொன்மை அழகு இன்னுமொரு 150 ஆண்டுகளுக்கு நிலைத்து நிற்கும் என உறுதி தந்தார்கள். மூன்று ஆண்டுகளாக நடைபெற்று வந்த அந்தப் பணி இப்போது நிறைவடைய இருக்கிறது. இந்த இமாலய முயற்சியில் தங்களை இணைத்துக் கொண்ட அனைவருக்கும் நன்றி. மறுசீரமைக்கப்பட்ட சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடம் திறப்பு விழாவுக்காக காத்திருக்கிறது.

சென்னையைப் பொறுத்தவரை இந்தக் கட்டடம் நம்நாட்டின் 'வேற்றுமையில் ஒற்றுமை' என்ற சித்தாந்தத்தின் சின்னம். இந்தக் கட்டடத்தின் பல கண்ணாடி வடிவங்களில் அந்தக் காலத்தில் ஒரு சீரற்ற தன்மை வேண்டுமென்றே அமைக்கப்பட்டிருந்தபோதும், இதன் இந்திய மொகலாய கட்டட வடிவமைப்பு மட்டுமன்றி கலர்க்கோலங்கள், வண்ணக் கண்ணாடிகளின் அமைப்பு போன்றவை ஓர் இதமான நல்லிணக்கத்தைச் சுட்டிக் காட்டுகின்றன. இந்த ஆட்சிச் பேரவை மன்றக் கட்டடத்தில் 'சென்னைப் பல்கலைக்கழக வரலாற்று அருங்காட்சியகம்' ஒன்று விரைவில் அமையும் என்பது என் நம்பிக்கை. இந்த உன்னதமான பல்கலைக் கழகத்தின் சீரிய வரலாற்றையும், சாதனைகளையும் வருகின்ற ஆண்டுகளில் பல்லாயிரக்கணக்கான மாணவ, மாணவிகளுக்கு இந்த அருங்காட்சியகம் பறைசாற்றிக் கொண்டிருக்கும். இக்கட்டடத்தின் வடிவமைப்பு மூலமாக நன்னெறி முறைகள் வகைப்பட்டு அவை கொந்தளிப்புக்கு உள்ளாகி யிருக்கும் மனங்களுக்கு இதம் தரும். பணத்தாலும் மனதாலும் இக்கட்டட மறுசீரமைப்புப் பணிக்குப் பேராதரவு தந்த தொழிலதிபர்கள், தரும சிந்தனையாளர்கள், கல்வியாளர்கள், முன்னாள் மாணவர்கள், இந்நாள் மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோருக்கு என் இதயபூர்வமான நன்றியை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். இந்தப் புனிதமான முயற்சி பல்கலைக்கழகச் சமுதாயத்தினரிடையே நன்னெறிக் கோட்பாடுகளையும் வாழ்வியல் மதிப்பீடுகளையும் மேலும் மலரச் செய்யட்டும்."

* * *

சென்னைப் பல்கலைக்கழகத்தின் முதல் பெண் பதிவாளர் ஆனி மேரி ஃபெர்னாண்டஸ் நினைவு கூர்கிறார்.

"1975 இல் ஒரு விவாதப் போட்டியில் கலந்து கொள்வதற்காக ஒரு முதுநிலைப் பட்டப்படிப்பு மாணவியாக நான் சேப்பாக்கம் வளாகத்துக்கு வந்தபோது ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடம் என்னை வியக்க வைத்தவைகளில் ஒன்றாக இருந்தது. இதன் உயரமான கூரையும், பிரமாண்டமான தூண்களும் ஏதோ நான் ஆக்ஸ்போர்டு அல்லது



கிரேட் ஹாலின் வடக்கு பகுதியில் உள்ள நுழைவாயில் மறுசீரமைப்பிற்கு பிறகு.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக வளாகத்தில் நுழைந்திருப்பது போன்ற உணர்வை என்னுள் ஏற்படுத்தின. நான் அவற்றின் புகைப்படங்களைக் களஞ்சியங்களில் மட்டுமே அப்போது பார்த்திருந்தேன். மிகப்பெரும் திறமை எதிர்பார்க்கப்படும் சூழலில் என்னால் சமாளிக்க முடியுமா என்ற லேசான அச்சமும் ஏற்பட்டது. சமாளிப்பேன் என்ற நம்பிக்கையை வளர்த்துக் கொண்டேன். சென்னைப் பல்கலைக்கழக விவாதக் குழுவில் நான் பங்கேற்றேன்.

முப்பது வருடங்கள் கழித்து அதே பல்கலைக் கழகத்தின் பெருமைக்குரிய பதிவாளர் பதவியை நான் வகிப்பேன் என்று அப்போது கனவிலும் கருதவில்லை. என்னை அன்று ஊக்குவித்த மாதிரியே பரம்பரை பரம்பரையாக இளைய சமுதாயத்தினரை இப்பல்கலைக் கழகம் இன்றும் ஊக்குவித்து வருகிறது. ஒரு பல்கலைக் கழகம் 150 ஆண்டுகளைக் காணும் தருணத்திலும், ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடம் மறுசீரமைப்பு பெறும் தருணத்திலும் பதிவாளர் பதவியில் இருப்பது என்பது ஒரு வரம் என்றே நான் கருதுகிறேன்.

ஆட்சிப் பேரவை மன்றக் கட்டட மறுசீரமைப்புப் பணிக் குழுவில் ஒருவராக இருக்கும் நான், எனக்கு முன்னே இருந்தவர்களின் சுயநலமற்ற பங்களிப்பைப் போற்றுவது அவசியம். அவர்களது அத்தகைய பங்களிப்பு இன்றி இன்றைய பெருமைமிகு தருணம் சாத்தியமாகி இராது. மறுசீரமைப்பு முயற்சி பலரது அர்ப்பணிப்பு உணர்ச்சியை உள்ளடக்கியது. இந்த நாட்டின் இளைஞர்களின் மனதில் பலப்பல ஆண்டுகளாக இந்தக் கட்டடம் ஏற்படுத்தியிருக்கும் உணர்வை நிரந்தரமாக்கும் முயற்சி இது. இந்த முயற்சி பல புகழ்பெற்ற பார்வையாளர்களை இந்தப் பல்கலைக் கழகத்திற்கு வருகைதர வைத்தது. உயர்கல்விக்கான இந்த உன்னதமான மையத்தின் வளர்ந்து வரும் சர்வதேசப் புகழுக்கான பங்களிப்பை இம் முயற்சி செய்துள்ளது. பல திறமைகளை உள்ளடக்கிய கலை, கைவினை வல்லுநர்களின் அருமையான பணி இத்தகைய பாரம்பரியப் புகழ் வாய்ந்த கட்டடத்தை அதன் மூல முதலான அழகுக்கு மீண்டும் கொண்டு வருவதில் நமக்குக் கிடைத்திருக்கிறது. பாரம்பரிய நினைவுச் சின்னக் கட்டடங்களை எப்படி மறுசீரமைப்பது என்ற தொழில் நுட்பத்தைப் பல்கலைக் கழகத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்ற அளவுக்கு இது குறித்த பேரறிவு கிடைத்துள்ளது.

150ஆவது ஆண்டுக்கான முத்திரையில் ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடமும், ‘1857லிருந்து மேன்மை மேம்பாடு’ என்ற வாசகமும் இடம் பெற்றிருப்பது பொருத்தமே. என்னைப் போன்றே பல முன்னாள் மாணவ மாணவியர் இதன் உண்மையை உணர்வார்கள்.

* * *

பி.டி. கிருஷ்ணன்: 1988ஆம் ஆண்டு கட்டடக் கலைப்பள்ளியின் மாணவரான ஷாஹ்ர்யார் என்பவர் என்னை அணுகி இன்டாக் (INTACH)கின் ஒரு திட்டத்துக்காகச் சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடம் பற்றி ஆவணப்படுத்த தனக்கு வழிகாட்டி உதவுமாறு கேட்டுக் கொண்டார். அவருக்கு அப்போது உதவியவர்களில் ஒருவரான கல்பனா, பின்னர் பல ஆண்டுகள் கழித்து ‘இன்டாக்’ மறுசீரமைப்புப் பணிக்குழுவில் ஒரு முக்கியமான உறுப்பினர் ஆனார். அந்தப் பணியின் போதுதான் இந்தக் கட்டடம் இருந்த மிக மோசமான நிலைமை பற்றித் தெரியவந்தது. மறுசீரமைப்புக்கான ஓர் இயக்கத்தையே அந்த நிலைமை வேகம் பெறச் செய்தது. ஒரு மகாராணிக்கு உகந்த ஒரு கட்டடம் (1961இல் இங்கே இங்கிலாந்து மகாராணிக்கு வரவேற்பு தரப்பட்டது) இருபதே வருடங்களில் இப்படிச் சீர் குலைந்து போனது என்பது வெட்கப்பட வேண்டிய ஒன்று. அதைச் சீரமைக்க மேலும் ஒரு பதினைந்து ஆண்டுகள் தேவைப்படும் என்பது இன்னும் வேதனைக் குரியதாக அமைந்தது. மறுசீரமைப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டன. கலைக்கப்பட்டன. கட்டடமோ மோசமாகிக் கொண்டே போனது. இறுதியில் ஒத்த மனம் கொண்டவர்கள் ஒன்று சேர நிகழ்வுகள் தொடங்கின.

மறுசீரமைப்புப் பணிகள் தொடங்க ஏற்பட்ட மன்னிக்க முடியாத தாமதத்தால் நன்மை ஒன்றும் ஏற்பட்டது என்று தான் சொல்ல வேண்டும். காவல்துறை தலைமையகத்தைக் காப்பாற்ற வேண்டி நடைபெற்ற போராட்டம் மக்களிடையே ஏற்படுத்திய உணர்வு, இந்தக் கட்டடம் மறுசீரமைப்பு பற்றிய விளம்பரம் மக்களிடையே விரைவில் கொண்டுபோய்ச் சேர்த்தது. ஆதரவு பெருகியது. வெறுமனே பல்கலைக்கழகத்துடன் சம்பந்தப்பட்டது இது என்பதிலிருந்து மாறி இந்தக் கட்டடம் இருந்த மோசமான நிலைமை சென்னை நகரின் துயரமாகவே மாறிப்போனது.

2003ஆம் ஆண்டு. அழிவிலிருந்து மறுசீரமைப்புக்கான செயல் மேடை தயாரானது.

மறுசீரமைப்புக்கான பணி சதுரங்க விளையாட்டைப் போன்று அமைந்தது. இந்தக் கட்டடம் சவால்களை விடுத்துக் கொண்டே வர, அதை எப்படி எதிர்கொள்வது என்ற சவால் மறுசீரமைப்புக் குழுவுக்கு எழுந்து கொண்டே இருந்தது. வெள்ளையடிக்கப்பட்டிருந்த சுவர்களில் பல அடுக்குகளுக்குக் கீழே இருந்த சுவர்க்கோலங்கள் கண்டு பிடிக்கப்பட்டபோது இந்த சவால் தொடங்கியது. அவை மறுசீரமைக்கப் பட்டபோது 'கிரேட் ஹால்' முழுவதும் வண்ணக் களஞ்சியமாக மாறிவிட்டது.



மறுசீரமைப்பின் போது தென்கிழக்கு பகுதியிலுள்ள கோபுரம். எதிர்பக்கம் கோபுரத்தின் எழில் மிகு தோற்றம் பராமரிப்பு பணிகள் முடிந்த பின்னர்.

சில புதுமையான பொறியியல் யுக்திகளைப் பயன்படுத்திச் சுவர்க்கோலங்களைச் செம்மைப்படுத்தும் முயற்சிகளை வெற்றிகரமாக மேற்கொண்டோம். மெட்ராஸ் பிளாஸ்டர் எனப்படும் கலவை எங்களுக்கான அடுத்த சவாலாக அமைந்தது. மூல முதலில் கையாளப்பட்ட அதே கலவையை எப்படி உருவாக்குவது என நாங்கள் பரிசோதனைச் சாலைகள், கற்கரங்கங்கள் என்று அலைந்து திரிந்தோம். சரியான விகிதத்தின் அளவைக் கண்டறிந்தோம். கூரையை மறுசீரமைப்பது அவ்வளவு சிக்கலாக இருக்காது என்று முதலில் தோன்றியது. ஆனால் அப்பணியைக் கையிலெடுத்த போதுதான் புதிர்கள் வெளிப்பட்டன. செவ்வகம், சதுரம் என்று அந்தக் கித்தான்களின் அறைகள் வேறுபட்டன. மூலமுதல் வடிவம் எப்படி என்பதற்கான எந்தத் தெளிவும் கிடைக்கவில்லை. கிழிந்த துண்டுகளிலிருந்து மிகச் சில விவரங்களை வைத்துக்கொண்டு முன்னேறினோம்.

பெரிய பிரச்சினை அப்புறம்தான் ஏற்பட்டது. வடமேற்கு நுழைவாயிலின் வளைவுகளில் தீவிரமான விரிசல்கள் ஏற்பட்டிருந்தன. கூரை சரியக்கூடிய அபாயம் புரிந்தது. அடிப்படைக் கட்டடத்தை அசைக்காமல் வளைவை மறுசீரமைப்பதில் வெற்றி கண்டோம். இந்தப் பிரிவில் புதிய பாடம் கற்றோம். கிரேட் ஹாலின் வடக்கு மூலையில் காணப்பட்ட மிகப் பெரிய விரிசல்கள், சிவப்பு ஓடு பாவுதலில்



கையாளப்பட்டிருந்த எதிரெதிர்ச் சாய்வுப் பாணியின் சிதைவுகளின் விளைவு என்பதைக் கண்டறிந்து சரிப்படுத்தினோம். இப்படியே பணி தொடர்ந்தது. ஒவ்வொரு பிரச்சினைக்கும் 'இன்டாக்' குழுவிடம் தீர்வுக்கான விடை இருந்தது. இப்போது இறுதிக்கட்டமாக நான்கு குவி மாடங்களைச் செப்பனிடும் மறுசீரமைப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகிறோம். இது கலைஞர்களின் உடல் உறுதியைச் சோதிக்கும் பணி.

ஆட்சிப் பேரவை மன்ற மறுசீரமைப்புப் பணிகள் நமது பாரம்பரிய தொழில்நுட்பத்தின் நுணுக்கங்கள் குறித்து எங்கள் கண்களைத் திறந்தன. இந்தக் கட்டடத்தையும் மீறிச் சென்ற முக்கியத்துவம்தான் இப்பணியின் உண்மையான சிறப்பு.

இதன் மூலம் இன்னொரு கேள்வியும் எழுகிறது. நவீனம் என்ற பெயரில் காலத்துக்குச் சரிப்பட்டு வராத கோட்பாடுகளையும், மிகச் சாதாரணமான கருத்துகளை ஆதரிப்பதும், புதுமைகளை வரவேற்காமலும் வரலாறு மற்றும் பாரம்பரிய அறிவு முறைகளை மறுத்தும் வருகிற ஒரு நிர்வாகத்தை எப்படி நியாயப்படுத்த இயலும் என்ற கேள்வியே அது.

இந்த மறுசீரமைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக இப்பணியின் வெவ்வேறு நிலைகளை நாங்கள் ஆவணப்படுத்தியிருக்கிறோம். இதனால் கிடைக்கும் அறிவுபூர்வமான, ஆக்கபூர்வமான தகவல்கள் இது போன்ற மறுசீரப்பைப் பணிகளை நிர்வாகத்தோடும் கட்டுமான விதங்களோடும் ஒருங்கிணைக்க உதவும். இதன்மூலம் நமது கடந்த காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் இடையே ஒரு பாலத்தை உருவாக்க முடிகிறது.

ஒரு நூலைப் பதிப்பிக்கவும் நாங்கள் திட்டமிட்டு வருகிறோம். பல்வேறு விவரங்கள் அதில் கிடைக்கும். நமது பாரம்பரியக் கலையின் வடிவமாக ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்தைக் காட்டுவது மட்டுமின்றி, எதிர்காலத்தைத் திட்டமிட எப்படி இத்தகைய பராமரிப்புப் பணிகள் பெரும் பங்காற்ற முடியும் என்பதையும் அந்த நூல் மூலம் உணர்த்த இயலும். மேலும் இப்படிப்பட்ட தொன்மை போற்றும் பணிகளின் ஆர்வம் கொண்டோருக்கு உணர்த்தவும் முடியும்.

இந்த மறுசீரமைப்புப் பணியில் நாங்கள் உச்சிக்கும் சென்றோம். பள்ளத்திலும் விழுந்தோம். இந்தப் பணி இம்மாநகரில் ஒரு வித்தியாசத்தைக் கொண்டு வரும் என்பதும், சென்னை வாழ் மக்கள் அந்த அடையாளம் கண்டு கொள்வார்கள் என்பதும் என் நம்பிக்கை.

* * *

லார்ஸன் அண்ட் டூப்ரோ கம்பெனியின் மூத்த நிர்வாக துணைத் தலைவரும் (ஆபரேஷன்ஸ்), குழுவின் உறுப்பினருமான கே.வி.ரங்கசுவாமி

"இன்று பெருநகரங்களிலும், மற்றும் முக்கியமான நகரங்களிலும் வேகமாகப் பெருகிவரும் உள்கட்டமைப்புப் பணிகளின் வளர்ச்சி பாரம்பரியக் கட்டடங்களுக்கு ஓர் அச்சுறுத்தலாகவே அமைகிறது. அதிலும் குறிப்பாக எதிர்கால சந்ததியினருக்காகப் போற்றிப் பராமரிக்கப் பட வேண்டிய நமது பாரம்பரியத்தின் ஒரு பகுதியான நினைவுச் சின்னங்கள் குறிப்பிடத்தக்கவை. எனவே இத்தகைய பணிகளில் நாம் அனைவரும் ஒன்று சேர வேண்டியது அவசியமாகிறது. இந்த நாட்டுக்குக் கட்டடங்கள் கட்டுபவர்கள் என்ற முறையில், நிகழ்காலத்திற்காகவும், வருங்காலத் தலைமுறைகளுக்காகவும் இத்தகைய நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்க வேண்டிய பணியில் 'எல் அண்ட் டி'யைச் சேர்ந்த எங்களின் பங்கு முக்கியம் என்பதை நம்புகிறோம்.

ஒரு சமுதாயத்தின் வரலாற்றில் ஒரு பாரம்பரியக் கட்டடத்தின் முக்கியத்துவம் மிகப்பெரியது. அது அதை உருவாக்கியவரின் சிந்தனையையும், கட்டடக்கலையின் சிறப்பம்சங்களையும், அதனுள் பொதிந்துள்ள விழுமங்களையும் வெளிப்படுத்தக்கூடியது. நமது தொன்மையின் சின்னங்களாக மட்டும் இராமல், கட்டுமானப் பொருட்களின் வளர்ச்சியையும், கட்டுமான முறைகளையும், தொழில்நுட்ப முன்னேற்றத்தையும் வெவ்வேறு காலவாரியாக அவை நமக்குச் சுட்டிக்காட்டுகின்றன.

அந்த வகையில்தான் பெருமைக்குரிய நமது கலாச்சார பாரம்பரியச் சின்னமான சென்னைப் பல்கலைக்கழக ஆட்சி மன்றப் பேரவைக் கட்டடத்தின் மறுசீரமைப்புப் பணியில் பல்வேறு கைவினைக் கலைஞர்களையும், திறமைசாலிகளையும் எல் அண்ட் டி அமர்த்தியது. இந்தியத் தொல்லியல்துறை, INTACT எனப்படும் 'இண்டியன் நேஷனல் டிரஸ்ட் ஃபார் ஆர்ட் அண்ட் கல்சுரல் ஹெரிடேஜ் ஆகியவற்றின் உதவியுடன் தமிழ்நாடு முழுவதிலிருந்தும் தேவைப்படும் பொருட்களைச் சேகரித்தது. வயதில் மூத்த அனுபவத்தில் பழுத்த ஸ்தபதிகள், சுண்ணாம்புக் கலவையைப் பயன்படுத்துவதில் தேர்ந்த கொத்தனார்கள், வர்ணம் பூசுவோர், தச்சுக் கலைஞர்கள், மின் பணியாளர்கள், குழாய், கழிவறை அமைப்பு, நிபுணர்கள் மட்டுமன்றிப் பல துணை ஒப்பந்தக்காரர்கள், சிறப்பு நிறுவன ஊழியர்களையும் அமர்த்தினோம். இது போன்ற மறுசீரமைப்புப் பணிகளில் ஆழ்ந்த அனுபவம் பெற்றவர்களாக அவர்கள் இருந்தனர்.

இப்பணியின் ஒவ்வொரு கட்டத்திலும் மிகுந்த அக்கறை எடுத்துக் கொள்ளப்பட்டது. மேலும் இப்படிப்பட்ட பாரம்பரியக் கட்டடங்களை மறுசீரமைக்கும் பணியில் பாரம்பரியக் கட்டடப் பொருட்களையும், மூலமுதல் கட்டடத்தில் பயன்படுத்தப்பட்ட தொழில் நுட்பத்தையும் பயன்படுத்த வேண்டும் என்ற சர்வதேச பராமரிப்பு விதிமுறைகளையும் நாங்கள் கடைப்பிடித்தோம்.

இப்பணியில் கை வேலைகளில் மிகவும் துல்லியம் அவசியப்பட்டது. சுவர்களிலும், கூரைகளிலும் ஏற்பட்டிருந்த விரிசல்களை வெல்சில்வர் கொம்புகளைக் கொண்டு 'தைப்பது' சிதிலமடைந்திருந்த செங்கற்களுக்கு அதே மாதிரியான கற்களைக் கொண்டு அந்தப்பகுதியைச் சரிப்படுத்துவது, பூச்சு வேலைகளில் முதலில் எப்படிப்பட்ட கலவையைப் பயன்படுத்தினார்களோ அதே மாதிரி தயாரித்துப் பயன்படுத்துவது, பின்னர் அதை ஒளியேற்றும் கற்கள் கொண்டு பணிமுடிப்பது, சுவர்க்கோலங்களை மூலமுதல் வடிவின்படி முடிப்பது, கதவுகள், ஜன்னல்களைப் பிரித்து, பழுதுபார்த்து, மீண்டும் அமைப்பது, கண்ணாடிகள் இருந்த இடத்தில் மீண்டும் அதே மாதிரி அமைப்பது, மரவேலைப்பாடுகளிலும் அப்படியே செயலாற்றுவது, குவி மாடங்களைப் பழுதுபார்ப்பது போன்றவை கை வேலைகளில் குறிப்பிடத்தக்கவை.

வீட்டில் மாவரைக்கப் பயன்படும் வெட் கிரைண்டரைப் பயன்படுத்தி சுண்ணாம்புக் கலவையைத் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருந்தது தவிர, இப்பணியில் சாதிக்காய், வெல்லம், பால், முட்டைகள், இயற்கையான வண்ண மண், தேங்காய் மூடிகள், தயிர், மணல், பர்மா தேக்கு, வண்ணச் சாயக் கண்ணாடிகள், இயற்கை வர்ண பெயிண்டிங் போன்றவையும் பயன்படுத்தப்பட்டன.

இரண்டு வருடங்களுக்கு முன்பு தொடங்கப்பட்ட இப்பணி குறித்த காலத்தில் முடிவடைந் திருப்பது எனக்குப் பெரு மகிழ்ச்சியைத் தருகிறது. இப்போது இக்கட்டடம் தனது மூலமுதல் அழகையும், கம்பீரத்தையும் மீண்டும் பெற்றிருக்கிறது. 125ஆண்டுகளுக்கும் மேலாக இருக்கும் இந்தப் பாரம்பரியக் கட்டடத்தின் மறுசீரமைப்புப் பணிகளில் இந்தியாவின் மிகப்பெரிய கட்டுமான நிறுவனமான எல் அண்ட் டி குறிப்பிடத்தக்க பங்காற்றியிருப்பது குறித்து நான் மகிழ்ந்தேன்.

* * *

சென்னையின் தலைசிறந்த ஓவியக் கலைஞர்களில் ஒருவரான தோட்டா தரணி கூறுவது

வங்கக் கடற்கரையின் மீதுள்ள சென்னைப் பல்கலைக்கழகத்தின் அற்புதமான, அடையாளச் சிறப்பு வாய்ந்த செனேட் ஹவுஸ் கட்டிடத்தை மீண்டும் ஒரு முறை கண்டறியும் வாய்ப்பைப் பெற்றேன். கட்டிடத்தினுள் நுழையும்போது அதற்கே உரிய ஒன்றிணைந்த பரிமாணத் தோற்றமும் அப்பழுக்கற்ற அந்த கட்டிடக் கலை சாதனைப் படைப்பின் அளவும் என்னை கொள்ளை கொண்டன. அதன் மர வேலைப்பாடு தரையின் மீது உட்கார்ந்து ஒவ்வொரு திசையையும் நோக்கி சிந்திக்கத் தொடங்கினேன்; வடக்குத் திசையில் செழுமையான வண்ண வகைகளின் தொகுப்பு, தென் திசையில் நுணுக்கமாக உருவாக்கப்பட்ட திரை வேலைப்பாடு, கிழக்குத் திசை நடைபாதையின் தனிச் சிறப்பான கதவுகள் மற்றும் வண்ணம் தீட்டப்பட்ட ஜன்னல்களின் மூலம் ஒளி வீச்சு, மேற்குத் திசை நடைபாதையில் அமைதியும் கம்பீரமும் கொண்ட ஸ்தம்பங்கள் மற்றும் தூண்கள். ஒட்டுமொத்தக் கட்டிடம் மட்டுமின்றி அதன் ஒவ்வொரு சிறிய சதுரமீட்டரும், ஒப்பற்ற ஓவியக் கலைஞரின் இணையற்ற கலைப் படைப்பாகத் தென்பட்டது. இக்கட்டிடம் தன்னுடைய இரண்டாம் பிறவியில் மகிழ்ந்து கொண்டிருக்கிறது. நாம் ஒரு காலத்தில் அனுபவித்து மகிழ்ந்து, பின்னர் அதை இழந்ததற்குப் பிறகு, இப்போது திகைக்க வைக்கும் விதத்தில் மீண்டும் திரும்பப் பெற்ற அதே காலத்திற்கு அழைத்துச் செல்லும் இந்த பாரம்பரியக் கட்டிடத்தின் மகிமையைப் பார்த்து மகிழ்ச்சியில் திளைக்கிறோம். கட்டிடக் கலைஞர் சிஷோமின் செனேட் ஹவுஸுக்கும் புதுப்பிக்கப்பட்ட அதன் பொலிவுக்கும் நன்றி சொல்ல வேண்டும்.

* * *

ஆட்சிப்பேரவை மன்றக் கட்டடத்தைப் பார்வையிட்ட பின்னர் டாக்டர் அஸ்ரஃபி எஸ். பகத் (கலை வரலாற்றாளர்)

“பெரும்பாலும் சிவப்புச் செங்கற்களைக் கொண்டும், கிரானைட் தூண் வரிசைகளோடும் வண்ணமயமாகக் காட்சியளிக்கும் இந்தக் கட்டடம் என்னை வேறு உலகத்திற்கே அழைத்துச் சென்று விட்டது. பிரமாண்டத்திலும், உயரத்திலும் இது என்னை வியக்க வைக்கிறது. தன் அதிகாரபூர்வ நோக்கத்தை இது தெளிவாகப் பறைசாற்றுகிறது. கண்ணியத்தை வெளிப்படுத்துகிறது. இக்கட்டடத்தில் இந்திய மற்றும் காலனி அரசின் அம்சங்கள் மிகவும் புத்திசாலித்தனமாக வெளிப்படுகின்றன. இந்திய மொகலாயக் கட்டடப் பாணி என்று பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் இந்த அற்புதத்தில அலங்கார நுணுக்கங்கள் எவ்வளவு சரியான விகிதத்தில் செதுக்கப்பட்டிருக்கின்றன. தூண்களின் வரிசை பிரமிக்க வைக்கிறது. கிரானைட் தூண்களின் தங்கள் இயல்பான வண்ணத்தில் இதன் அழகை மிளிரச் செய்கின்றன. கலைப் பண்புக் கூறுகள் மிக அழகாக வெளிப்பட்டிருக்கின்றன. தூண்களின் அழகு கண்களை விரிய வைக்கின்றன. கைப்பிடிச்சுவர்களில் உள்ள சின்னச் சின்ன தூபிகள், மூலைகளில் காணப்படும் கூடார வடிவங்கள், அழகாக வண்ணம் பூசப்பட்டுள்ள குவி மாடங்கள் எல்லாமே கொள்ளை அழகு.

உள்ளே இருக்கும் பரந்த இடம் உண்மையிலேயே பரவசப்படுத்துகிறது. மென்மையான சலவைக்கற்களின் வெண்மை, சுவர்களின் சிவப்பு, உயர்ந்து நிற்கும் நீள் சதுரங்களில் குழைகாரை வேலைப்பாடுகள், மரத்தில் கலை நுணுக்கங்கள், ஒளி அமைப்பின் நளினங்கள், எல்லாமே கண்களுக்குத் தனி அனுபவம். உள்ளே காணப்படும் அந்தப் பரந்த இடம் ஒரு கம்பீரம். ஓர் உட்பகுதி இப்படிப்பட்ட உணர்வுகளை ஏற்படுத்தும்போது அது தன் நோக்கத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்கிறது என்றுதான் பொருள்.

உள்ளே நான் சுற்றிவந்தபோது, ஏதோ ஒரு தேவாலயத்தின் உட்பகுதி திட்டமிடப்பட்டிருப்பதைப் போலவே எனக்குத் தோன்றியது. மேலை நாட்டுத் திட்டம், கீழ்த்திசை கைவண்ணம் இரண்டின் இனிமையான சங்கமம் இது. உள்ளூர் பாரம்பரிய கலைத்திறமை மரத்தில் பிரதிபலிக்கிறது.

நீண்ட கூடத்தின் இறுதியில் காணப்படும் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய மரத்திரை அஜந்தாவில் காணப்படும் புத்த கூடங்களில் காணப்படுவதை ஒத்திருக்கின்றன. இஸ்லாமிய கலை வடிவுடன் கூடிய வளைவுகள் உட்பகுதி முழுவதற்குமே கம்பீரமான ஒரு கண்ணியத்தைத் தருகின்றன.

இந்த மாபெரும் கட்டடத்திலிருந்து மனமில்லாமல் வெளியே வந்தபோது 19ஆம் நூற்றாண்டில் காலனி ஆதிக்கத்தின் கீழிருந்த சென்னையின் அமைதிச் சூழலிலிருந்து 21ஆம் நூற்றாண்டில் இருக்கும் சென்னையின் பரபரப்பு, கூச்சல், மாசு இவற்றுக்கு ஏற்றபடி என்னைப் பொருத்திக் கொள்ள சற்று நேரம் பிடித்தது.

* * *



மறுசீரமைப்பில் L&T ECC நிறுவனத்தின் பணிகள் முழு மூச்சுடன் நடப்பதைக் காணலாம்.

துணைப் பதிவாளரும், துணை வேந்தரின் செயலாளருமான எஸ்.கே. ராஜன் கூறுகிறார்.

“பல்கலைக்கழக ஊழியர்கள் பெரிதும் மரியாதையுடன் நேசிக்கும் கட்டடம் ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடம். ஒவ்வொரு முறை அதன் வழியே செல்லும்போதும் நாங்கள் அதன் மீது கண் பதிக்கத் தவறுவதில்லை. அது ஓர் இயல்பாகவே ஆகிவிட்டது.

குவிமாடங்கள் தூபிகளுக்கு அருகே வினாயகர், முருகர் மற்றும் பல கடவுளர்கள் புனிதப்படுத்துகிறார்கள்.

இந்தக் கட்டடத்தின் பெரிய கூடத்தில் பல்வேறு பெரிய மனிதர்கள் - சர்வதேச அளவில் தேசிய அளவிலும் கொண்டாடப்பட்டவர்கள் - பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட அந்த பொன்னான நாட்கள், இதன் வழியே நடக்கும்போது நினைவுக்கு வரும். இங்கு நடைபெற்ற பட்டமளிப்பு விழாக்களை நாங்கள் இன்னும் நினைவில் கொண்டிருக்கிறோம். அந்த விழாக்களின்போது இந்தக் கட்டடம் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்படுவதையும், பட்டம் பெறுகிறவர்கள் அதற்கான உடையை அணிந்து கொள்வதையும், மேடையில் அமர்ந்திருக்கும் பிரமுகர்களையும் இப்போதும் மறக்க இயலவில்லை. இக்கட்டடம் தன் முக்கியத்துவத்தை இழந்து, பழுதுபட்டிருந்த நிலையிலும் நாங்கள் அதன் முக்கியத்துவத்தை மறக்கவில்லை. புதிய துணைவேந்தர் நியமிக்கப்படும்போது அவரை வரவேற்கும் கூட்டம், பணிஓய்வு பெறும் அதிகாரிகளுக்கு வழியனுப்பு நிகழ்ச்சிகள் ஆகியவற்றை நாங்கள் இங்கேதான் நடத்துவது வழக்கம்.

ஆட்சிப்பேரவை மன்றக் கட்டடம் இப்போது தன்னுடைய மூலமுதல் எழிலை மீண்டும் பெற்றுவிட்டது. அந்தப் பொற்காலம் மீண்டும் நம்முடன் என்கிற நினைவே மகிழ்ச்சி தருகிறது. இனி அந்த நாள் நினைவுகளில் வாழவேண்டிய அவசியம் இல்லை. இந்த மறுசீரமைப்புப் பணியில் தன் சோர்வில்லாத முயற்சிகளை இணைத்துச் செயலாற்றிய துணைவேந்தர் எஸ்.பி. தியாகராஜன் அவர்களுக்கு, பல்கலைக்கழக ஊழியர்கள் சார்பிலும் என் சார்பிலும் நன்றி பாராட்ட நான் கடமைப்பட்டவன்.

* * *

இந்தக் கட்டடத்தின் மறு சீரமைப்புப் பணியில் உதவி செய்யக் கிடைத்த வாய்ப்புக்குத் தான் மகிழ என்ன காரணம் என்று விளக்குகிறார். கேரளா, நிலாம்பூரைச் சேர்ந்த் அருவக்கோட்டில் கும்பம் ம்யூரல்ஸ் நிறுவனத்தின் கே.பி. ஜினான்:

“சுடுமண் சிற்பங்கள் உள்ளிட்ட கலைப்பொருட்கள் மிகப் பழங்காலத்திலிருந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் கட்டடக் கலையில் - கட்டுமானப் பணிகளில் நவீன முறைகள் பெரிய அளவில் நுழைந்திருக்கும் நிலையில் - பிளாஸ்டிக், ஃகு போன்றவை பழைமையின் இடத்தைப் பிடித்துக் கொண்டுவிட்டதால் அவக்கோட்டைச்சேர்ந்த மண்பானைக்கலைஞர்கள் எதிர்காலம் இன்றி அவதிப்பட்டார்கள். அப்படிப்பட்ட கலைஞர்கள் சிலர் ஒன்று சேர்ந்து 1992இல் தொடங்கிய அமைப்புதான் ‘கும்பம்’. எந்தக் கலையிலிருந்து தாங்கள் தற்போது அன்னியப்படுத்தப்பட்டிருக்கிறார்களோ அதே கலையின் மூலமே தங்களின் மறுவாழ்வை உறுதிசெய்து கொள்ளும் முயற்சியின் விளைவே கும்பம். சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிப்பேரவை மன்றக் கட்டத்தின் மறுசிரமைப்புப் பணிகளில் பங்களித்ததன் மூலம் மண்ணைக் கொண்டு சுற்றுச்சூழலின் நண்பனாகத் தயாரிக்கப்படும் அழகிய கலைப் பொருட்களை தாண்டியும் நாங்கள் சென்று விட்டோம். இந்தக் கட்டட மறுசீரமைப்பு பணி ‘கும்பம்’ அமைப்பின் தொப்பியில் செருகப்பட்ட ஓர் இறகு.

ஆட்சிப் பேரவை மன்றக் கட்டட மறுசீரமைப்புப் பணிகளில் கலைப் படைப்புகள் பிரிவில் எங்கள் பங்களிப்பு அமைந்தது. ஏற்கெனவே இருந்த சிற்பங்களைப் பல்வேறு கோணங்களில் டிஜிட்டல்

முறையில் புகைப்படங்கள் எடுத்து ஆராய்ந்தது உள்ளிட்ட நவீனங்களிலும் நாங்கள் ஈடுபட்டோம். அந்தக் கலைப் படைப்புகளின் அளவுகள் ஒன்றுக்கொன்று வேறுபட்டிருந்தன. ஒவ்வொன்றையும் பூரண நிலைக்குக் கொண்டுவர, ஒவ்வொரு சிற்பத்தையும், சிலையையும், கலைப்படைப்புகளையும் சுமார் பத்து முறைகள் செய்து பார்க்க வேண்டியிருந்தது. மண்ணைச் சுட்டபோது ஏற்பட்ட உடைகல் பெரும் பிரச்சினையாக இருந்தன. ஏழு கலைஞர்கள் ஒரு மாத காலம் உழைத்து படைப்புகளை இறுதி நிலைக்குக் கொண்டு வந்தார்கள். இந்தப் பாரம்பரியக் கட்டட மறுசீரமைப்புப் பணியில் எங்களால் இயன்ற அளவு சிறப்பாகப் பணியாற்றிய திருப்தி இருக்கிறது.”

* * *

மறுசீரமைப்புப் பணிகளைக் கண்காணித்த சிவகுமார் நினைவு கூர்கிறார் “இது எனக்குப் புது அனுபவம். மிக வித்தியாசமான பணி. வெறும் சிமெண்ட்டைப் பயன்படுத்தி செய்துவிட்டுப் போகும் சாதாரணக் கட்டடப் பணியல்ல இது. 2004இல் தொடங்கிய இப்பணியில் சுமார் 250 தொழிலாளாகள் கலந்து கொண்டு வெயில், மழை பாராது உழைத்தார்கள். நாங்கள் நிறையக் கற்றுக் கொண்டோம். செயற்கை வேதியியல் பொருட்களைப் பயன்படுத்தாமல் இயற்கையின் வழியே வண்ணங்களைத் தயாரித்தோம். இந்த வண்ணங்களைப் பெற கற்களைக் கையாலேயே அரைக்க வேண்டியிருந்தது. இப்பணியில் பங்கேற்றது எனக்கு மகிழ்ச்சி, பெருமை.

* * *

தலைமைக் கொல்லத்தக்காரர் பரமசிவம்: “நான் அனுபவத்தின் வாயிலாகத் தொழில் கற்றவன். என் தந்தை அவர் காலத்தில் கொல்லத்துக்காரராக இருந்தவர். அவருடன் சென்று இந்தத் தொழிலுக்குப் பழக்கமானேன். இந்த ஆட்சிப் பேரவை மன்றக் கட்டட மறு சீரமைப்புப் பணியின் பிரமாண்டத்தையும், சிக்கல்களையும் உணர்ந்தபோது நான் அதிர்ச்சியடைந்தது உண்மை. இந்தப் பணியை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியுமா என்ற கேள்வியும் எழுந்தது. ஆனால் அது எனக்கு ஒரு பெரிய சவாலாக அமைந்தது. கட்டுமானப் பொருட்கள் எளிதில் கிடைக்கவில்லை. சாதாரணக் கட்டடங்களில் பயன்படுத்தப்படும் பொருட்கள் அல்ல அவை. உதாரணமாக முட்டை, தயிர் கலவையை நாங்கள் சாதாரணமான மண்வாரியால் அள்ளி சுவர்களில் அடித்தபோது அது ஒட்டாமல் ஆங்காங்கே கீழே கொட்டியது. மேலும் சுவர்களில் ஒரு விதமான கறுப்புக்கோடுகள் தெரிந்தன. என் தந்தை இதுபோன்றகலவைகளுக்காகப் பயன்படுத்திய ஒரு குறிப்பிட்ட வகைக் கல் நினைவுக்கு வந்தது. அதை அவர் பாதுகாப்பாக வைத்திருந்தார். எனவே நான் அந்தக் கல்லைக் கொண்டு வந்து பயன்படுத்தியபோது சுவர்களில் அடித்த கலவை அப்படியே ஒட்டிக் கொண்டது! இது போல பல அனுபவங்கள். எல்லாமே நுணுக்கமானவை. ‘இந்தப் பணியை நான் செய்ய வேண்டும்’ என்று எனக்கு விதிக்கப்பட்டதாகவே நான் நினைக்கிறேன். எனவே இந்தப் பணியை நான் நேசித்தேன். மறக்க முடியாத அனுபவம். அந்த அனுபவத்தை நான் என்றும் நினைவில் போற்றுவேன்.

* * *

சித்ரா (உதவி கொல்லத்துக்காரர்): “சுண்ணாம்புக் கலவைப் பூச்சின் வித்தியாசம் எங்களைப் பரவசப்பட வைத்தது. இந்தக் கட்டடத்தில் பயன்படுத்தப் பட்டிருந்த பழைய தொழில் நுட்பம் பற்றி நாங்கள் சிந்திக்க வேண்டியதாயிற்று. இது போன்ற பணியை ஏற்கெனவே செய்து அனுபவம் பெற்றிருந்த பர மூத்த கட்டடப் பணிக் கலைஞர்களுடன் நாங்கள் ஆலோசனை கலந்தோம். கிட்டத்தட்ட ஆறுமாதகாலம் முயன்று பார்த்து, பல முறை தோற்று, தோல்வியில் பாடம் கற்ற பின்பே பணியைத் தொடங்கினோம். நான் நிறையக் கற்றுக் கொண்டேன். எங்கள் கூட்டு முயற்சியின் விளைவைக் காணும்போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.”

# நன்கொடையாளர்கள்

பின்வரும் நன்கொடையாளர்களுக்கு சென்னைப் பல்கலைக் கழகம் தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. ரூபாய் ஒரு லட்சத்திற்கு குறைவான நன்கொடை வழங்கிய அனைவரின் பெயரையும் இச்சிறிய நூலில் சேர்க்க இயலாத காரணத்தினால் அந்த நலம் விரும்பிகள் அனைவருக்கும் இப்பலைக்கழகம் கடமைப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | சென்னை வெலிங்டன் கார்ப்ரேட் நிறுவனம், சென்னை | 50,00,000 |
| 2. | ஹீண்டாய் இந்திய மோட்டார் நிறுவனம், காஞ்சிபூரம் மாவட்டம் | 35,00,000 |
| 3. | பிரேக்ஸ் இந்தியா லிமிடெட், சென்னை | 12,00,000 |
| 4. | சுந்தரம் நிதி நிறுவனம் லிமிடெட், சென்னை | 12,00,000 |
| 5. | அசோக் லேலைண்ட் லிமிடெட், சென்னை | 10,00,000 |
| 6. | சென்னை பெட்ரோலிய கழகம், சென்னை | 10,00,000 |
| 7. | காக்னஸன்ட் நிறுவனம், சென்னை | 10,00,000 |
| 8. | நிதி நிர்வாக மையம், அமெரிக்க தூதரகம் | 10,00,000 |
| 9. | ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி லிமிடெட், மும்பை | 10,00,000 |
| 10. | லக்ஷ்மி மெஷீன்ஸ் ஒர்க்ஸ், கோவை | 10,00,000 |
| 11. | பாரத் ஸ்டெட் வங்கி, சென்னை | 10,00,000 |
| 12. | டாடா கன்ஸல்டன்ஸி சர்வீஸ், மும்பை | 10,00,000 |
| 13. | வீல்ஸ் இந்தியா லிமிடெட், சென்னை | 8,00,000 |
| 14. | கார்போரண்டம் யூனிவர்சல் லிமிடெட், சென்னை | 7,50,000 |
| 15. | சோழமண்டலம் முதலீடு மற்றும் நிதி நிறுவனம், சென்னை | 7,50,000 |
| 16. | ஈ.ஐ.டி. பாரி இந்தியா லிமிடெட், சென்னை | 7,50,000 |
| 17. | டியூப் முதலீடு இந்திய நிறுவனம், சென்னை | 7,50,000 |
| 18. | இந்தியன் வங்கி | 6,00,000 |
| 19. | காக்னஸடன் தொழில்நுட்ப நிறுவனம் | 5,00,000 |
| 20. | ஜீ.எம்.ஆர் பவர் மின் கழகம், பெஞ்களூர் | 5,00,000 |
| 21. | இந்தியா மோட்டார் உதிரி பாகங்கள் லிமிடெட், சென்னை | 5,00,000 |
| 22. | செரம் கல்வி நிறுவனம், பூனா | 5,00,000 |
| 23. | சக்திகுழமம், சென்னை | 5,00,000 |
| 24. | சிம்சன் குழமம், சென்னை | 5,00,000 |
| 25. | எஸ்.ஆர்.எப். லிமிடெட். குர்கான், ஹரியானா | 5,00,000 |
| 26. | தமிழ்நாடு மின் நிதி மற்றும் கட்டமைப்பு மேம்பாட்டு கழகம், சென்னை | 5,00,000 |
| 27. | தி இந்து, சென்னை | 5,00,000 |
| 28. | தர்போ எனர்ஜி நிறுவனம், சென்னை | 5,00,000 |
| 29. | எத்திராஜ் மகளிர் கல்லூரி, சென்னை | 4,00,000 |
| 30. | அமெரிக்க வங்கி | 3,47,803 |
| 31. | மெட்ராஸ் சீமெண்ட்ஸ் நிறுவனம், சென்னை | 3,00,000 |
| 32. | மலையாள மனோரமா, கோட்டயம், கேரளா | 3,00,000 |
| 33. | நெய்வேலி நிலக்கரி கழகம், நெய்வேலி | 3,00,000 |
| 34. | சுந்தரம் பாஸ்டனர்ஸ் நிறுவனம், சென்னை | 3,00,000 |
| 35. | வேல் டெக் கல்வி நிலைய குழமம், சென்னை | 3,00,000 |
| 36. | இந்திய தேசிய கலை மற்றும் கலாச்சார பாரம்பரிய அறக்கட்டளை, தமிழ்நாடு பிரிவு, சென்னை | 2,83,089 |
| 37. | டி.ஜி. வைஷ்ணவ் கல்லூரி, சென்னை | 2,51,000 |
| 38. | ரானே பீரேக் லைனிங் நிறுவனம், சென்னை | 2,50,000 |

| | |
|---|---|
| 39. ரானே இன்ஜின் வால்வ்ஸ் நிறுவனம், சென்னை | 2,50,000 |
| 40. பல்கலைக்கழக மானியக் குழு, புதுடில்லி | 2,50,000 |
| 41. தமிழ்நாடு பவுண்டேஷன், தமிழ்நாடு பிரிவு, சென்னை | 2,25,400 |
| 42. டாக்ஸ் நெட்வொர்க் நிறுவனம், சென்னை | 2,00,000 |
| 43. லஷ்மி ஜெனரல் நிதி நிறுவனம், சென்னை | 2,00,000 |
| 44. லயோலா கல்லூரி, சென்னை | 2,00,000 |
| 45. நிப்போ பாட்டரிஸ், சென்னை | 2,00,000 |
| 46. வள்ளியம்மாள் மகளிர் கல்லூரி, சென்னை | 2,00,000 |
| 47. இந்துஸ்தான் பொறியியல் கல்லூரி, சென்னை | 1,99,785 |
| 48. ஜெயா கல்வி அறக்கட்டளை | 1,50,000 |
| 49. தென் இந்தியா இஸ்லாமிய கல்வி சங்கம் | 1,50,000 |
| 50. தங்கவேலு பொறியியல் கல்லூரி, சென்னை | 1,01,000 |
| 51. வேல் பொறியியல் கல்லூரி, சென்னை | 1,01,000 |
| 52. பக்தவச்சலம் நினைவு மகளிர் கல்லூரி, சென்னை | 1,00,700 |
| 53. அகில இந்திய இஸ்லாமிய பவுண்டெஷன், சென்னை | 1,00,000 |
| 54. எ.எம்.எம். பவுண்டேஷன்ஸ், சென்னை | 1,00,000 |
| 55. அருனா பொறியியல் கல்லூரி, திருவண்ணாமலை | 1,00,000 |
| 56. ஆசான் மெமோரியல் கலை மற்றும் அறிவியல் கல்லூரி | 1,00,000 |
| 57. கிளாவளா குன்னன் செட்டி அறக்கட்டளை, சென்னை | 1,00,000 |
| 58. கனரா வங்கி (விளம்பரம் மற்றும் மக்கள் தொடர்பு பிரிவு, பெங்களூர் | 1,00,000 |
| 59. டி.பி. ஜெயின் கல்லூரி, சென்னை | 1,00,000 |
| 60. இந்துஸ்தான் பயிற்சி மையம், வைஸ்யா கல்லூரி, சேலம் | 1,00,000 |
| 61. கிருபானந்த வாரியார் கல்லூரி, சேலம் | 1,00,000 |
| 62. டிவிஎஸ் லூகாஸ், சென்னை | 1,00,000 |
| 63. மாக் அறக்கட்டளை | 1,00,000 |
| 64. மெட்ராஸ் இன்ஜினிரிங் (பி) லிமிடெட், சென்னை | 1,00,000 |
| 65. எம்.சி.சி. பொது அறக்கட்டளை, சென்னை | 1,00,000 |
| 66. மிஸ்ரிமால் என்.எம் ஜெயின் பொறியியல் கல்லூரி, சென்னை | 1,00,000 |
| 67. எம்.என்.எம் பொறியியல் கல்லூரி, சென்னை | 1,00,000 |
| 68. என்.எஸ். ராகவாச்சாரி, சென்னை | 1,00,000 |
| 69. போலாரீஸ் பவர் பிரிசிஸன், சென்னை | 1,00,000 |
| 70. போலாரீஸ், சென்னை | 1,00,000 |
| 71. பஞ்சாப் அசொசியோஸ், சென்னை | 1,00,000 |
| 72. தூய இருதய கல்லூரி, திருப்பத்தூர் | 1,00,000 |
| 73. சத்திய பாமா பொறியியல் கல்லூரி, சென்னை | 1,00,000 |
| 74. எஸ்.டி.என். பி. வைஷ்ணவ மகளிர் கல்லூரி, சென்னை | 1,00,000 |
| 75. எஸ்.ஐ.இ.டி. கல்லூரி, சென்னை | 1,00,000 |
| 76. ஸ்ரீராம் கல்வி அறக்கட்டளை, சென்னை | 1,00,000 |
| 77. ஸ்ரீ சௌடேஸ்வரி மகாஜன அறக்கட்டளை, சேலம் | 1,00,000 |
| 78. ஸ்ரீ வெங்கடெஸ்வரா கல்வி மற்றும் சுகாதார அறக்கட்டளை | 1,00,000 |
| 79. டி.வி.எஸ் மோட்டார் கம்பெனி லிமிடெட், சென்னை | 1,00,000 |
| 80. வள்ளியம்மாள் சொசைட்டி, சென்னை | 1,00,000 |
| 81. வைஸியா கல்லூரி, சேலம் | 1,00,000 |
| 82. மகளிர் கிருத்துவ கல்லூரி, சென்னை | 1,00,000 |

# புகைப்பட விவரங்கள்

(புகைப்படங்கள் மற்றும் அவற்றுக்கு உரியவர்களின் பெயர்கள் அடைப்புகுறியினுள் போடப்பட்டுள்ளது. மற்றவை சென்னைப் பல்கலைக்கழகம், பல்கலைக்கழகத்தின் வெவ்வேறு துறைகள் மற்றும் பழைய வெளியீடுகளிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.)


முன் மற்றும் பின் அட்டைகள் (எல் அண்ட் டி - ஈ.ஸி.ஸி. பிரிவு போட்டோ யூனிட்)

ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்தின் முன்னாள் தோற்றம் (1905) (வின்டேஜ் விக்னெட்ஸ்) 6

மாநிலக் கல்லூரி (வின்டேஜ் விக்னெட்ஸ்) 7

சிஷோம், ராபர்ட் ∴பெல்லோஸ் (குருபாலா, ஜி.) 8

சேப்பாக்கம் மாளிகை (வின்டேஜ் விக்னெட்ஸ்) 9

கடற்கரையிலிருந்து ஆட்சி மன்றப் பேரவைக் கட்டடம் (வின்டேஜ் விக்னெட்ஸ்) 11

முன்னால் இருந்த சாலை மண்தரையாக இருந்தபோது 1905இல் எடுக்கப்பட்ட ஆட்சி மன்றப் பேரவைக் கட்டடம் (வின்டேஜ் விக்னெட்ஸ்) 12

1960களில் ஆட்சி மன்றப் பேரவைக் கட்டடம் (தி இந்து) 13

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆட்சி மன்றப் பேரவைக் கட்டடம் (வின்டேஜ் விக்னெட்ஸ்) 14

பக்கிங்காம் கால்வாயிலிருந்து ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்தின் தோற்றம் (வின்டேஜ் விக்னெட்ஸ்) 15

நிலவறை மற்றும் நுழைவாயிலைத் தாங்கி நிற்கும் ஸ்தம்பங்கள் (உஷா கிரிஸ் - 2 புகைப்படங்கள்) 16

கிழக்குப்பகுதியில் உள்ள ஆறு பெரிய தூண்கள் மற்றும் தூண்களுக்கிடையேயான வளைவுகள் (தி இந்து) 17

வடக்குப்பகுதியில் மறுசீரமைப்புபணியின் போது மரப்படிக்கட்டுகள் (இன்டாக்) 18

மறு சீரமைப்பிற்குப் பின் மரப்படிக்கட்டுகளின் அழகிய தோற்றம் (எல் அண்ட் டி - ஈ.ஸி.ஸி. பிரிவு போட்டோ யூனிட்) 19

வடக்குப் பகுதியில் முதல் தளத்தில் மறுசீரமைக்கப்பட்ட வெளிப்புற சுவரின் தோற்றம் (எல் அண்ட் டி - ஈ.ஸி.ஸி. பிரிவு போட்டோ யூனிட்) 20

வடக்குப் பகுதியில் துணைவேந்தர் அறையில் மறுசீரமைக்கப் பட்ட கித்தான் கூரை (எல் அண்ட் டி - ஈ.ஸி.ஸி. பிரிவு போட்டோ யூனிட்) 20

தெற்குப்பகுதியில் மறுசீரமைக்கப்பட்ட மர வேலைப் பாடுகள் மற்றும் மேடை (எல் அண்ட் டி - ஈ.ஸி.ஸி. பிரிவு போட்டோ யூனிட்) 21

கிரேட் ஹாலின் தெற்குக் கோடியில் மேடையின் பின்புறம் உள்ள சிறிய ஹால் (எல் அண்ட் டி - ஈ.ஸி.ஸி. பிரிவு போட்டோ யூனிட்) 22

தென் பகுதியின் முதல் தளத்திலுள்ள மீட்டிங் ஹாலின் மேடையின் மீதுள்ள எழில்மிகு அலங்காரங்கள் (எல் அண்ட் டி - ஈ.ஸி.ஸி. பிரிவு போட்டோ யூனிட்) 23

விக்டோரியா மகாராணியின் உருவச் சிலை (உஷா கிரிஸ்) 24

ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்தில் நடைபெற்ற மியூசிக் அகாடமியின் 'சதஸ்' நிகழ்ச்சி (மியூசிக் அகாடமி) 26

இரண்டாம் எலிசபெத் மகாராணியின் வருகை (சைமன் பெல்டன்) 30-31

புறக்கணிக்கப்பட்ட நிலையில் இருந்த ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடம் (இன்டாக்) 37

மறுசீரமைப்பிற்கு முன் ஆட்சிப் பேரவை மன்றக் கட்டடத்தின் வெளிப்புறத் தோற்றம் (இன்டாக்) 38

மறுசீரமைப்பிற்கு முன் கிரேட் ஹால் (இன்டாக்) 39

வளைவுகளும் தூபிகளும் (உஷா கிரிஸ் - 2 புகைப்படங்கள்) 41

ஆட்சிப் பேரவை மன்றத்தின் தூண்களில் காணப்படும் இஸ்லாமிய அம்சங்கள் (உஷா கிரிஸ்) 42

கல்தூண்களில் உருவப்படங்களிலும் காணப்படும் ஹிந்து செல்வாக்கு (உஷா கிரிஸ் - 2 புகைப்படங்கள்) 43

உருவப்படங்களில் காணப்படும் ஹிந்து அம்சங்கள் (உஷா கிரிஸ் - 3 புகைப்படங்கள்) 44

பழுதடைந்துவிட்ட கல் அம்சம் ஒன்றை மீண்டும் நிறுவுதல் (உஷா கிரிஸ்) 44

கூரை வேலைப்பாடுகள் மறுசீரமைப்பிற்கு முன்பும் பின்பும் (இன்டாக் - 2 புகைப்படங்கள்) 46

ஒடுகளும் மேற்பூச்சு பூசப்பட்ட இரும்பு சாலைகளை புதுப்பித்தல் (உஷா கிரிஸ்- 3 புகைப்படங்கள்) 47

மறுசீரமைப்புக்கு முன் கிரேட் ஹால் (ஏ.கே. சுபேர், இன்டாக்) 48

மறுசீரமைப்புக்கு பின் கிரேட் ஹால் (விஜயன், ஜி., இன்டாக்) 49

புதுப்பிக்கப்பட்ட மேற்கூரை (உஷா கிரிஸ்) 50

புதுப்பிக்கப்பட்ட வண்ண கூரைப்பகுதியின் ஓர் அருகாமைத் தோற்றம் (உஷா கிரிஸ்) 51

கிரேக்கப் பாணியில் அமைந்த ஓவியம் (இன்டாக்) 52

பூச்சு வேலை நடைப்பெறுகிறது (உஷா கிரிஸ்) 53

பூச்சு வேலை மறுசீரமைப்பிற்கு முன்பு (ஏ.கே. சுபேர், இன்டாக்) 54

மறுசீரமைப்பிற்கு பிறகு பூச்சு வேலை (விஜயன், ஜி, இன்டாக்) 54

கலவையை பக்குவப்படுத்துதல் (உஷா கிரிஸ்) 55

சாம்பிள் செய்தல் (விஜயன், ஜி., இன்டாக்) 55

முட்டை கலந்த இறுதிப் பூச்சுக் கலவை (உஷா கிரிஸ்) 57

ஸ்க்ரா∴பிடோ அலங்காரம் (உஷா கிரிஸ்) 58

மறுசீரமைத்த ஸ்க்ரா∴பிடோ (ஏ.கே. சுபேர், 2 புகைப்படங்கள்) 59

மறுசீரமைத்த வண்ணங்கள் பூசப்பட்ட அலங்கார சுவர்கள் (உஷா கிரிஸ்) 59

மறுசீரமைப்புக்கு முன்பும் பின்பும் கதவு வழிகளைச் சுற்றிலும் உள்ள பல்வேறு வடிவ அலங்காரங்கள் (உஷா கிரிஸ் - 4 புகைப்படங்கள்) 60

மறுசீரமைப்புக்குப் பின்னர் கதவு வழிகளைச் சுற்றிலும் அலங்கார வேலைப்பாடுகள் (எல் அண்ட் டி - ஈ.ஸி.ஸி. பிரிவு போட்டோ யூனிட்) 61

வடக்குப் புறத்தை சுற்றியுள்ள ஸ்க்ரா∴பிடோ வேலைப்பாடுகள் (உஷா கிரிஸ்) 61

மறுசீரமைப்பிற்கு முன்பு கிரேட் ஹாலின் வடக்குப்புற சுவரின் ஓர் தோற்றம் (ஏ.கே. சுபேர், இன்டாக்) 62

பிரதான வளைவுக்கு வலது புறம் ஒரு பகுதியின் அலங்கார பூச்சின் நெருக்கமான தோற்றம் (விஜயன், ஜி., இன்டாக்) 62

மறுசீரமைப்பிற்கு பின் கிரேட் ஹாலின் வடக்குப்புற சுவரின் ஓர் தோற்றம் (விஜயன், ஜி., இன்டாக்) 63

மேடையின் மேல் பகுதியில் முன்பிருந்த மரத்தினால் ஆன பின்னல் சுட்டிகள் மறுசீரமைப்பிற்கு முன்பும் பின்பும் (உஷா கிரிஸ் - 3 புகைப்படங்கள்) 64

சீரமைப்பு பணியின் போது மர வேலைப்பாடு (உஷா கிரிஸ்) 65

கதவு செப்பிடும் பணியில் ஈடுபட்டுள்ள கலைஞர்கள் (உஷா கிரிஸ் - 3 புகைப்படங்கள்) 66-67

அழகிய மாடிப்படி வழியில் உள்ள மரக் கைப்பிடிச் சுவர்த் தூண்கள், வடபுறச் சுவர் ஒன்றில் பூச்சில் பிரதி எடுக்கப்பட்டன (கிருஷ்ணன், பி.டி., இன்டாக்) 68

மறுசீரமைப்புக்கு முன்னால் பூச்சு அலங்காரம் எப்படி இருந்தது என்பதைக் காட்டும் படம் (இன்டாக்) 68

மரவேலைப் பாடுகள் மறு சீரமைப்பு பணியின்முன்பும், பணியின் போதும் (உஷா கிரிஸ் - 4 புகைப்படங்கள்) 69

செங்கல் வேலைப்பாடுகளின் மறுசீரமைப்புப் பணி நடைபெறுகிறது (உஷா கிரிஸ் - 2 புகைப்படங்கள்) 70

செங்கல் வேலைப்பாடுகளின் மறுசீரமைப்புப் பணி முடிந்த ஒரு பகுதி (எல் அண்ட் டி - ஈ.ஸி.ஸி. பிரிவு போட்டோ யூனிட்) 70

சுடுமண் சிற்பங்கள் மறுசீரமைப்புப் பணி நடைப்பெறுகிறது (உஷா கிரிஸ் - 2 புகைப்படங்கள்) 71

மறுசீரமைப்பு செய்ய வேண்டிய வார்ப்பிரும்பு வேலியின் தோற்றம் (உஷா கிரிஸ்) 71

மறுசீரமைப்பு பணியின் போது வார்ப்பிரும்பு வேலியின் தோற்றம் (உஷா கிரிஸ்) 72

உயரமான சாளரங்களின் பின்னணியில் கிழக்கு பகுதியில் அலங்கார வளைவுகள் கொண்ட கட்டடத்தின் முன்பகுதி (எல் அண்ட் டி - ஈ.ஸி.ஸி. பிரிவு போட்டோ யூனிட்) 73

கிரேட் ஹாலுக்கு மேலே கண்ணாடித் துண்டுகளை இணைத்து உருவாக்கப்பட்ட வண்ணச் சாளரங்கள் (உஷா கிரிஸ் - 2 புகைப்படங்கள்) 74, 75

முதல் மாடியில் உள்ள கவர்ச்சிகரமான வண்ணம் பூசப்பட்ட சாளரங்கள் (உஷா கிரிஸ்) 76

வண்ணக் கண்ணாடி சாளரங்கள் (உஷா கிரிஸ் - 2 புகைப்படங்கள்) 77

கிரேட் ஹாலிலிருந்து போகும் மாடிப்படி வழியின் கீழே அமைக்கப் பட்டுள்ள காகித அட்டைகளில் ஆன பொய்க்கூரை (எல் அண்ட் டி - ஈ.ஸி.ஸி. பிரிவு போட்டோ யூனிட் - 2 புகைப்படங்கள்) 78

சுத்தப்படுத்தப்பட்ட பின்பு காகிதப் பிரிவுகளின் தோற்றம் (உஷா கிரிஸ்) 79

மின்டன் ஓடுகள் வேயப்பட்ட தரை மறு சீரமைப்பு பணியின் முன்பும் பின்பும் (உஷா கிரிஸ் - 2 புகைப்படங்கள்) 80

மேற்கூரையின் மறு சீரமைப்புப் பணி நடைபெறுகிறது (எல் அண்ட் டி - ஈ.ஸி.ஸி. பிரிவு போட்டோ யூனிட் - 2 புகைப்படங்கள்) 81

மறு சீரமைப்புப் பணியின் முன்பு கிரேட் ஹாலின் தோற்றம் (கிருஷ்ணன், பி.டி., இன்டாக்) 82

மறு சீரமைப்புப் பணியின் பின்னர் கிரேட் ஹாலின் தோற்றம் (விஜயன், ஜி., இன்டாக்) 83

கிரேட் ஹாலின் வடக்கு பகுதியில் உள்ள நுழைவாயில் (எல் அண்ட் டி - ஈ.ஸி.ஸி. பிரிவு போட்டோ யூனிட்) 87

பராமரிப்பு பணிகள் முடிந்த பின்னர் கோபுரத்தின் எழில் மிகு தோற்றம் (பாலாஜி. டி.) 88

மறுசீரமைப்பில் எல் அண்ட் டி நிறுவனத்தின் பணிகள் முழு மூச்சுடன் நடப்பதைக் காணலாம் (எல் அண்ட் டி - ஈ.ஸி.ஸி. பிரிவு போட்டோ யூனிட்) 92



